
THE SWADESAMITRAN WEEKLY

# சுதேசமித்திரன்

361



ஏப்ரல் 30, 1960

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - MAY 1950
MADRAS




W. WOODWARD LTD, LONDON, ENGLAND.

# சுதேசமித்திரன் வாரப்பதிப்பு


## பொருளடக்கம்



| | | பக்கம் |
|---|---|---|
| பூமாட்டுக்காரன் | ஜெக சிற்பியன் | 5 |
| மலர்வண்டும் மோகினியும் | ரா. ஸ்ரீ. | 9 |
| புகைப்படம் | விந்தியா | 10 |
| நாடகக் கலை | சாண்டில்யன் | 15 |
| வாழ்க்கைச்சுழல் (தொடர்கதை) | | 20 |
| கவிதைக் காதலி | க. மு. சுந்தரம் | 24 |
| ஸங்கீத பாரிஜாதம் | பண்டித கிருஷ்ணமாச்சார்யா | 25 |
| பண்டிகைகள் | சுபஸ்ரீ | 27 |
| ஹிந்திப் பாடங்கள் | பண்டித்ஜீ | 30 |
| நவரஸ நந்தவனம் | கனல் | 35 |
| அவள் விருப்பம் | கேயெஸ் | 38 |
| தேர்த்தட்டு வார்த்தை | வாரன் | 43 |
| பழங்கள் | நாராயணய்யா | 45 |
| சிறுவர் பகுதி | எஸ். ரங்கராஜன் | 47 |
| மண் வாசி | எம். எஸ். சுப்ரமண்ய ஐயர் | 52 |
| வீரன் வீருசாமி | ப. ரெ. ரா. | 54 |
| சுயம்வரம் | சூரன் | 57 |
| விலைவாசி | | 61 |
| உடல் நலப் பயிற்சி | ஹடயோகி லக்ஷ்மண சாண்டோ | 62 |




தமிழ்நாடு ... சென்னை இந்தியா 600 0..


"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன அனைத்தும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.





மின்னல் இடி விபத்துக்காளான விமானமிது. பாரிஸ் சென்ற இவ்விமானத்தில் 27 பிரயாணிகளிருந்தனர். மேற்படி விபத்தால் விமானத்தின் பகுதி சிதறியிருப்பதைப் பாருங்கள். காப்டன் ஹார்வி என்பவர் என்ஜினை சுழற்றி திருப்பிப் பறந்ததால் பிரயாணிகள் உயிர்தப்பினர்.



" டிஸ்கவரி 11. " என்ற இக்கப்பல் அண்டார்டிக் மகா சமுத்திரப் பிரயாணத்துக்காகப் புறப்படுகையில் எடுத்த படம்.

வாழிய செந்தமிழ்

# சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்


Vol XXI] விக்ருதிஸு சித்திரைமீ 18உ ★ 1950–ஸு ஏப்ரல்மீ 30உ No. 13

## சமரஸ மார்க்கம்

கிழக்கு வங்க மைனாரிட்டியின் துன்பம் கண்டு இந்நாட்டினர், குறிப்பாக வங்க மக்கள் மிக்க ஆத்திரமடைந்திருப்பது இயற்கையே. எனினும் ஆத்திரத்தில், முக்கியமாக அந்த மைனாரிட்டியின் துன்பத்தைத் துடைப்பதற்கான வழி தேடுவதில் நமது நிதானத்தை இழந்துவிடக்கூடாது. சர்தார் படேல் ஒரு வாரகாலம் வங்க நிலைமையை நேரில் ஆராய்ந்த பின், அமமாகாண மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளின் கருத்து அதுவே. பாகிஸ்தானிலுள்ள மைனாரிட்டி நலத்தைக் காப்பதில் அவரைவிட அதிக அக்கரைகொண்டவர் யாருமிருக்கமுடியாது. எனினும் அவரே தற்போது ஜவாஹர்-லியாகத் அலி ஒப்பந்தத்தை முழுமூச்சுடன் ஆதரித்து அதை நிறைவேற்றி வைக்குமாறு நம் மக்களுக்கு விண்ணப்பித்துக்கொள்வதை மேற்கு வங்கத்தினர் உன்னிப் பார்க்கவேண்டும். ஒப்பந்தத்தை சிலர் துருவித் துருவி ஆராய்ந்து குற்றம் கண்டுபிடித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் துன்புற்ற மக்களுக்கு நம்பிக்கையும், நிவாரணமும் அளிக்க தற்போதைய நிலையில் இந்த ஒப்பந்தத்தைவிட வேறு சமாதான வழி ஏதேனும் உண்டா? பிரத்தியட்ச உணர்வுள்ள யாரும் இப்போது இப்பிரச்னையை அணுகவேண்டிய முறை இதுவே. இக்கேள்விக்கு ஒரே பதில்தானுண்டு. இந்நிலையில் இவ்வொப்பந்த வெற்றிக்கு நம்மாலானவரை அந்தரங்க சுத்தியுடன் முயன்று பார்ப்பதே நமது புனிதக் கடமை என்று சர்தார் பட்டேல் உணர்த்தியிருப்பது குறிப்பாக வங்க மக்களின் நெஞ்சில் உறைக்க வேண்டும்.

ஆனால் பாகிஸ்தான் அந்த ஒப்பந்தத்தை மதித்து நடக்குமா? ஒரு போதும் நடவாது என்று சிலர் சாதித்து வருகின்றனர். இதுவரை பாகிஸ்தான் அலட்சியம் செய்த பல ஒப்பந்தங்களை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தங்கள் சந்தேகத்துக்கு அவர்கள் கூறும் ஆதாரங்கள் எல்லாம் அனைவரும் அறிந்தவைதான். குறிப்பாக சர்தார் படேலையும், பண்டித ஜவாஹரையும் தலைவர்களாகக்கொண்ட சர்க்காருக்கு அவ்வுண்மைகள் மறந்துபோயிருக்கமுடியாது எனினும் அவர்கள் தற்போதைய ஒப்பந்தத்தை செய்துகொண்டதன் கருத்தென்ன? இதற்குக் காரணமான பிரச்னை சமாதான முறையில் தீர அணுவளவும் இடமுள்ளவரை அதை சோதிக்காமல் விடக்கூடாது என்ற எண்ணம் ஒருபுறமிருக்க; தவறிழைத்தவர்கள் என்றென்றும் அந்த வழியிலேயே சென்று கொண்டிருக்கவேண்டும் என்ற நியதி எதுவுமில்லை. உண்மையில் சர்தார் படேல் எடுத்துக்காட்டியதுபோல் திருந்துவதில் அக்கரை காட்டுவதுதான் சாதாரணமாக மனித சுபாவம். இதை எண்ணிப் பார்க்கும் யாருக்கும் பாகிஸ்தான் விஷயத்தில் இந்திய சர்க்கார் மறுபடி ஒப்பந்த முறையைக் கையாண்டு பார்ப்பது ஒரு கடுங் குற்றமாகத் தோற்றுவதற்கில்லை.

பாகிஸ்தான் ஒரு இஸ்லாமிய ராஜ்யமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கையில் அங்கு மைனாரிட்டி எவ்வாறு பயமின்றி வாழமுடியும் என்பது இவ்வொப்பந்தத்தை எதிர்ப்போரின் மற்றொரு ஆட்சேபனை. ஆனால் பாகிஸ்தானில் மைனாரிட்டிக்கு ஜனநாயக முறைக்கேற்ற உரிமைகள் எதுவும் மறுக்கப்படமாட்டாது என்று அந்நாட்டுப் பிரதம மந்திரி சமீபத்தில் திட்டமாக அறிவித்துள்ளார். அதன்படி மைனாரிட்டி தனக்குரிய உரிமைகள் அனைத்தையும் பெறுகிறதா என்று பார்க்குமுன், அவ்வதிகாரிகளின் உறுதிமொழியை நிராகரித்துவிடுவது முறையன்று. உண்மையில் பாகிஸ்தான் பிரதம மந்திரி இவ்வொப்பந்த விஷயத்தில் காட்டிய அந்தரங்க சுத்தி சர்தார் படேலின் மனத்தையே கவர்ந்த



தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேளன வருஷாந்தர மகாநாடு சென்ற வாரம் சனிக்கிழமையன்று சென்னை, "ராஜாஜி ஹாலி"ல் கூடியது; மகாநாட்டின் தலைவர் ஸ்ரீமான் என். ரகுநாதய்யர் நடுவிலும் அவருக்கு இடப்பக்கத்தில் உபசரணைக்கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் ஏ. ஜி. வெங்கடாச்சாரியாரும் வீற்றிருக்கிறார்கள். நடவடிக்கைகளை ஆரம்பித்துவைத்த ஸ்ரீமான் போத்தன் ஜோஸப் பேசிக்கொண்டிருக்கிறார்.

தென்றால், இது அவசியம் பரீட்சித்துப் பார்க்கவேண்டிய ஒரு ஒப்பந்தமே என்பதில் வங்க மக்களுக்குச் சிறிதும் சந்தேகம் இருக்கத் தேவையில்லை. மேலும் இது முன்னைய ஒப்பந்தங்களைப் போன்றதல்ல, இதன் பிரிவுகள் அமுலாவதை அவ்வப்போது மேற்பார்வை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடும் இதில் அடங்கியிருக்கிறது. ஒழுங்கீனங்கள் நடக்கையில் உடனுக்குடனே அவற்றை அகற்ற தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் இவ்வொப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. சொல்வதொன்றும், செயலொன்றுமாக இருந்து உண்மையை மறைப்பது இதற்கு முன்னைய ஒப்பந்தங்கள் விஷயத்தில் சாத்தியமாயிருந்திருக்கலாம். தற்போதைய ஒப்பந்தம் சம்பந்தப்பட்டவரை அத்தகைய தகிடுதத்தங்களுக்கு இடங் கிடையாது.

இவ்வொப்பந்தம் முறைப்படி நிறைவேறுமாயின் இருதரப்புகளிலும் மைனாரிட்டிகளுக்கு பூரண பந்தோபஸ்து ஏற்பட்டு அம்மக்கள் சிறிதும் அச்சமின்றி வாழக்கூடிய ஒரு நிலைமை விரைவிலே ஏற்படக்கூடும். ஒப்பந்தம் உருவானதற்குக் காரணமான இந்த நம்பிக்கை வீண்போகவில்லை. இதற்குள்ளேயே பாகிஸ்தானியரின் நடைமுறையில் திருப்திகரமான மாறுதல் ஏற்பட்டிருப்பதை சமீபத்தில்பண்டித ஜவாஹர் எடுத்துக்காட்டியுள்ளார். இதைத் தொடர்ந்து தற்போது வர்த்தகத் துறையிலும் இரு நாடுகளுக்கும் ஒரு உடன்படிக்கை கையெழுத்தாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதே முறையில் இருதரப்புகளிலும் சமரச மனோபாவம் வளருமாயின், எஞ்சியுள்ள பிரச்னைகளும் விரைவில் இனிது தீர்ந்து இருநாடுகளுக்கும் நிலையான நட்பு பெருகக்கூடும். அத்தகைய ஒரு வாழ்வுக்கு விதை விதைக்கக்கூடிய தற்போதைய ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைப்பதில் பரிபூரணமாக ஒத்துழைப்பதாலேயே அனைவருக்கும் க்ஷேமமுண்டென்பதை குறிப்பாக மேற்கு வங்கத்தினர் உணர்வதவசியம்!

17887)



# பூமாட்டுக்காரன்

'ஜெகசிற்பியன்'

காலை காப்பி சாப்பிட்டானதும் சற்றுநேரம் பேப்பர் படிக்கலாமென கூடத்தில் வந்து உட்கார்ந்தேன். எத்தனை அஷ்டாவதானம், தசாவதானம் கற்றிருந்தாலும் என் வீட்டு 'குட்டிப் படைகள்' செய்யும் அமர்க்களத்தைப் பார்த்தால் மிரண்டுதான் போக வேண்டியிருக்கும்! என்னால் பேப்பரிலுள்ள ஒரு வரியைக் கூடப் படிக்க முடியவில்லை. பேசாமல் எழுந்து வந்து, வராந்தாவில் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு பத்திரிகையைப் புரட்ட ஆரம்பித்தேன்.

"இன்று மத்தியானம் கல்கத்தாவில் சென்றுகொண்டிருந்த......"சட்டென அந்தப் பக்கத்தைப் புரட்டித் தள்ளினேன் காரணம், அந்த வாக்கியத்தின் முடிவு என்னவாயிருக்குமென்பது முன் கூட்டியே எனக்குத் தெரிந்திருந்தது!

அடுத்தப் பக்கம்...

"நேற்றிரவு ஆறுமாதக் குழந்தையொன்று தூங்கிக்கொண்டிருக்கும் போது, வெளியே போய்வந்த அதன் தாய் தெரியாமல் மிதித்துவிட்டதால், குழந்தை உடனே இறந்துவிட்டது"

'பத்திரிகைக்காரர்களுக்கு இதைத் தவிர வேறு செய்திகளே கிடைக்கவில்லை' என்று முனகிக்கொண்டே மறுபக்கத்தைப் புரட்டினேன்

திடீரென தெருவாசலிலிருந்து சிறுவர்களும், பெரியவர்களும் சேர்ந்து சிரிக்கும் சிரிப்பொலி எழுந்து வந்து என் செவிகளில் பாய்ந்தது! அதைத் தொடர்ந்து 'ஐயா சிறு பெண் ஏழை என்பால்'...என்ற பாட்டை நாகஸ்வரத்தில் கூட்டியெழுப்பும் ஒலியும், அதற்கேற்ற மேள வாசிப்பும் சேர்ந்து என் கவனத்தைக் கவர்ந்தன.

பத்திரிகையை மடித்து வைத்துவிட்டு எழுந்து வாசலுக்குப் போனேன் தெருவின் நடைபாதையில் வட்டமாக ஒரு கூட்டம் சூழ்ந்து நின்றுகொண்டிருந்தது. கூட்டத்தின் மத்தியில் பூமாட்டுக்காரன் ஒருவன் தன் மாடுகளுக்குக் 'கல்யாணம்' செய்து வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தான்! அவன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் அந்த வாயில்லா ஜீவன்கள் தலையாட்டி, அங்கு கூடியிருந்த ஜனங்களைப் பார்த்துக் கேலி செய்துகொண்டிருந்தன! எனக்கும் அந்த பூமாட்டுக்காரனின் வேடிக்கைகளைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை பிறந்துவிட்டது கூட்டத்தோடு கூட்டமாக நானும் போய் கலந்து நின்றுகொண்டேன். எனக்கு முன்னடியே என் செல்வங்கள்' அங்கே பிரசன்னமாகிவிட்டிருந்தன!

பூமாட்டுக்காரன் ஏதோ ஒரு பாட்டை வாசிக்க ஆரம்பித்தான். அவன் பக்கத்தில் அசல் கல்யாணப் பெண்ணைப்போல தலை குனிந்துநின்றுகொண்டிருந்தது ஒரு பசுமாடு! அதைப் பழைய கந்தல் புடவைகளால் அலங்கரித்திருந்தது. அதற்குப் பத்தடி தொலைவில், கல்லூரியில் படித்தவன், பெண் பார்க்க வந்திருப்பவனைப் போல மாப்பிள்ளை மிடுக்குடன் நின்றுகொண்டிருந்தது ஒரு காளை மாடு! அதைப் பார்த்து நாகஸ்வரம் வாசித்துக்கொண்டே, இடையிடையில் பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தான் பூமாட்டுக்காரன். அவன் கேட்கும் கேள்விகளுக்கு, கீழே உட்கார்ந்து மேளம் கொட்டிக்கொண்டிருந்த அவன் மனைவி, 'மாப்பிள்ளைக்குப் பதிலாய் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள். 'மாப்பிள்ளை' அவன் கேட்பதற்கு 'வேண்டும், வேண்டாம்' என்று மட்டும் தலையாட்டிக்கொண்டிருந்தது!

'சோணங்கிபுரம், சொக்கப்பன் மவனான சுப்பண்ணா!..." இது பூமாட்டுக்காரனின் கூப்பாடு.

"என்னவாம்?"—மேளம் வாசித்துக்கொண்டிருந்த அவன் மனைவியின் பதில் இது.

"கோட்டையூர், குப்பண்ண சமீந்தாரின் பொண்ணு சுப்பியை உனக்குப் பிடிச்சிருக்கா?"—இப்படி பூமாட்டுகாரன் கேட்டதும் மாப்பிள்ளை மாடான சுப்பன் மிக மிடுக்குடன் வேண்டாமென்று தலையாட்டியது!

'வேண்டவே வேண்டாம்!" குரல் கொடுக்கிறாள் 'மாப்பிள்ளை' வீட்டுக்காரி.

"இந்தப் பொண்ணை கண்ணாலம் செய்துகிட்டா, பத்து வேலி நிலம் உன் பேரிலே பட்டாவாகுமடா!"

பலமாகத் தலையாட்டுகிறான் 'சுப்பண்ணா'

"கெண்டை, கொலுசு, ஐகோட்டு கொம்பு, பச்சைக் கல் மூக்குத்தி எல்லாம் பொண்ணுக்குப் போடுறேண்டா!"

முறைத்துப் பார்த்து தலையாட்டுகிறான் 'சுப்பண்ணா.'

"கும்பகோணம் பட்டுவேட்டி ஒரு ஜதை எடுத்துத் தரேண்டா"

"அதெல்லாம் வேணும்! பொண்ணு படிச்சிருக்காளான்னு மாப்பிள்ளை கேட்கிறார்!'—பிள்ளைவீட்டுக்காரியின் பிரேரணை இது.

'என் பொண்ணு ரொம்பப் படிக்கல்லே; ஆனா நல்லா நாட்டியம் ஆடுவாடா!...அடியே, சுப்பி! மாப்பிள்ளைக்கு ஒரு ஆட்டமாம் ஆடிக்காட்டு!'—பூமாட்டுகாரன் பாட்டு வாசிக்கிறான் பாட்டுக்குத் தகுந்தாற்போல முன்னங்கால்களையும், பின்னங்கால்களையும் தூக்கிப்போட்டு 'நாட்டியம்' ஆடியது! இதைக் கண்ட கூட்டம் பெருத்த ஆரவாரம் செய்து கைதட்டியது

'இப்போ என்னடா சொல்றே சுப்பண்ணா?'

'மாப்பிள்ளைக்கு இந்த ஆட்டம் பாட்டம் எல்லாம் பிடிக்கலதாம். அவன் கேட்கிறதெல்லாம் ஒண்ணே ஒண்ணுதான்!'

'என்ன வேணுமிங்கறான்? பத்துப் பணம் காசு ரொக்கமா கேட்கறானா? இல்லே, இந்தப் பட்டணத்தையே விலைக்கு வாங்கித் தரச் சொல்றானா?'

'அதெல்லாம் ஒண்ணும் வேணாம்.'

'பின்னே மாப்பிள்ளைக்கு என்ன வேணுமாம்?'


'ஒரு வீசை சர்க்கரை கொடுத்தா பொண்ணை கட்டிக்குவானாம்...!'

இதைக் கேட்டு பூமாட்டுகாரன் பயந்து நடு நடுங்குகிறான்! மாப்பிள்ளை 'சுப்பண்ணா' கோபித்துக்கொண்டு 'புர்'ரென பின்னால் போவதுபோல பாசாங்கு செய்தது! இதைப் பார்த்த ஜனக்கூட்டம் ஒரே கோஷமிட்டுக் கூவியது

ஐயையோ! சுப்பண்ணா! உனக்கு ஆகாசத்தாமரை வேணுமின்னாலும் கொண்டுவந்து தர்ரேன் அணுகுண்டு வேணுமா? அதையாவது அமெரிக்காவுக்குப்போய்க்கொண்டு வந்துகொடுப்பேன்...ஆனா...அரை வீசை சர்க்கரை கூட என்னால் கொடுக்கமுடியாதே!...

"ஊஹூம். அதெல்லாம்நடக்காது. மாப்பிள்ளைக்குச் சர்க்கரைதான் வேணுமாம்!..."

இப்படி பற்பல வாதப் பிரதிவாதங்களுக்குப்பின், 'பெண்' வீட்டுக்காரன் 'பிள்ளை' வீட்டுக்காரிக்கு ஒரு வீசை



சர்க்கரை வாங்கிக் கொடுப்பதாகச் சொன்ன வாக்குறுதியின்பேரில் ஒருவாறு கல்யாணத் தரகு முடிவாகியது. சுப்பண்ணுவும், சுப்பியும் ஒன்றையொன்று பிரேமை வழியும் கண்களோடு பார்த்துக்கொண்டன! பின்னர் மேள வாத்திய கோஷத்தோடு சுப்பண்ணுவுக்கும், சுப்பிக்கும் 'கல்யாணம்' நிறைவேறியது.

ஆறறிவுள்ள இந்தமனித ஜாதிகளுக்கு எத்தனை எத்தனை மகான்கள் தோன்றி சன்மார்க்கத்தை உபதேசித்தாலும், அவைகளை இந்தக் காதால் கேட்டு, அந்தக் காதால் விட்டு விடுவதைப் போலில்லாமல், வாயில்லாமல் ஜீவன்களான அந்த மாடுகள் அதன் எஜமானன் சொல்லிக்கொடுத்து வைத்திருப்பவைகளை எவ்வளவு ஞாபக சக்தியோடு வைத்திருந்து செயலில் காட்டுகின்றன! என்று வியந்துகொண்டே நின்றிருந்தேன் நான்.

பூமாட்டுக்காரன் 'சுப்பண்ணு'வைப் பார்த்து 'அடே, சுப்பண்ணு! உன் கண்ணாலத்துக்கு வந்திருக்கும் கனதனவான்களிடம்போய் 'மொய்ப் பணம்' வாங்கிக்கிட்டு வாடா!' என்று கட்டளையிட்டான்; உடனே 'சுப்பண்ணு' ஜனக்கூட்டத்தைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தது அதன் இரு கொம்புகளுக்கு மத்தியில் சுற்றப்பட்டிருந்த ஒரு துணிப்பையில் காலணா, அரையணா என்று விழுந்துகொண்டேயிருந்தது. பூமாட்டுக்காரன் பூபாள ராகத்தை நாகஸ்வரத்தில் இழைத்துக்கொண்டிருந்தா :

இவ்வளவு நேரம் வேடிக்கையிலீடுபட்டிருந்த நான் இப்போதுதான் அந்தப்பூமாட்டுக்காரனின் முகத்தைப் பார்த்தேன். அந்த முகத்தை நான் பலதடவை பார்த்திருப்பதாக எனக்கு ஞாபகம் வந்தது. கடினமாகச் சிந்தித்தேன். ஒருவாறு அவனைப் பற்றிய நினைவு எனக்குப் புரியலாயிற்று

இதே பட்டணத்தில் அவனுடைய இந்த வேடிக்கையை நான் எத்தனையோமுறை பார்த்திருக்கிறேன், ஆபீஸுக்குப் போகும்போதும், வரும்போதும் மாலை வேளைகளில் உலாவப்போகும்போதும் மற்ற சமயங்களிலும் அவனுடைய இந்த வேடிக்கையைக் கண்டுவிட்டால் ஒரு ஐந்துநிமிஷநேரமாவது நின்று பார்க்காமல் போகமாட்டேன். அதே பூமாட்டுக்காரன்தான் இப்போது இங்கே வேடிக்கைக் காட்டிக்கொண்டிருக்கிறான்.

ஆனால் இதற்குமுன்னால் அவனையும், அவன் 'கூட்டாளி'களையும் பார்த்ததில், இப்போது ஏதோ ஒரு குறையிருப்பதாக எனக்கு உணர்த்தியது அந்தக் 'குறை'யை நன்கு நினைவுபடுத்திப் பார்த்தேன். பட்டெனெ எனக்கொரு சந்தேகம் பிறந்தது.

நான்முன்னர்பார்த்தபோதெல்லாம் இந்தப் பூமாட்டுக்காரனைச் சேர்த்து ஐந்து உயிர்களிருக்கும் அக்குழுவில்! ஆனால் இப்போது இங்கே இருப்பது நான்கே உயிர்கள் தாம்! அதாவது அவனும், அவன் மனைவியும் அந்த இரண்டு மாடுகளும்! மற்றொரு உயிர் எங்கே? அந்த உயிர் மனித உயிர் தான்; பூமாட்டுக்காரனின் ஐந்து வயது சிறுவன் அந்தச் சிறுவன்தான் இப்போது அவர்களுடன் இல்லை! அவன் இருந்திருந்தால் இன்று மற்றொரு வேடிக்கையும் நடந்திருக்கும்.

பூமாட்டுகாரன் தரையில் ஒரு கந்தைத் துணியை விரித்து, அதில் தன் மகனை அந்தச் சிறுவனைப் படுக்க வைத்துவிடுவான் பிறகு ஏதாவது ஒரு பாட்டை வாசிப்பான். உடனே 'சுப்பி' மூச்சை பந்தனம்செய்து கொண்டே வந்து, சிறுவனின்மீது ஏறி, முன்னங்கால்களை மார்பின் மீதும், பின்னங்கால்களைத் தொடையின்மீதும் வைத்துக்கொண்டு, பாட்டுக்கு ஏற்றாற்போல மெதுவாக ஆடிக்காட்டும்! அடியில் படுத்துக்கொண்டிருக்கும் சிறுவன் ஒருவித சிரமமுமின்றி சிரித்துக்கொண்டே எல்லோரையும் நோக்குவான்! உடனே கூட்டத்திலிருந்து காலணா அரையணா என்று உருண்டு ஓடி வந்துகொண்டேயிருக்கும்.



அந்த வேடிக்கையைத்தான் பூமாட்டுக்காரன் இன்றுஏனோ செய்து காட்டவில்லை அவன் செய்து காட்டுவதற்கு அந்தச் சிறுவன் அவர்களுடன் இல்லை! இந்த நிகழ்ச்சி இல்லாததால்தான் இன்று வருமானம் கூட அவனுக்குக் குறைந்துவிட்டது என்று எனக்குத் தோன்றியது.

இப்படி எண்ணிக்கொண்டிருக்கும் போதே பூமாட்டுக்காரன் தன் சகாக்களுடன் கிளம்ப ஆயத்தமானான் ஜனக்கூட்டமும் கலைந்துவிட்டது.

நான் அந்தச் சிறுவனை நினைத்துக்கொண்டே திரும்பிவந்து பழையபடி வராந்தாவில் உட்கார்ந்தேன். என் எண்ணமெல்லாம் பூமாட்டுக்காரனின் மீதே அழுந்திவிட்டிருந்ததால் மீண்டும் பேப்பர் படிக்க மனம் ஓடவில்லை

எனது இந்த எண்ணத்தைச் சிதறடிப்பதைப்போல "சாமி...!" என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டது. மெதுவாக நிமிர்ந்து பார்த்தேன். என் எதிரில் சாட்சாத் அந்தப் பூமாட்டுகாரனே தன் மாடுகளுடன் நின்றுகொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் அவன் மனைவி நின்றுகொண்டிருந்தாள்.

'சாமி! அம்மாளிடம் சொல்லி இந்த மாடுகளுக்குக் கொஞ்சம் கஞ்சித் தண்ணீர் வாங்கித் தர்ரீங்களா?' என்று கெஞ்சும் குரலில் கேட்டான் அந்த பூமாட்டுக்காரன். அவனுடைய இந்தக் கூப்பாட்டைக் கேட்டு உள்ளேயிருந்த என் மனைவி, சாதம் வடித்த கழிநீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றி எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

பூமாட்டுக்காரனின் மனைவி அந்தத் தண்ணீரை வாங்கி கைகளால் நன்றாகக் கலக்கிவிட்டு, இரு மாடுகளுக்கும் குடிக்க வைத்தாள். நீர் குடித்துக்கொண்டிருந்த மாடுகளைத் தடவிவிட்டுக்கொண்டே நின்றிருந்தான் பூமாட்டுக்காரன்

வெகு நேரமாக என் மனதில் உறுத்திக்கொண்டிருந்த அந்தச் சிறுவனைப் பற்றிய எண்ணம், வார்த்தைகளாக வெளியே வந்து விட்டன.

"என்னப்பா! உன்னுடைய பையன் எங்கே? அவன் இல்லாமல் வேடிக்கை ஒன்றும் சுவாரஸ்யப்படவில்லையே?" என்றேன் நிதானமாக

இதைக் கேட்டு சட்டெனத் திரும்பிய அந்தப் பூமாட்டுக்காரனின் முகம் பரிதாபமாக வெளிறிக் குறுகியது! அவனுடைய இந்தப் பயங்கர முக மாற்றம் என்னை திகைக்க வைத்துவிட்டது என்னையே விறைக்கப் பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய வரண்ட கண்களிலிருந்து ஏனோ பொல பொலவென் கண்ணீர் உதிர்ந்து வழிந்தது! என் பாடு பெரிய தர்ம சங்கடமாகிவிட்டது. கேட்கக்கூடாதா ஒன்றை அவனிடம் கேட்டுவிட்டதாக என் மனம் குறு குறுத்தது. நானும் அவனை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தேன் சற்று நேரம் கழித்துத் தன்னைச் சமாளித்துக்கொண்டு பேசினான் பூமாட்டுக்காரன்.

'சாமி! அந்தக் கோராக் கதையை ஏன் கேக்கறீங்க! உசிரு போல இருந்த அந்தக் குளந்தை போயிடுத்துங்க...!' என்றான் அடக்க முடியாத விம்மல்களுக்கிடையே. எங்களுடைய சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்தபூமாட்டுக்காரனின் மனைவியின் கண்கள்கூட ஏனோ கலங்கிவிட்டன! அவள் துக்கத்தை மறைக்கத்தானோ என்னவோ, நீரைக் குடித்துவிட்டு நிமிர்ந்த மாடுகளை அப்பால் அழைத்துக்கொண்டு சென்விட்டாள். வீட்டில் என் 'செல்வங்கள்' நடத்திக்கொண்டிருந்த 'போரை' சமாதானப்படுத்திவைக்க என் மனைவியும் உள்ளே போய் விட்டாள்.

பிரமை தட்டியவன்போல நின்றுகொண்டிருந்த பூமாட்டுக்காரன் மெதுவாக நகர்ந்து வந்து என் எதிரில் உட்கார்ந்துகொண்டான்.

'சாமி! என் குளந்தையைப்பத்தித்தானே கேட்டீங்க? அந்தக் கதையைச் சொன்னு நீங்க கேப்பீங்களா?' என்று கேட்டு நிறுத்திவிட்டு என்னைப் பார்த்தான் பூமாட்டுக்காரன்

'கேட்கத்தயார்! என்பதைப்போல அவனைப் பார்த்தேன். மெதுவாகத் தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேசினான் அந்தப் பூமாட்டுக்காரன்.


* * *

"இரண்டு வருஷங்களுக்கு முன்னால் இது நடந்தது. நான் வைத்துக்கொண்டிருக்கும் இந்த இரண்டு மாடுகளும் என் கல்யாணத்தின்போது மாமனார் வீட்டார் பெண்ணுக்கு ஸ்ரீதனமாகக் கொடுத்ததாகும். இதற்கு முன்னால் என்னிடமிருந்த இரண்டு மாடுகளும் கோமாரிநோயால் இறந்து விட்டன ஆறு மாத கன்றுகளாயிருந்த இவையிரண்டையும் மிகக் கண்காணிப்போடு வளர்த்து வந்தேன் இவை பெரியவைகளாகி, வேடிக்கைக்காக பழகிக்கொண்டிருந்த காலத்தில். நான் ஒரு பண்ணையார் வீட்டில் மாடுகள் மேய்த்து ஜீவனம் நடத்த வேண்டியதாயிற்று.

மாடுகளிரண்டும், மூன்று வருஷத்துக்குள் நல்ல பருவமடைந்துவிட்டன எனக்குக் கல்யாணமான மறு வருஷம் என் மனைவி ஆண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள். குழந்தை கண்ணாயிரம் இந்த மாடுகளுடன் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்து வந்தான்.

மாடுகள் வளர்ச்சி பெற்று வேடிக்கைக்கென தயாரானபோது என் பையன் கண்ணாயிரத்துக்கு ஐந்து வயது நடந்துகொண்டிருந்தது. குழந்தையிலிருந்தே இந்த மாடுகளுடன் அவன் பயமின்றி பழகி வந்தால், அவனையும் என் பிழைப்பு வேடிக்கையில் பழக்கி வைத்தேன். குழந்தையோடு குழந்தையாக இந்த மாடுகளும் அவனிடம் கொஞ்சி விளையாடிக் கொண்டு வந்தன.

பண்ணையாரின் மாடுகளை மேய்க்கும் வேலையை விட்டுவிட்டு என் மனைவியையும், கண்ணாயிரத்தையும், இந்த இரண்டு மாடுகளையும் அழைத்துக்கொண்டு, ஊர் ஊராகச் சுற்றி வேடிக்கை காட்டி காலத்தை நிம்மதியாக கழித்து வந்தேன். ஐந்து வயது குழந்தை மீது இவ்வளவு பெரிய பசுமாடு ஏறி நின்று ஆடுவது என் தொழிலுக்கு ஒரு புதுமவுசாயிருந்தது



இந்தப் பட்டணத்திற்கு வந்த மூன்றும்மாதம் பசுமாடு சூல் கொண்டு விட்டது. அதனுல் அதை வேடிக்கைக்கு அழைத்துப்போவதில்லை. கண்ணுயிரத்துக்கும் அப்பசுவுடன் ஓய்வு கிடைத்தது பசுவும், பையனும் இல்லாமல் என் வேடிக்கையில் வருமானம் ரொம்பவும் குறைந்து போயிற்று. இதனுல் அன்ருடம் வயிற்றைக் கழுவக்கூட பிரம்மபிரயத்தனமாகிவிட்டது. அரைப் பட்டினியும், முழுப்பட்டினியுமாகக் கிடந்து நாட்களைக் கழித்து வந்தோம். எங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்வதற்கென்றே 'சுப்பி' ஒரு அழகிய கிடேரி கன்றை ஈன்றெடுத்தது!

'சுப்பி' கன்றுபோட்டு ஒரு மாதமிருக்கும். பழையபடி அதைத் 'தொழிலில்' ஈடுபடுத்த எண்ணியிருந்தேன். பின்னர். கன்றுபோட்ட மாட்டை வேகாதவெய்யலில் இழுத்துப் பறிக்கக்கூடாதென்று என் மனைவி தடுத்ததன் பேரில் கொஞ்சகாலம் பல்லைக் கடித்துக்கொண்டிருந்தேன்.

அன்று மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் திருவிழா எப்படியாவது அங்குபோய் என் முழு வேடிக்கை திறமையையும் காட்டிவிடவேண்டுமென்று முடிவு கட்டினேன் அன்று பூராவும் சுமார் நான்கைந்து தடவையாவது வேடிக்கை காட்டிவிட்டால் குறைந்தது ஐந்து ரூபாயாவது கிடைக்கும் என்ற ஆசை என்னை உந்தித் தள்ளியது.

அன்ருவது நாங்கள் வயிருர சாப்பிட்டு, கன்றுபோட்ட மாட்டுக்கும் பிண்ணுக்கு வாங்கி வைக்கலாமென்ற எண்ணத்துடன், கட்டி வைத்திருந்த 'சுப்பி'யை முதன் முதலாகப் போய் அவிழ்த்தேன் அப்போது 'சுப்பி' தன் கன்றுக்கு பால் ஊட்டிக்கொண்டிருந்தது. வேடிக்கைக்கு வேண்டிய சாமான்களுடன் என் மனைவியும், கண்ணுயிரமும் தயாராக நின்று கொண்டிருந்தார்கள் அவர்களுடன் 'சுப்பண்ணு'வும் அசைபோட்டுக் கொண்டு நின்றிருந்தது.

'சுப்பி'யைக் கட்டியிருந்த தும்பை அவிழ்த்ததும், அது என்னை முறைத்துப் பார்த்து விறைத்து நின்றது. சுமார் ஒரு வருஷ காலமாக வேடிக்கையில் அது ஈடுபடாததால், உடம்பு வணங்காமல் என்னை முறைத்துப் பார்க்கிறது என்பதை நான் அறிந்து கொண்டேன். பசுவை அவிழ்ப்பதைப் பார்த்த கன்று அப்போதுதான் மாய்ந்து மாய்ந்து பால் குடிக்க ஆரம்பித்தது!

சூரியன் கரகரவென மேலேறிக் கொண்டிருந்தான். மூன்று நாட்களாக கால்வயிறும், அரை வயிறுமாய் இருந்ததால் 'சுப்பி'யை சமாதானப்படுத்தும் பொறுமை அப்போதெனக்கு உண்டாகவில்லை.

கயிறை அவிழ்த்ததும் முரண்டிக் கொண்டு நின்ற 'சுப்பி'யை என் பலம் கொண்டமட்டும்பிடித்துப்பரபரவென இழுத்தேன். அதுவும் தன் பலத்தை என்னிடம் காட்ட கால்களைத் தரையில் அழுத்தி வைத்து 'மக்கர்' செய்தது. எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது கையிலிருந்த சாட்டையால் 'சுப்பியின் முதுகில் பளார் பளார்' என்று இரண்டடி கொடுத்துவிட்டேன். அடியே வாங்கி அறியாத 'சுப்பி' வலி தாளமாட்டாமல் துடி துடித்துவிட்டது. எனக்கப்போதிருந்த ஆத்திரத்தில் இதையொன்றையும் கவனியாமல் பர பர வென இழுத்துக்கொண்டு கிளம்பலானேன். பாலுக்குத் துடிக்கும் தன் கன்றைப்பார்த்து கதறிக்கொண்டே என் பின்னுல் வந்துகொண்டிருந்தது 'சுப்பி'

காலை பதினுெரு மணிக்கெல்லாம் மயிலாப்பூர் குளக்கரையை வந்து அடைந்தோம் வழக்கப்படி வேடிக்கை ஆரம்பமாகியது. 'சுப்பிக்கும், சுப்பண்ணு'வுக்கும் கல்யாணத் தரகு நடந்தது. அப்போதும் 'சுப்பி' பழைய லாவக நடத்தையில்லாமல் முரண்டிக்கொண்டேயிருந்தது. ஒரு வருஷத்துக்குப்பின் 'சுப்பி' இப்போது தானே அரங்கில் வந்து இறங்கியிருக்கிருள்! அதனுல் தான் இந்த 'மக்கர்' எல்லாம் என்று நான் நினைத்துக் கொண்டேன் கல்யாணப் பேச்சு முடிந்து 'சுப்பி'க்கும் 'சுப்பண்ணு'வுக்கும் முகூர்த்தம்' நிறைவேறியது. அப்போது அதனருகில் நெருங்கிய 'சுப்பண்ணு'வை சுப்பி' இரண்டொரு தரம் கொம்புகளால் சிலுப்பி முட்டித் தள்ளியது! 'சுப்பி' செய்யும் இந்த ஹடம் எனக்குப்பெருத்த வயிற்றெரிச்சலைக் கிளப்பி விட்டுவிட்டது. ரொம்பப் பொறுமையுடன் நான் காரியத்திலீடுபட்டிருந்தேன். வேடிக்கை நடந்துகொண்டிருக்கும் போதே நிமிஷத்துக்கு நிமிஷம், என் மகன் கண்ணுயிரம் பிடித்துக் கொண்டிருந்த தன் கன்றைப் பார்த்துக் கதறிக்கொண்டேயிருந்தது சுப்பி!

ஆச்சு: எனது திறமை மிக்க கடைசி வேடிக்கையைக் காட்ட ஆரம்பித்தேன். ஏராளமாகக் குழுமியிருந்த ஜனங்கள் எங்களையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தனர்.

தரையில் பழைய துணியொன்றை விரித்தேன். என் அருமை மகன் கண்ணுயிரத்தை அழைத்தேன். இவ்வளவு நேரம் கன்றுக்குட்டியைப் பிடித்துக் கொண்டிருந்த அவன் துள்ளி ஓடி வந்து துணியில் படுத்துக்கொண்டான் அதற்குள்ளாகவே கூட்டத்திலிருந்து ஓரணுக்களும் இரண்டணுக்களும் வந்து விழுந்துகொண்டே இருந்தன! மிக்க உற்சாகத்துடன் நாகஸ்வரத்தை எடுத்து ஒரு பாட்டை வாசித்துக் கொண்டே 'சுப்பி'க்கு சைகை காட்டினேன்.

அவ்வளவுதான்!

முகத்தைத் தரையில் வைத்து, பின்னர் நிமிர்ந்து கர்ஜித்துக்கொண்டே ஓடி வந்து என கண்ணுயிரத்தின மீது ஏறிக்கொண்டது 'சுப்பி'! ஜனக் கூட்டத்தைப் பார்த்துக்கொண்டே நாகஸ்வரம் வாசித்துக்கொண்டிருந்ததால் இதை நான் கவனிக்கவுல்லை.

அடுத்த விஞடிக்கெல்லாம் கண்ணுயிரம் வீரிட்டுக் கதறியதைக் கேட்டுத் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தேன!...சாமி!...அந்த நிகழ்ச்சியை நான எப்படிச் சொல்வேன! பக்தி பரவசத்திலீடுபட்ட பக்தகோராகும்பர், தவழ்ந்து வந்த தன் குழந்தையை எப்படி களி மண்ணேடு மண்ணுகப்போட்டுத் துவைத்து மிதித்து விட்டாரோஅதைப்போலகண்ணுயிரத்தை ஆவேசம் வந்ததுபோல மிதித்துக்கொண்டிருந்தது சுப்பி!

என் மனைவி அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தாள். நானும் பதறிக்கொண்டு சுப்பியிடம் ஓடினேன். பெண் சிங்கத்தைப் போல எங்களை கிட்டே நெருங்கவிடாமல் பயங்கரமாகச் சிலுப்பிக்கொண்டே. கண்ணுயிரத்தை ஏறி ஏறி, இறங்கி இறங்கி மிதித்துத் துவைக்க ஆரம்பித்தது இதைக் கண்டு சுற்றியிருந்த ஜனங்களெல்லாம் தலை தெறிக்க ஓடினர்கள்.


சற்று நேரத்திற்கெல்லாம் இரத்தத்தில் தோய்ந்து பிணமாகிவிட்டான் என் அருமைச் செல்வன் கண்ணுயிரம். அன்றிலிருந்து...'

* * *

பூமாட்டுகாரன் வாக்கியத்தை முடிக்காமல் பித்துப் பிடித்தவன்போல எழுந்து ஓடிவிட்டான்!

இவ்வளவுநேரம் கல்லாய் சமைந்திருந்த நான் பக்கத்திலிடந்த பேப்பரை எடுத்துப் புரட்டினேன். 'குழந்தையைத் தாய் மிதித்த கோர சம்பவம்' என்ற செய்தியைத்தான் முதல் முதலில் என் கண்ணில் பட்டது!





# மலர்வண்டும் மோகினியும்

ரா-ஸ்ரீ


1 வெள்ளிவண்ணக் கிண்ணம்போல்
விளங்கும் பூமென் தொட்டில்மேல்
பள்ளிகொண்டு கனிதீரப்
பண்(டு) அமர்ந்தாள் மோகினிதான
மெள்ள வீசும் மென்காற்றால்
மெல்ல ஆடும் பூந்தொட்டில்
உள்ளி ருந்த மோகினி பார்!
உறங்கிப் போனாள் மெய்ம்மறந்து.

2 வயிற்றுள் அடங்காப் பசியால் ஓர்
வண்டு வந்(து)அம் மலர்கண்டு
முயற்சி கொண்டு முனவந்து
முறையாய்ச் சுற்றி முரல்தந்து
பயிற்சி போலும் பலமுறையும்
பாடிச் சுற்றிப் பயனென்ன?
துயில்கண் ஆழ்ந்த மோகினியோ
தூக்கம் கலைந்த பாடில்லை.

3 முருதத் தேனைச் சிற்றுண்டி
முடித்துக் கொண்டு மென்மலரில்
அருந்த முரலும் தரல்கேளா(து)
ஆழ்ந்து துயில்வ(து) ஆர்? மலரில்
பெருந் தேனுக்(கு) உரியேனைப்
பிணிபோல் பசியால் மெலிவேனை
உருதம் வண்ணம் ஒருவர் மற்(று)
ஒருவர் உரிமை பறிப்பாரோ?

4 ஒருவர் உணவை ஒருவர்தான்
உண்டு களிக்கும் உலகாமோ?
தருமம் உண்டோ? எனப் பேசி
தனனுள் எழுந்த சினம் பொங்கி
வருவ(து) அறியார் வஞ்சம்தீர்
வன்மைகொண்டு வண்டும் தன்
கருவிக் கொடுக்கால் தீண்டற்குக்
கடுகி வந்(து) ஒடுங்கிற்றே!

5 இருமருந்தும் இற(ந்) அழகாய்
இசையத் துயின்ற மோகினிதான்
உருவம் தெரியத் தலைநிமிர்ந்தாள்
உறக்கம் கலைந்த உணர்வோடு
மருவு மங்கை மாத்திரைக்கோல்
வண்டு கண்ட மாத்திரத்து
வெருவி ஒடுங்கிப் போயிற்று,
விந்தை! ஈசன் செயல்என்னே!




இளம்மனைவி குடித்தனம் செய்ய அவள் வந்து ஏழுமாசம் ஆகிறது. அவளுடன் அழகாக ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ரகுவுக்கு ஆசை எழாதா?

'ராதே! சாயங்காலம் 'பிரபா'வுக்குப் போகலாம்! 'போன்'லே ஏற்பாடு செய்துண்டு வரேன்! தயாராய் இரு!' என்றான் மனைவியிடம்.

'உம், போகலாம். ஆனா...'

தயங்கினாற்போல அவள் விடையளிப்பாள் என ரகு கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை போட்டோப் பித்து எனலாம் அவளை, அத்தனை தினுசு எடுத்துக்கொண்டிருக்கிறாள் அவள்.

'ஏன்? என்ன யோசனை?'

'வெட்கமாயிருக்கு'

'ஏன்? எத்தனை எடுத்துண்டிருக்கயே அடுக்கடுக்காய்...'

'ஆமாம்...அப்போ...'

'ஓஹோ! நானும்கூட நிற்கிறது தான் உனக்கு...'

திடீரென்று ராதையின் முகம் வியர்த்துப் பளபளத்தது, போட்டோக் காமிராவின் கண்ணாடிக்கு ஒரு கணவேலைபடம் பதிவுசெய்ய; ராதையும் ஒரேகணத்திலே நீர் பளபளக்கும் தன் கண்கள் மூலம் தன் மனதை அவன் எதிரே பதிவுசெய்தாள்.

"சும்மாச் சொன்னேன், ராதே! உன் சகவாசதோஷம் எனக்கு இப்போ போட்டோ ஆசை வந்துடுத்து. என் சகவாச தோஷம் உனக்கு...'

இதற்குள் ராதையின் முகம் இவனுடைய ஆறுதல் மொழிகள்கேட்டு, மலர்ந்தது. இதைக் கவனித்த ரகு, 'ராதே! நீ நம்ம கல்யாணப் போட்டோவைப் பார்த்துப் பார்த்து மகிழறதைப்பார்த்தே தெரியல்லையா எனக்கு உன்மனசு? என்னமோ சட்டுன்னு கோபம் வந்தது நீ 'ஆனா'ல்னு இழுத்ததும்! போகட்டும் உனக்கு இஷ்டமில்லை என்றால் வேண்டாம்!' என்றான்.

'இல்லை, போகலாம்'

'அரை மனசு இல்லையே!'

'இல்லை'

'சரி. கல்யாணப் போட்டோவிலே, நாம் இரண்டுபேரும் புதுசோன்னோ.... எப்படியோ சம்பந்தமில்லாதவா மாதிரி நிற்கிறோம் இந்தப் போட்டோவிலே எப்படி விழணும் தெரியுமா? நாங்கரெண்டுபேரும் அகமுடையான்...பெண்டாட்டிங்கிறமாதிரி கம்பீரமா நிற்கணும்!'

"உம்" என்னும்போதே சிரிப்பை அடக்க முடியாமல் உதடுகளை மடக்கிக்கொண்டது, ராதையின் சிறுவாய் அதைக் கவனித்த ரகுவின் பெருவிழிகளிலே ஒளி துள்ளியது.

"ஏன்? சண்டை பிடிக்கிற மாதிரி நிற்கணுமா, கட்டிண்டிருக்கிற மாதிரி விழணுமான்னு கேழ்கிறயா போக்கிரி?"

"சீ" ஓடிவிட்டாள் ராதை. இந்த ஓட்டத்திலே பொதிந்திருந்த இன்பம் வேறு எந்த ஓட்டத்திலே உண்டு? மின் ஓட்டத்திலே உண்டா? வானோட்டத்திலே உண்டா? நீரோட்டத்திலே உண்டா? சிறு குழந்தையின் ஓட்டத்திலே உண்டா? ராதையின் நீள் விழிகளின் ஓட்டத்திலேதான் உண்டு. வேறு எங்கும் இல்லை.

ஒருகணம் மகிழ்ச்சியே உருவாய் நின்ற ரகு, மறுகணம், ராதையைத் தொடர்ந்து சென்றான். போட்டோ விஷயமாய் அவளுக்குச் சிலக் குறிப்புகளைக் கொடுக்கணுமே! அதற்காகப் போனான். "ராதே! நீ கொஞ்சம் மட்டமாய் விழேன்! அப்பத்தான் நான் உனக்குக் கொஞ்சம் சரி சமானமாய் விழுவேன்!" என்று அவள் காதண்டை கூறி வந்தான்.

அன்று மாலை இருவரும் போட்டோ ஸ்டுடியோவுக்குப் புறப்பட்டார்கள். போகும் வழியிலே, "இவ்வளவு ஸ்டுடியோ இருக்கே! பிரபாவுக்கே தான் போகணுமா?" என்று கேட்டாள் ராதை.

"ஆமாம்! இதுதான் 'பெஸ்ட்'! ரொம்ப ஜோராய் இருக்கும் இடம்! எனக்குப் பழக்கமுள்ளவா ரொம்பப் ரொம்பப் பேர் இதிலேதான் எடுத்துக்கற வழக்கம்! நாம் என்ன மட்டம்?"

"ஆமாம்! ஆனால், ரொம்ப தடபுடல் இடம்னு வரவே பயமாயிருக்கே என்க்கு ஆத்துலேயே எடுத்துண்டு வழக்கம்"

'இந்த ஊருலே ஸ்டுடியோவுக்கு போய்த்தான்எடுத்துக்கறதுவழக்கம்!' என்று பருத்திக்காய் வெடித்தாற்போலச் சொல்லிவிட்டு ரகு, உடனே தன் தொனியை இறக்கி, பஞ்சுப் போன்று குரலைப் பதம் படுத்திவிட்டான். "எங்கே எடுத்தாலும் நீநன்னா விழுவே! சரியான ஆங்கிள் பார்த்து எடுத்தாத்தானே நானும் நன்னா விழுவேன், ராதே!" என்றான். புன்னகையும் பூத்தான்.

இங்கிதம் அறிந்த ராதையும், மெல்லச் சிரித்து, "இன்னிக்கு நாம்ப நன்னா விழுந்து விழுந்து பேசிச் சண்டை பிடிக்கிறதாயிருக்கு!" என்று புகன்றான் எனினும், ராதையின் விழிகளிலேமிரட்சிபோகவில்லை.பிரபாவை அணுகி உள்ளே புகும்பொழுது நாற்புறம் சுற்றி சுற்றிப் பார்த்து மருள மருள விழித்துக்கொண்டே போனாள். அப்பொழுது ஒரு தடவை அவளைத் திரும்பிப்பார்த்த ரகுவே அவள் மேலே அனுதாபங்கொண்டான்.

"அசடு! எல்லோரையும்விட ஜோரா விழுவாள் இவள் தன்னம்பிக்கையில்லாமல் அவஸ்தை படறது!" என்று எண்ணமிட்டான்.

முன்னேற்பாடு இருந்தமையால், அங்கே வேலை வெகு விரைவிலே முடிந்தது. "அப்பாடி! ஒரு கண்டம் தப்பித்து!" என்று மெல்லக் கூறியவாறே வாசற்படிகளிலே இறங்கினாள் ராதை. வெளியே வந்ததும். ஒரு நிமிஷம் தயங்கி நின்றாள் அவள். ஸ்டுடியோ வாசலில் தொங்கியிருந்த பெரும் பலகையை, அதன் பெயர் பொறித்திருந்த பலகையைப் பார்த்தாள்.

"ஏன், என்ன பார்க்கிறே?" என்று கேட்டான் ரகு.

"பேர் பார்த்தேன் அிருக்கட்டும். பிரபாத், பிரகாச்அப்படீன்னு வேறே ஏதாவது ஸ்டுடியோ இருக்கா இந்த ஊருலே?"



"இல்லையே! ஏன்?"

"சும்மாக் கேட்டேன், எங்கூருலே யாரோ சொன்ன நினைவு 'பிரபா'ன்னுதான் அதான் 'ப்ர'ன்னுதான் பேர் ஆரம்பம்..."

"தெரியாது. வேறே ஏதாவது இருக்கலாம் ஸ்டுடியோ..."

"இருக்காது...உம், இருந்தாலும் இருக்கும் எப்படியானால் என்ன? எந்த ஸ்டுடியோவானா என்ன? நாம்ப நன்னா விழ வேண்டியது...எனக்கென்னவோ பயமாகத்தான் இருந்தது..."

ரகுவுக்குச் சிரிப்பு வந்தது அவள் மேலே அனுதாபமும் உண்டாயிற்று. "ராதே! போட்டான்னா, பேச்சு, சாதாரணமாய் அச்சுப்பிச்சுன்றுதான் போகும். "நன்னா விழுந்திருக்கேன், அழகா விழுந்திருக்கேன் அப்படின்னு போகும். ஆனால், நீ என்ன, ஆனாலும் இப்படியாயிட்டே இன்னிக்கு! அப்படியென்ன பயம்? நாம்பரெண்டு பேரும்தான் ரொம்ப 'கிராண்டா' அழகா விழுந்திருப்போம், பாரு!" என்று கேலியும் சிரிப்புமாகச் சொன்னான்.

ராதை உடனே எதுவும் பேசவில்லை. ஆனால் அப்புறம் கல கலவென நிறையப்பேசிக் கொண்டே போனாள்

அங்கேபோட்டோவிலேஉருவத்தை இறக்கிவிட்டபொழுதிலே, தன் மனப் பாரத்தையும் சற்று இறக்கிவிட்டு வந்திருந்தாள்போலும்.

அடுத்தவாரம் அவன் 'பிரபா' சென்று மாதிரிப்படங்கள் பார்த்து வந்தான் இரண்டு தினுசாக எடுத்திருந்ததால் இரண்டினுடைய மாதிரிப் படங்களும் அவனிடம் காட்டப்பட்டன இரண்டுமே நன்றாயிருப்பினும், பணச்செலவை வெருவி, ஒரே படம் பொறுக்கி, அதன் ஆறு பிரதிகளுக்கு ஏற்பாடுசெய்தான் அதற்கு அடுத்த வாரம் அந்தப் பிரதிகளைப் பெற்று வரச் சென்றான் ரகு, 'ஜோர்! ஜோர்! இரண்டுபேரும் ஜோர்!' எனக் கொம்மாளங்கொண்டது அவன் உள்ளம் பிரதிகளை வாங்கிக்கொள்ளும் பொழுது அங்கிருந்த பல இளைஞர்களுள் ஒருவன்.. 'ஷோ'வில் வைக்க ஆட்சேபணையில்லையே சார்?' என வினவினான். ரகு, பெருமிதம் பெருகியோட ஆட்சேபணை என்ன?' என்ற சொற்களை பெருமையூடே நழுவ விட்டு வந்தான்

வீடு திரும்பியதும் ராதையிடம் சொன்னான் சேதி. புகைப்படம்கண்டு அவள் உவகை பூத்தாள் ஆனால் அது 'காட்சியில்வைக்க அனுமதியளிக்கப் பட்டதை அவள் ரசிக்கவில்லை. 'போனாப்போறது. ஆனால் எல்லாரண்டையும் சொல்லிக்கவேண்டாம்' என்றாள் நியாயமான பேச்சுத்தான் என்று ஏனோ இப்பொழுது தோன்றியது ரகுவுக்கு,

அடுத்தமாதம் ஒருநாள் சிநேகிதன் ஒருவனுடன் போகும்பொழுது, போட்டோக்கருவிகள்வாங்க 'பிரபா' விலேயே நுழைந்தான் நண்பன்...... கூடவே ரகுவும் சென்றான். போட்டோக் கருவிகள் விற்பனையாகும் பகுதிக்கு நண்பன் சென்றான், ரகு 'ஷோ' வருகு வந்தான் அங்கேயிருந்தது அவன் நாடிவந்தபடம். அங்குள்ள பலர் படங்களிலும் சிறந்து விளங்கியது இவர்கள் படம்.

'எவ்வளவு அழகாயிருக்கிறது! அவளையும் ஒருநாள் அழைத்துவந்து காட்டணும்...!'

வேறுதிக்குகளிலும் அவன் பார்வை சென்றது, அந்தோ! அதென்ன? ராதைதானா? ஆமாம்! ராதை தனியாகக் காட்சியளித்தாள் அவளுடைய தனிப்புகைப்படம் இங்கே எடுத்தது ஏது? கிடையாதே! இந்தடவுனிலே, இந்த ஸ்டுடியோவிலே அவளுடைய முதற் புகைப்படம் தன்னுடனே எடுத்துக்கொண்டதுதானே? இது ராதைதானோ....ஆம்...ராதைதான்.

காட்சிக்கென மாட்டியிருந்த பல பெண்களின் படங்களுள் ராதையின் படமும் இருந்தது. பெரிய அளவில் இருந்தபடம்; வேறுபல பெண்களின் படங்கள் பலவித வேலைப்பாடுகளுடனும் நிறங்களுடனும் விளங்கின. எனினும் ரகுவின் கண்களுக்கு ராதைதான் தென்பட்டாள், அனற்போல.

நண்பனை அழைத்து அக்கிரமத்தைச் சொல்லவும் கூசினான் ஸ்டுடியோக் காரர்களைக் கேட்கவும் துணிவு எழவில்லை. வீடு மீண்ட அவன் ராதையிடமும் இந்த விஷயம் தெரிவிக்கவில்லை. இந்தச் செய்தியை அவள் பதைபதைப்புடன் வரவேற்பாள் என்று அவன் மனம் சொன்னது. அன்றொருநாள் ராதை பேச்சு வாக்கிலே 'வரவர எனக்குப் போட்டோவே பிடிக்காமற்போய்விடும் போலிருக்கு...! அதுவேதான் எத்தனை தகிடுத்ததம்!' என்றாளே.

இந்த நினைப்பு அவன் நாவைக் கட்டுப்படுத்தியது. நிலத்தினுள்ளேயிருக்கும் விதை வெளியே உருவமுடன் வளர, மேலேயிருந்தல்லவா, வெளியே யிருந்தேயல்லவா நீரும் வெளிச்சமும் வரவேண்டும்?

ரகுவின் மனதுக்குள்ளேயிருந்த விஷயத்தை வெளிக்கிளப்ப இப்பொழுது கிருஷ்ணசாமி என்பார் வந்தார். நெருங்கிய பழக்கமில்லாத அவர், பெரிய மனுஷர் அவர், அன்று தன்னை நாடிவந்ததுபற்றி முதலில் மகிழ்ந்த ரகு, சற்று பொறுத்து அவர் வருகையைக் குறித்துக் கவன்றான். பேசுகையிலேயே அவர் கண்கள் நாற்புற சுவர்மீதும் பதிந்து சுழன்று வருவதைக் கவனித்தான் ரகு. அவருடைய பார்வையிலேயே, அவர் வருகையின் நெடியை ஐயுற்று, கொசுப் போல ஒரு நிலையை அடைந்து விட்டான் ரகு. திருமணப் போட்டோ விளருகு வந்தபோது அவர் பார்வை கூர்மையாகி, புருவங்கள் உயர்ந்தைக் கண்டான். துணுக்கென்றது அவனுக்கு. இரண்டுநாளாக அவனுக்குந்தான் போட்டோ நினைப்பாச்சே!

குபீர் என்று அவர் 'ஏன்னப்பா! ரகுபதி! நீங்கள் இருவருமாக எடுத்துக்கொண்டபோட்டோவேறு கிடையாதா?' என்று கேட்டார்.

'உம்? உம்?...உண்டே! இருக்கு?'

'எங்கேயிருக்கு?'

'அடுத்த ரூம்லே'

'எடுத்துண்டுவா, பார்க்கலாம்'

ரகு அதை எடுத்துவருவதற்கும் ராதை காப்பிடம்ளர் சகிதம் வருவதற்கும் தோதாயிருந்தது.

'இவளுக்குத் தெரிந்துபோகும்படி பேச்சு வந்துவிடுமோ?" என்று பயந்து போனான் ரகு.

'இவளும் இருப்பதாலாவது இவர் வேறு எதுவும் பேசாமல் இருக்க மாட்டாரா?' என நைப்பாசையுடன் ஏங்கினான்.

போட்டோ நெகட்டிவ் இருக்குமே—அந்த நிலையில் இருந்தது அவன் உள்ளம், பயங்கரமும் விகாரமும் உற்று

காப்பி வந்ததும் ராதையும் அவரும் நாலு வார்த்தை, கொஞ்ச நேரம் பேசினார்கள். பிறகு ராதை போய்விட்டாள் சமையலறைக்கு,

'என்ன அம்பலப்படப் போகிறதோ!' எனக் காத்து இருந்தான் ரகு

'உம், நன்றாயிருக்கே! பேஷ்! எங்கே, 'பிரபா'விலே எடுத்ததா?'

'ஆமாம்'

'சரி, கொண்டுபோய்வச்சுடு! ராதை 'எக்ஸலண்ட்'!

அவரிடம் படத்தை வாங்கி உள்ளே எடுத்துப்போன ரகு, 'இத்துடன் விட்டதே பேச்சு!" என அகமகிழ்ந்து அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு வந்து நாற்காலியில் அமர்ந்தான் ரகு. அப்போது?

'போட்டோ எடுத்தாச்சு!' என்று எண்ணி அசந்துகொள்ளும் சமயம் ஸ்விட்ச் நகர்ந்தால் எப்படியிருக்கும்?......இப்போது கிருஷ்ணசாமி கேட்டுவிட்டார்.

'ஏன் ரகுபதி! உனக்குத்தெரியுமோ 'பிரபா' ஸ்டுடியோவிலே!'

'என்ன அங்கே! எனக்கு யாரையும் தெரியாதே அங்கே!'

'அங்கே ஷோவிலே உங்கள் படம் அமர்களப்படுத்தி வச்சிருக்கே அது தானப்பா கேட்கிறேன்'

'உம்?

'ஆமாப்பா! இதோ போட்டோ...... அங்கே யிருக்கு ஷோவில்! அதுவானாலும் போறது...அவன் படத்தை என்ன, அப்படி, விளம்பரப் படம் மாதிரி மாட்டி வச்சிருக்கு! எனக்குத் திடுக்கிட்டுப் போச்சப்பா!'

‘எப்போ பார்த்தேள் சார்?’

‘நேற்றுப் போனேனப்பா குழந்தையின் படம் ஒன்று பெரிசு பண்ண! அப்போ!...ஒரு வேளை உங்கள் அனுமதியிருக்குமோன்னு, அங்கேயே மேற்கொண்டு கேட்கல்லே! உன்னண்டை கேட்க இப்போ வந்தேன்’

‘நிஜமாவா, மாமா? என் படமா அப்படி மாட்டியிருக்கு! இருக்காதே! தனிப்போட்டோ எடுக்கல்லேயே?” என்று கேட்டவாறே வந்துவிட்டாள் ராதை

சற்றுத் தயங்கினார் நண்பர், மேலே பேச. எனினும் சமாளித்துக்கொண்டு விட்டார்.

‘இல்லேம்மா! உன் போட்டோதான். இந்த இரண்டுபேர் இருக்கிற போட்டோவிலிருந்து பிரித்து எடுத்ததாகவும் தெரியல்லே...ஆனாலும் அது உன் படம்தான். நானும் காரணமில்லாமல் சந்தேகப்படல்லே! அதையும் சொன்னால்தானே பாவம் உனக்கு நம்பிக்கை வரும்?’

‘என்ன?’

‘ஆமாம்மா! உனக்குத் தெரியுமோ என்னமோ......நாராயணன்னு ஒரு பையன்.........உன்னைக்கொடுக்கிறது என்று முதலிலே உங்கள் ஊரில் பேச்சு இருந்தது...’

இந்த சமயம், இயற்கையாக எழுந்த ரகு உந்தலினால் ரகு ராதையின் முகத்தை நோக்கிவிட்டு, கண்களைத் தாழ்த்திவிட்டான். அவள் முகத்தையும் நடித்துப்பார்க்க முடியவில்லை.

கிருஷ்ணசாமி பேச்சுத் தொடர்ந்தார்.

‘அவன் எனக்குத் தூர உறவுப் பையன்தான். அவன் இருக்கான் ‘பிரபா’வுலே இப்படி ஏதாவது செஞ்சிருக்கலாம்னு தோன்றது எனக்கு...’

‘நான் இதுக்குத்தானே அப்பவே...’ என ஆரம்பித்த ராதே, விம்ம வாரம்பித்துவிட்டாள்

ரகுவும் கிருஷ்ணசாமியும் மனமயார்ந்தனர்.

‘அழக்கூடாதும்மா! சிலதுகள் இதுக்கெல்லாம் பெருமைப்படுங்கள்: நீமட்டும் இதுமாதிரிவைக்க சம்மதிச்சு இருக்கமாட்டாய்னுதான் சந்தேகப்பட்டு வந்தேனுக்கும்......போய் இனி மேல் கவனிக்கிறேன்...’

கிருஷ்ணசாமி எழுந்தார். ரகுவும் எழுந்து நின்று ‘இப்பப் போகலாம்... நானும் வரேன். சார்.........’ என்றான். மனச்சமாதானம் அடையுமாறு ராதையிடம் கனிவுமொழி கூறிவிட்டு இருவரும் புறப்பட்டார்கள். காரியம் ஓடாமல் வாசலுக்கும் உள்ளுக்குமாக உலாவிக்கொண்டு இருந்த ராதை, காலடியோசை கேட்டு, குடுகுடென்று வாசலுக்கு வந்தாள். உரிமையுடன் உள்ளே வந்துவிட்டான் ஒருவன் நாராயணன் அவன்.

‘நீங்களா?...வாங்கோ!’ என்றாள் ராதை கலவரமுடனே.

‘ஆமாம். நான்தான்! அவனில்லேயோ?,

‘அவர்...இப்பத்தான் போனார். உங்களைப் பார்க்கத்தான்...,

‘என்னைப் பார்க்கவா? அவனுக்கு என்னைத் தெரியாதே!’

‘உங்களுக்குச் சொந்தமாமே கிருஷ்ணசாமி மாமா...,”

‘ஓஹோ...அதானா இரண்டு பேருமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்... என்னைப் பார்க்கத்தானா...’

‘ஆமாம்,’

‘என்னைப் பார்க்கங்கிறது தெரியாது...அது போனாப்போறது நான் உன்னைப் பார்க்கத்தானே அவன் இல்லாத சமயம் வந்தேன்—’

‘ஐயோ பின்னே அவர் இருக்காரா என்று கேட்டேனே!’

‘உம், கேட்டேன் வெறுமனே...’

‘அச்சச்சோ...’

‘பயப்படாதே...உன்னை விழுங்கிடமாட்டேன்...ஒரு விஷயம் சொல்ல வந்தேன்’

‘போட்டோ விஷயமா?’

‘எப்படித் தெரியும் உனக்கு?...’

‘தெரியும்...’

‘என் மனசு இன்னுங்கூட உனக்குப் பரிச்சயம்தான்னு நன்னாத் தெரியறது, ராதே’

‘ஐயோ அதில்லே...கிருஷ்ணசாமி மாமா சொல்லித்தான் தெரியும்...’

‘சரி, எப்படியோ தெரியுமோன்னோ? நான் உன் போட்டோவை, ஆத்திரந்திர தனியா எடுத்து ஷோவிலே வச்சுட்டேன்!’...

‘எதுலே தனியா எடுத்தேள்!’

‘உங்கள் இரண்டு பேர் போட்டோவிலிருந்துதான்! ஒரு ‘ப்ரூப்’ வேண்டாம்னான் உன் ‘ஹஸ்பெண்டு’ அது எனக்கு உபயோகப்பட்டுது. இரண்டு பேருமாயிருக்கிறதை ஷோவில்வைக்க ஆசேஷபனையில்லென்னான்...நான் இதற்கும் துணிஞ்சுட்டேன்...’


‘அக்ரமமில்லேயா?’

‘என்ன அக்ரமம்? நான் கஷ்டப்பட்டு, அந்த ஒரே ஒரு மாந்தோப்பு க்ரூப் போட்டோவிலிருந்து நம்ப இரண்டு பேர் படமும் வெட்டி எடுத்து சேர்த்து ஒட்டி பெரிசுபண்ணி காத்துக் கிடந்து உன்னை வழி மறிச்சு கையிலே கொடுத்தேனே...அதை ரொம்ப அலக்ஷியமா கிழிச்சுப் போட்டயே, அது அக்கிரமமில்லே! நீ அத்தனை துணிஞ்சபொழுது, நான் மட்டும் இதுக்குப் பயப்படுவேனா?...எனக்கு அந்த ஆத்திரம் தீரல்லே! உன்னை என்னோடு போட்டோவிலே சேர்த்தது போச்சு...ஆனால் உன்னை அவனிடமிருந்து பிரித்துப் பகிரங்கப்படுத்தினதே திருப்தி’...

‘அது பிரயோஜனமில்லே! அவர் போட்டோவோடு இன்னொரு பெண்ணோட போட்டோவைப் பிணைச்சாலாவது கொஞ்சம் அர்த்தமுண்டு... ஆனால்...இதனாலெல்லாம் எங்கள் உறவுவிட்டுப் போயிடாது...’

“ஓஹோ!”

“ஆமாம்...பின்னே?...ஆனால் கூட என் தனிப்படத்தை ஸ்டுடியோ மானேஜரிடம் சொல்லி எடுத்துடறதாகத்தான் உத்தேசம்...”





“எடுக்கலாம்...ஆனால் என் புகையற மனசை இப்படி ஒரு மாசகாலமாவது திருப்திபடுத்தியாச்சே அது போதும் இப்போதைக்கு இன்னும் புகையறதுதான் ஆனால் கொஞ்ச நாள் கழித்துத்தான் உருவெடுக்கும்”

“புகைப்படமாகவே வா?”

குறு குறுப்புடன் சட்டென அவளைக் கூர்ந்துபார்த்தான் நாராயணன்! இத்தனை நேரம் தன்னைப்பற்றியே ஆவேசமுடன் பேசி வந்தவன்‘ அவள் முகத்தை உறுத்து நோக்கவில்லை.

‘என்ன? புகைப்படம்! சரியாயிருக்கே வார்த்தை! நீ கெட்டிக்காரிதான் ராதை!’ என்றான் உரத்து பிறகு, தணிந்த குரலில், “ராதே! நமக்குக் கல்யாணம் பண்ணலாம்னு பெரியவா நினைச்சிண்டிருந்த நாளிலே நாம் ரொம்பப் பேசினதேயில்லே. கல்யாணப்பேச்சு நின்னப்புறம், பேசணும்னு எனக்கு ஆசை...ஆனால் நீ மறைஞ்சு மறைஞ்சு போவாய், இத்தனை வருஷப் பழக்கத்துலே நாம் இப்பத்தான் நிறைய “பேசியிருக்கோம்”—

ராதை பேசவுமில்லே: பார்க்கவுமில்லே. ஆனால் அவன் அதைக் கவனிக்கவில்லை. கடுங்கோடையிலும் வரளாமல், வளர, தனக்குப் பனிக்கட்டிகளை உபயோகப்படுத்திக் கொள்ளும் ஜீவநதி போல,......நாராயணனின் மதியும் ஜீவ மதியாகி, ராதையின் சொற்பொறிகளைக் கேட்டுக்கலங்கி விடாமல்,......அவனுடைய உறைந்துபோன எண்ணம், பனிக்கட்டிபோல, உறுதியும் தூய்மையுமே நிறைந்ததானாலும் தற்போது மௌனம் சாதிப்பதையே பயன்படுத்திக் கொண்டுவிட்டது-வார்த்தைகளை ஓடவிட்டது.

“உனக்குக் கல்யாணம்னு தெரிஞ்சதும் நான் எப்படியெல்லாம் வேதனைப் பட்டேன் தெரியுமா? நமக்கு இரண்டு பேருக்கும் கல்யாணமானால் என் கைக் காமிராவை வேறே யாரிடம் கொடுத்து நம் கல்யாணப் போட்டோக்களை தினுசு தினுசாக எடுக்கச் சொல்வது என்று முதலில் கவலைப்பட்டுண்டிருந்தேன், அதற்கப்புறம் உனக்குக் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது என்று தெரிந்ததும் எனக்கு, அந்தச் சமயத்திலே கல்யாணத்துக்கு வந்து, முகூர்த்த சமயம் அவனைத் தரதரன்னு வெளியிலே இழுத்து, நான் வந்து உன்னண்டை நின்னுண்டு, அவன் கையிலேயே காமிராவைக் கொடுத்து நம்மை போட்டோ பிடிக்கச் சொல்லணும்னு ஆத்திரமாய் வந்தது...’ என்றான் நாராயணன்.

“அவருக்குப் பாவம்...போட்டோ விஷயமே தெரியாது!’ என்றாள் மெல்ல ராதை, இப்போது.

‘பாவம், என்ன பாவம்! நான் கஷ்டம்பட்டு ஜோடி சேர்த்த படத்தை



கிழிச்சுப்போட்டயே!...பாவப்பட்டாயா?’

‘பாவப்பட்டிருந்தால்தான் பாவம்! அப்போ எங்கள் கல்யாணம் நடந்தாச்சு! எங்களிருவரையும் எல்லோரும் ஜோடி சேர்த்திருக்காளே அதைப் பிரிக்கப் பார்க்கிறேளே...உங்களுக்கு என்ன உரிமை?’

துணிச்சலை வரவழைத்துக்கொண்டு அவனைத் திகைக்கச் செய்யணுமென்றே பேசிய ராதையின் சொற்கதிர்களின் தகிப்பு, நாராணனின் பாதங்களையும் சுட்டது,

‘உரிமை பறிபோன புகைச்சால் தான் நான் வரேன் ராதை!’ எனக் கூறிவிட்டுக் கிளம்பிவிட்டான்

சூரியனைப்போலவே ராதையும், கடமையுணர்ச்சி மேல்நோக்கி நிற்க, அனுதாப உணர்ச்சி குறைந்து காண, மெல்ல, தலையை சுவரில் சாய்த்தவாறு நின்றாள்.

திடீரென்று வாசற்புறம் சலனம். வாயிற்படி இறங்கிக்கொண்டிருந்த நாராயணனை, இரண்டு புருஷக் கரங்கள் தோள் பிடித்துத் தடுத்து நிறுத்தின...ராதை பார்த்தாள்...ஆ...அது ரகு!

‘வாப்பா, உள்ளே!’ ரகு நாராயணனை உள்ளே அழைத்து வந்துவிட்டான்!

‘ராதை! நான் இவரைப் பார்க்கத் தானே கிளம்பினேன். வழியிலே மாமாவுக்கு வேறொரு ‘எங்கேஜ்மெண்ட்’ நினைவு வந்தது...அதனாலே நான் திரும்பிவிட்டேன் சீக்கிரமாகவே! இங்கே வந்ததே நல்லதாப் போச்சு!’ என்றான் மனைவியிடம்.

கலங்கி விழித்து ராதை, ‘சரி, போங்களேன்!’ என்று சொல்லிவிட்டு நகரப் பார்த்தாள்.

‘ராதே உங்களூர் மாந்தோப்பும் போட்டோவில் இவர் இருக்கார் போலிருக்கு! இல்லேயோ?’ என்று யோசிப்பவன்போல கேட்ட ரகு, ‘எங்கே, அதைக்கொண்டு வா, பார்க்கலாம்!’ என்றான்.

‘இப்போ இல்லேயே அது!’

‘உம், இருக்கும்! உன் ஆல்பம்லே! நினைவில்லேயா ஆல்பமையே எடுத்துண்டுவாயேன்...போ...’

அவன் பேச்சைக் கேட்பதுதான் அப்போது உசிதம்போல் எண்ணிய ராதை, போனாள்.

'மிஸ்டர் நாராயணன்...இவளுக்குப் பாவம் போட்டோ ஆர்வம் ரொம்ப... நான் அதற்கு நேர் விரோதம் என்று சொல்லனும்...ஆனுல் இப்பப்போ... இரண்டுபேர் மனசும் பரஸ்பரம் மாறிவரது...''

இதற்குள் ராதை ஆல்பம் கொணர்ந்து தந்தாள். அதைத் திறந்து ஒரு படம் கிழித்தான் ரகு 'சார், இந்த மாங்தோப்பு க்ரூப் போட்டோவை எடுத்துண்டு போகனும் நீங்கள் முந்தி இவள் கிழிச்சுப்போட்டாளே அந்த மாதிரிப் படம் ஒன்றைத் தயார் செய்து' நீங்கள் வைத்துக் கொள்ளனும்...எனக்கு ஒரு காப்பி தர முடியுமாஞலும் ஆக்ஷேபணையில்லை...அசட்டுத் தனமாய் அவள் கிழித்துவிட்டதற்கு...மன்னிக்கவேண்டும்...' என்று கூறி படத்தைநீட்டினுன் நாராயணனிடம்

'என்ன, இப்படிச் சொல்றேள்!' என்று கேட்டு புருவங்களைச் சுளித்தாள் ராதை நாராயணன் திகைத்துப் போயிருந்தான்.

'ஏன், சொல்லக்கூடாதா? நீ அவர் மனசிலே இருக்கும்பொழுது, போட்டோவிலே அவர்கூட இருக்கக் கூடாதா? அவர் மட்டும், அதை, தனக்காக தனியாய், தன் ஆத்மதிருப்திக்காக வைத்திருக்கப் போகிறுர். இருக்கட்டுமே! அவருக்கு ஒரு கல்யாணம் என்று ஆகிவிட்டால் தன்னுலே அவரே அதைக் கிழித்துப் போட்டு விடுவார் அதுவரைக்கும் அவர் மனதிலே புகைச்சல் இருப்பானேன் இந்தப் புகைப்படம் அந்தப் புகைச்சலைத் தணிக்கட்டுமே!''

இத்தனை நேரமும் புகைப்படத்திற்கு நிற்பவனுக இருந்த நாராயணன் துடிப்புடன் எழுந்தான்.

''சார்! நீங்கள் 'டிராமா' மாதிரி நடத்துகிறீர்கள், நடிக்கிறீர்கள்...... எனக்கு ஒன்றுமே புரியவில்லை உங்கள் இருவரையும் பார்த்து......ராதையும் கலங்காமல் சொன்னுள். உங்கள் படத்தை வேருெரு பெண் படத்துடன் பிணைத்து வைத்தால்தான் பிரயோசனம் உண்டாம் எனக்கு..அப்படியும் ஒன்றும் மோசமாகி விடாதாம்......உங்கள் இருவருக்கும் உள்ளூர அன்பே கிடையாதோ...அல்லது மிதமிஞ்சிய, அளவு கடந்த அன்போ புரியவில்லை! நான் வருகிறேன்!''

இலையுதிர் காலத்திலே தானுகவே இலைகளை யுதிர்த்து வியப்புக்கும் அனுதாபத்துக்கும் இலக்காகி நிற்கும் வெற்று மரத்தின் நிலையிலே, நாராயணன், அவர்கள் கண் முன்னே ஒரு கணம் காட்சி யளித்தான். அவனுக்கும் புது வாழ்வு உண்டு என்ற ஆறுதல் ரகுவுக்கும் ராதைக்கும் லேசாத் தோன்றியது.

நாராயணன் போய்விட்டான்: ராதை அலண்டுபோய் உட்கார்ந்து விட்டாள். மூன்றும் மனுஷன் இல்லாத நிலையிலே கணவனிடமிருந்து என்ன ஏச்சுப் பேச்சுப் பாயுமோ?

'ராதை!' என மெல்ல அழைத்த வாறே மனைவி பக்கம் திரும்பினுன் ரகு.

'டாண்டான்னு ஆணி அறைந்த மாதிரி பேசிப் பதில்கொடுத்து அவனை மாட்டிவச்சூட்டயே...நீ கடைசியிலே பேசினதை அப்படியே பொன்னோலையில், பொன்னெழுத்துக்களால் பொறித்து, பொற்சட்டமிட்டு...உம், சுவரிலே மாட்டவேண்டும், ராதே!' என்றுன்.

'அப்போ எப்படியிருக்கும்...... ரொம்ப மிதமிஞ்சின சமத்தா, தியாகமா, பேசினேளே அப்படியிருக்கும்' என மெல்ல முணுமுணுத்தாள் ராதை. ஆனுல் அவள்முகம் அமைதியைத்தான் புலப்படுத்திற்று.

'ஏன்? நான் சொன்னதுதான் சரி ராதை! சில சில விஷயங்களை என்ஞல் ஊகிக்க முடியாது!'

ராதை கணவனைச் சட்டென ஏறிட்டுப் பார்த்தாள்...'என் மனசைவிட உங்கள் மனசுதான் நல்ல மனசு,' என்று கூறத்துடித்தது அவள் நெஞ்சம். ஆனுல் அவள் சொன்னது வேறு.... நீங்கள் என்னமோ திடீர்னு ஒரொரு சமயம் பேசறதைப் பார்த்தால் பயங்கரமாய் பயப்படறமாதிரி தான் இருக்கு...ஆனுல் உடனே சட்டுனு வித்தியாசப்பட்டுறது பேச்சு... உங்கள் மனசை எப்படி போட்டோ பிடிக்கிறது?.........உங்கள் மனசே போட்டோ நெகடிவ் மாதிரியும், போட்டோ காப்பி மாதிரியும் இருக்கே...' என்றுள் முறுவல்காட்டி.

'அதெல்லாம் நராயணன் போட்டோ பிடிச்சாச்சம்மா, என் மனசை!.....அதிருக்கட்டும் ராதே..... உன் மனசு?...நீ அவனைப் பண்ணிண்டு, நானே உன்னண்டை இந்த மாதிரி வந்திருந்தால், எனக்கும் இந்த பெப்பேதானே? நினைச்சால் பயமாயிருக்குடிம்மா!'

'பின்னே என்னவாம்?' ராதை ஓடிவிட்டாள். இங்கே ரகுவின் கண் முன்னின்று ஓடின ராதை, அங்கே நாராயணன் மனதிலிருந்தும் ஓடினுள். இங்கே மறுவினுடி கணவனுடனே இணைந்துபோன அவள், அங்கேயும், நாராயணனின் தெளிந்த மனதிலும், கணவனுடனே இணைந்த வாறே தோன்றினுள்.

நாராயணனின் மனச்சாட்சி இட்ட சட்டத்தினிடையே பதிந்து போய், அவன் உள்ளத்திலே கணவனுடனே கொலுவமர்ந்தாள்.

'ரகுபதி, ராதை இருவரும் இருக்கும் போட்டோ ஒன்று வைத்துக் கொண்டு போற்றவேணும்!' என்ற ஆசை இப்பொழுது மூண்டது அவன் நெஞ்சிலே அவனுடைய ஆசை புகையவில்லை. எளிதிலே கனிந்தது.


வைத்திய ரத்ன
பு. ராமநாத சாஸ்திரியாரின்
ஆனந்த பற்பொடி (Reg)
(40 வருஷங்களாகப் புகழ்பெற்றது)



சரீரத்துக்குவாசற்படியான வாய், பற்கள் இவைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் பயங்கரமான பற்பல விஷக்கிருமிகளை நாசம் செய்வதுடன் பற்களின் வேர்களைப் பலப்படுத்தி, ஒழுங்காயும். அழகாயும் ரக்ஷிப்பதில் இதுஒன்றுதான் சிறந்தது. டப்பி 1-க்கு அணு 4. டஜன் 1 ரூ 3.

ஆனந்த கூந்தல் தைலம் (Regd.)
அசல் ஜீவசத்துக்கள் நிறைந்த ஆயுர்வேத ஔஷதங்கள் கொண்டே தயார் செய்திருக்கிறபடியால், மயிர்கொட்டு தலை நிறுத்தி பரிமள வாசனையுடன் கூந்தல் கருத்து நீண்டு வளரும்
புட்டி 1-க்கு ரூ 1—4—0
ஸகலத்துக்கும் வி. பி. வேறு கேட்லாக் இனும்
வைத்திய ஸித்தாச்ரமம்,
பஜார் லேன் மயிலாப்பூர், மதராஸ்




ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.
பிரபல ஜோதிஷர்
★



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை
★
பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
தபோ நிதி,
தியாகராய நகர், மதராஸ் 17.
தபால் பெட்டி 1417,




# கலா மண்டபம்

## நாடகக் கலை-5

[ சாண்டில்யன் ]

மனித உள்ளம் கெடுதலைச் சட்டென்று பிடித்துக்கொள்ளும் தன்மை வாய்ந்தது. ஆகவே மனிதனின் கீழ்த்தர உணர்ச்சிகளை எந்த விதத்திலும் கிளறுவது விரும்பத்தக்க விஷயமல்ல அப்படியிருக்க விபசாரத்தனத்துக்கு சப்பைக்கட்டு கட்டி எழுதுவது மிகவும் பிசகான காரியம், அப்படி எழுதுவதால் நாம் சமூகத்துக்குப் பெருந் தீங்கைச் செய்தவர்களாகிரோம். டி. கே. எஸ். சகோதரர்கள் நடிக்கும் 'மனிதன்' நாடகத்தில் ஒரு பெண் கற்பு வழுவுகிறுள் எப்படி கற்பிலிருந்து நழுவுகிறுள்? கணவன் ஊரிலில்லை அந்த வீட்டிலேயே வசிக்கிறுன் ஒரு சைத்ரிகன் அவனும் அவளும் ஒருநாள் இரவு தோட்டத்தில் சந்திக்கிறுர்கள். இயற்கையின் வேகம் அவர்களை இழுக்கிறது ஆகையால் பெண் நெறி தவறுகிறுள். இந்தக் கதையை இரண்டுவிதமாகக் கையாளலாம் இயற்கையின் உணர்ச்சி வேகமாக இழுக்கும்போதும் கற்பின் உறுதியால் கதாநாயகி இயற்கையின் சக்திகளை ஜெயிக்கிறுள்: சைத்ரிகன் தன் கடமையிலுள்ள கருத்தால் இந்திரியங்களை ஜெயிக்கிறுன்; என்று கதையைக் கையாளலாம். அல்லது கற்பு தவறிவிட்டாள்; ஆகையால், நெறி இழந்தவள் என்று கண்டிக்கலாம்.

இரண்டுமில்லாமல், உறுதியைக் கைவிட்டு இந்திரியங்களின் கீழ்த்தர உணர்ச்சிகளுக்கு இடங் கொடுத்த பெண்களைத் தூய்மையாகக் காட்ட முயல்வதில் அர்த்தமென்ன இருக்கிறது? துஷ்டச் செய்கைக்கு இயற்கையின் தலைமேல் பழிபோடுவது ஒரு கெட்டிக்காரத்தனமா? அப்படியானுல் உலகத்தில் எந்தக் கெட்ட விஷயத்துக்குத்தான் நியாயம் கற்பிக்கமுடியாது? ஒருவன் கள்ளைக் குடிக்கிறுன் என்று வைத்துக் கொள்வோம். கள் குடித்தது பிசகு என்று கண்டிக்கலாம். அப்படிக் கண்டித்துதான் மகாத்மாஜி மதுவிலக்கைக் கொண்டுவந்தார். அப்படிக் கண்டிக்காமல் ''அவன் என்ன செய்வான்? அந்த இயற்கைச் சோலையிலே, தென்னை மரங்களின் மட்டைகள் காற்றில் அசைந்து அசைந்து வா வா என்று அழைத்த அன்பின் வரவேற்பிலே, பாளையில் கட்டித் தொங்கிக்கொண்டிருந்த மட்பாண்டத்தில் தென்னை அன்னை சொட்டு சொட்டாக வடித்துக்கொண்டிருந்த இன்பத் தேனிலே மதிமயங்கி குடித்துவிட்டான் என்று கனஜோராக எழுதி ''ஆகையால் மனிதா, அவனை மன்னித்துவிடு'' என்று ஆதரவு காட்டலாம். இயற்கையின் தலைமேல் எந்தப் பழியையும் போடலாம் இயற்கை யளிக்காவிட்டால் கள்ளோ, திராட்சை ரஸமோ கிடைக்காது இயற்கை கோபத்தை உண்டாக்கவிட்டால் ஒருவன் இன்னொருவனைக் கொல்லமாட்டான், வயிறு பசிக்காவிட்டால், கடையிலுள்ள வைரம் இயற்கையன்னை கொடுத்த கண்ணைப் பறிக்காவிட்டால் யாரும் திருடமாட்டார்கள் ஆகையால் உலகத்தில் எல்லாவற்றையுமே மன்னித்துவிடலாம். கெடுதல் என்பதொன்று இந்த உலகத்தில் இல்லையென்றே சாதித்துவிடலாம் அதைச் செய்வதா எழுத்தாளன் வேலை?

தவறும் உணர்ச்சிகளுக்கு சாட்டை கொடுப்பதல்லவா அவன் செய்யவேண்டிய வேலை. அதிருக்கட்டும் 'மனிதனைப்' பார்க்கும் இளம் பெண்களின் மனப் போக்கு எப்படி பாதிக்கப்படும்? நாடகம் பார்க்கும் பெண்களில் யாராவது ஒருவள் நெறி தவறி அவள் கணவன் மன்னிக்காவிட்டால் 'சீ! நீ ஒருமனிதனு?' என்று கோபமல்லவா அவளுக்கு ஏற்படும் அடிப்படையாகப் பார்க்கப்போனுல் விபசாரம் இயற்கையால் தூண்டப்பட்ட ஒரு நடவடிக்கையே தவிர அப்படி ஒன்றும் ரொம்ப கெடுதலான விஷயமில்லை என்றல்லவா தோன்றிவிடும்?

மறுமலர்ச்சி எழுத்தாளன் புரியும் ஆபத்துகளில் இது ஒன்று. அடுத்தபடி அவன் எழுத்துக்களில் தொனிப்பதுஜாதி உணர்ச்சி இந்த விஷம் ஜனங்களிடம் பூரணமாகப் பரவி வருகிறது. இந்தமாதிரி விஷவித்துக்களை விதைப்பது சுலபம் ஆனுல் வேர் விட்டபின் விஷ விருக்ஷத்தைக் களைந்தெறிவது கஷ்டம். சினிமாக் கலையைப் பற்றி நான் எழுதியுள்ள கட்டுரைகளில் சினிமா முதலாளிகளுக்குத் தெரிந்த ஒரே ஹாஸ்யம் பிராமணன் குடுமியில் பூ சுத்திவிடுவதும் அவனைத் தேவடியாள் வீட்டுக்கு அனுப்புவதுந் தானென்று எழுதியிருந்தேன். ஜாதி உணர்ச்சியைக் குறிக்கும் அந்த மட்ட ஹாஸ்யம் நாடக மேடையிலும் பூரணமாகக் குடிபுகுந்திருக்கிறது பழைய நாடக மேடைதான் ஏதோ கலைத் தன்மையற்றிருந்ததென்று நினைக்க வேண்டாம் இப்பொழுதுள்ள நாடக மேடையிலும் இந்த விசித்திரத்தைப் பார்த்தேன்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு சென்னை நாடகக் கழகத்தினுதரவில் காங்கிரஸ் மாளிகை மைதானத்தில் நடந்த 'பதி பக்தி' என்ற நாடகத்தைப் பார்த்தேன். பதி பக்தியில் இரண்டு பிராம்மணர்கள் வருகிறுர்கள் ஒருவன் குருக்கள் குடி வகையரா சப்ளை செய்யும் ஹோட்டலுக்கு வந்து ஒரு பாட்டில் வொயினைக் குடிக்கிறுன் ஆனுல் குருக்கள் தலையில் பூ சூட்டியிருந்தது மார்பில் சந்தனம். கையில் விசிறி மற்ற எல்லாம் பரிஷ்காரம். ஆனுல் அவன் குடிக்கிறுன் என்று காட்டி நாடகம் ஆடியவர்கள் சென்னை ரஸிகமகா ஜனங்களை மகிழ்வித்தார்கள். அதில் வரும் இன்னொரு பிராம்மணன் டாபர் மாமா வேலை செய்பவன் அவன் தன் பிரதாபத்தையெல்லாம் அளக்கிறுன். அவற்றை எழுத கை கூசுவதால் எழுதவில்லை

இந்த நாடகத்தைப் பார்த்தபோது இரண்டு மூன்று எண்ணங்கள் என் மனத்தில் எழுந்தன முதலாவது சினிமா பிடிப்பதிலுள்ள ஸென்ஸார் விதிகள். சர்க்கார் சமீபத்தில் விதித்துள்ள விதிகளின்படி குடிப்பதை பகிரங்கமாகப் பிலிமில் காட்டக் கூடாது கிளாஸில்சாராயத்தைஊற்றி உறிஞ்சுவதுபோல் காட்டக்கூடாது. அந்தமாதிரி பகுதிகளைச் சேர்த்ததற்காகப் பல படங்கள் ஸென்ஸார்களால் வெட்டப்பட்டன. ஆனுல்

'பதி பக்தி' நாடகத்தில் இரண்டாம் காட்சியில் பத்துபேர் கிளாஸ் கிளாஸாய் வைத்துக் குடிப்பதைக் காட்டினார்கள் "இப்படிக் காட்டலாமா? சினிமாவுக்கு உள்ள தடை நாடகத்துக்குக் கிடையாதா? இனிமேல் நாடகத்துக்கும் ஸென்ஸார் போட வேண்டியதுதானா?" என்று யோசித்தான் மதுவிலக்கைக் கொண்டு வந்த காங்கிரஸ் சர்க்கார் ஆட்சி புரியும் சென்னையில் அதுவும் காங்கிரஸ் மைதானத்திலேயே அதுவும் அவர்கள் விதிகளை மீறும்வகையிலேயே, குடிக் காட்சியைக் காட்டுவது நியாயமான செய்கையா? என்றும் யோசித்தேன். நாடகம் சினிமாவைவிட பலமில்லாதாகையால் இதில் காட்டினால் பாதகமில்லை என்று முடிவில் திருப்தி செய்துகொள்ளவேண்டியதாயிற்று.

இது ஒருபுறமிருக்க நமது நாடகக்காரர்களுக்கு மட்ட ஹாஸ்யத்தைத் தவிர வேறு எதுவும் தெரியாதா? பிராம்மணன் செய்யும் அக்ரமங்களைக் கண்டிக்க வேண்டாமென்று சொல்லவில்லை அவசியம் கண்டிக்க வேண்டும் ஆனால் இந்தக் கெட்டச் செய்கைகளை பிராம்மணனைத் தவிர வேறு யாரும் செய்வதில்லையா? மற்றவர்கள் குடித்தால் ஹாஸ்ய ரஸம் வராதென்று நாடகக்காரர்கள் நினைக்கிறார்களா? குடியிலும் இந்த பேதமேன்?

யார் குடித்தாலும் தவறென்று ஒரு வழியாகக் கண்டித்துவிடலாமே ஜாதி மத பேதம் கூடாதென்று வெளியில் சொல்லிக்கொண்டு அந்தக்கரண சுத்தியில்லாமல் பிராம்மணதாசிக் கிருகப்பிரவேச, கள்குடி ஹாஸ்ய ரகங்களைக் காட்டுவதில் அர்த்தமேதேனும் உண்டா?

எழுத்தாளன் மனது சுத்தமில்லாமலிருக்கிறது பகிரங்கமாகத் தான் நினைத்ததை எடுத்துச்சொல்ல தைரியமுமில்லை. சுயமரியாதைக்காரர்களாவது அபிப்பிராயத்தை தைரியமாக எடுத்துச் சொல்லுகிறார்கள் ஆனால் சுயமரியாதை என்று பகிரங்கமாக ஒப்புக்கொள்ள இஷ்டப்பட்டாலும் உள்ளூர சுயமரியாதை நோக்கங்கள் உள்ள சில எழுத்தாளர்கள் இரண்டாங் கெட்டானாகத் திண்டாடி புரியாமல் கதைகளை எழுதிவிடுகிறார்கள். புரியும் சுயமரியாதைக்கே தமிழ் நாட்டில் செலாவணி இல்லை. புரியாத சுயமரியாதைக்கு இடமேது? இதுவரையில் ஜஸ்டிஸ் கட்சி சுய மரியாதைக் கட்சிகள் எவ்வளவு பத்திரிகைகளை யுகாந்திரமாக அச்சடித்தன. ஜனங்கள் வாங்கினார்களா? ஏன் வாங்கவில்லை? ஏன் அந்தப்பத்திரிகைகள் இவாலாயின?

காரணம் பிரமாதமல்ல இந்தக் கொள்கைகளை முதல் தடவை சொல்லும்போது பிரமாதமாகத் தெரிகிறது ஆனால் இரண்டாந் தடவை கேட்டால் கசந்துவிடுகிறது. நமது தெருவில் ஒருவன் கெட்டுவிடுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள் அவன் கெட்டுவிட்டான் என்று ஜனங்கள் முதலில் 'குசு குசு' வென்று பேசுவார்கள் இரண்டு நாள் கழித்தால் அதைப் பற்றி பேச்சிருக்காது. மட்டரகக் கொள்கைகள், ஹாஸ்யங்கள் எல்லாவற்றிற்கும் இதுதான் கதி.

இப்படிக் குழம்பிய எழுத்துக்களாலும் கீழ்ப்பட்ட கொள்கைகளாலும் நல்ல நாடகங்கள் வருவது அபூர்வமாகிவிட்டது ஆகையால் அது கலையாக விளங்கவில்லை நாடக பாத்திரங்களின் உணர்ச்சிகளில் ரஸிகர்கள் லயிக்கவில்லை 'பதிபக்தி' நாடகத்தின் கடைசிக் காட்சிக்கு முந்திய காட்சியில் கதாநாயகனாக நடித்த ஸ்ரீ கே பி. கேசவன் மிகவும் அயர்ந்திருந்தார் ஒரு ரஸிகப் பிரமுகர்சோடாபாட்டிலை உடைத்து எடுத்துக்கொண்டு "மிஸ்டர் கேசவன், இதை சாப்பிடுங்க' என்று மேடை மேல் ஏறிவிட்டார் 'மேடைமேலிருப்பவர் கேசவனல்ல, ராஜசேகர முதலியார்; அவருக்கு நாம் சோடா கொடுக்கக்கூடாது" என்று உணர்வு இன்னும் ஜனங்களுக்கு ஏற்படவில்லை நாடக பாத்திரமல்லாதவர்கள் நாடகத்தில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது என்ற உணர்ச்சி வரவில்லை.

இத்தனை கட்டுரைகளிலும் நாடக மேடை நசித்ததற்கு நான் கூறிய காரணங்கள் இவைதான்:—

1. அது ஒரு நல்ல கலையாக தமிழ் நாட்டில் எப்பொழுதும் இருந்ததில்லை

2. யந்திர வசதியுடன் வந்த சினிமாவில் இதைவிட சில உயர்ந்த சாதனங்கள் இருப்பதால் ஜனங்கள் சினிமாவைப் பார்ப்பதில் அதிக விருப்பம் காட்டுகிறார்கள்

3 அந்தக்கரண சுத்தியுடன் எழுதப்படும் நாடகங்கள் மிகக் குறைவாயிருக்கின்றன

இப்பொழுது திறமையான நடிகர்கள் நாடக மேடையில் இருக்கிறார்கள் டி. கே எஸ் சகோதரர்கள் அவர்களுடன் நடிக்கும் எம். எஸ். திரௌபதி இவர்கள் நடிப்பில் அப்பழுக்கு சொல்லமுடியாது நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியைப்பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

இவர்களையெல்லாம் வைத்து நல்ல நாடகங்கள் நடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் புதுக் கதைகள் ஒழுங்காயில்லாவிட்டால் புராணக் கதைகளையே நடிக்கட்டும் புராணங்களை விடப் பிரமாதமாக இப்பொழுது யாரும் எழுதிப் புரட்டிவிடவில்லை.


நல்ல நாடகங்களை நடிக்கவேண்டும். நல்ல என்றால் நல்ல கொள்கையுள்ள நாடகங்களைத்தான் சொல்கிறேன். நாடகக் கட்டணங்களை இப்பொழுது நாடகக்கழகம் வைத்திருப்பதுபோல் குறைவாகவே வைக்கவேண்டும் முடியுமானால் இன்னும் கூடக் குறைக்கலாம் 4 அணா, இரண்டணா கிளாஸ்கள் போதும். நாடகமேடையை நல்ல கொள்கைகளுக்கு ஒரு பிரசார மேடையாக வைத்துக்கொள்ளவேண்டும் நல்ல கொள்கைகளை நாடகமாடுவதற்காக சர்க்காரிடமிருந்து பண உதவி கேட்பதும் தவறாகாது எவ்வளவோ கஷ்டத்தோடு இந்த நல்ல காரியத்துக்கும் பணம் கொடுங்கள் என்று கேட்கலாம்

இப்படிச்செய்தால்தான் நாடகத்துக்குக் கும்பலை வரவழைக்கலாம். சுதேசி பொருட்காட்சியின் போதும், பிறகும் நாடகங்கள் ஜனங்களின் ஆதரவை அடைந்ததற்குக் குறைந்த கட்டணம் ஒரு முக்கிய காரணம். இன்னொரு காரணத்தையும் நாம் மறக்கக்கூடாது நாடகங்களுக்கு இடையிடையே சினிமாவில் பிராபல்யமடைந்த லலிதா, பத்மினி, வைஜயந்திமாலா முதலியவர்களை சதிராடவிட்டதும் கும்பல் வந்ததற்குக் காரணம்.

நாடகமாகவே போட்டு, குறைந்த கட்டணம் வைத்து, நாடகத்திலும் ஒரு பிரியத்தை ஜனங்களுக்கு உண்டாக்குவது டி. கே. ஷண்முகம், சாரங்கபாணி போன்றவர்கள் உள்ள நாடகக் கழகத்துக்கு ஒரு பிரமாதமல்ல அப்படிச் செய்கிறார்களா என்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

முற்றும்.





ஆர்தர் ராங்கின் தமிழ்த் தயாரிப்பான 'நீலக்கடலில்' நடிக்கும் ஜீன் ஸிம்மன்ஸ்.

நமது பம்பாய்க் கடிதம்

## நடிக, நடிகைகள் படமுதலாளிகளாகும் காரணம்

சினிமா நடிக நடிகைகள் தற்காலத்தில் பட முதலாளிகளாகவும், படம் தயாரிப்பவர்களாகவும், டைரக்டர்களாகவும் மாறுவது சர்வ சாதாரணமாகப் போய்விட்டது இப்பமுக்கம், மற்ற இடங்களைக் காட்டிலும், பம்பாயில் வரவர அதிகமாகிக்கொண்டே வருகிறது இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம் ஒன்று நடிக நடிகைகள் தங்கள் பூர்ண நடிப்பின் திறமையை, மற்றவர்களின் படங்களில் காட்ட சரியான சந்தர்ப்பம் ஏற்படாததால், அவர்களே படங்களைத் தயார்செய்தால், அவைகளில், தங்கள் மனச்சாந்தி அடையும்வரையில் நடிப்புக்கலையைச் சோபிக்கும்படி செய்யலாம் என்பது. மற்றொன்று, நடித்து கொஞ்சம் கொஞ்சமாக சம்பாதிப்பதை விட, படம் தயாரிப்பவர்களானால், ஒரேயடியாக நடிப்புத் தொழிலைக் காட்டிலும் நன்றாக சம்பாதிக்கலாமென்பது

நடிக நடிகைகள் ஏன் பட முதலாளிகளாகவும் டைரக்டர்களாகவும் மாறுகிறார்கள் என்னும் பிரச்னையை ஆராய்ந்து பார்ப்போமேயானால், மேற்சொன்ன இரண்டு காரணங்களில் முதற்காரணத்தினால்தான் இம்மாறுதல் ஏற்படுகிறதென்று தெரியவரும் படம் தயாரிப்பதென்பது விளையாட்டில்லை இத்தொழிலிலிருக்கும் சங்கடமும். கஷ்டமும் எந்தத் தொழிலிலும் இல்லை ஆகையால். நடிப்புக் கலைத் தொண்டர்கள் தங்கள் மனோபீஷ்டப்படி தங்கள் நடிப்புக் கலையை அபிவிருத்தி செய்துகொள்வதற்காகவே, கொஞ்சம் பணம் சேர்ந்தவுடன், பட முதலாளிகளாகவும், டைரக்டர்களாகவும் மாறிவிடுகிறார்கள். இவர்களே டைரக்ட்டு செய்யும் படங்களில் இவர்கள் தங்கள் பூர்ண நடிப்புத் திறமையைக் காட்ட எல்லா சந்தர்ப்பமும் இருக்கிறது ஆனால், இவ்விஷயத்தில் பிரதிகூலமும் இருக்கிறது பிரதிகூலம் என்னவென்றால், படம் தயாரிப்பதிலுள்ள கவலையினாலும், மற்ற நடிக நடிகைகளின் நடிப்பிலும், டைரக்ட் செய்வதிலும் ஊக்கம் கொள்வதினால் தங்கள் சொந்த நடிப்பில் அவ்வளவு அக்கறை ஏற்படுவதில்லை படம் தயாரிப்பதிலும், டைரக்ட் செய்வதிலும். நடிப்பிலும், ஒன்றாக நல்ல பெயர் எடுத்திருப்பவர்கள் பம்பாயில் மிகவும் சிலவே.


முதலாவதாக, ஸ்ரீ கிஷோர் ஸாஹுவை திறமை வாய்ந்த நடிகராகவும், டைரக்டராகவும், பட முதலாளியாகவும் சொல்ல வேண்டும் அநேக வருஷங்கள் வரையில் சாதாரண நடிகராயிருந்து. பிறகு டைரக்டராகி, தற்சமயம் ஒரு பெயர்பெற்ற பட முதலாளியாகவும் மாறிவிட்டார் இவருடைய கம்பெனியின் பெயர், ஹிந்துஸ்தான் சித்ரா இவர் இதுவரையில், தன் சொந்த கம்பெனியின் சார்பாக, 'சாவன் ஆயா ரே' ரிம் ஜிம்' என்னும் இரண்டு நல்ல படங்களைத் தயார்செய்தும், அவைகளில் திறமையாக நடித்தும் இருக்கிறார். தற்சமயம், 'பிஜ்லி' என்னும் படத்தை தயார் செய்துவருகிறார்

இரண்டாவதாக, ராஜ்கபூரையும் மிகுந்த திறமை வாய்ந்த நடிகராகவும், டைரக்டராகவும் படமுதலாளியாகவும் சொல்லவேண்டும் இவர் 'ஆர் கே பிலிம்ஸ்' என்று ஒரு கம்பெனியை ஸ்தாபனம் செய்து, இதுவரையில், 'ஆக்' 'பர்ஸாத்' என்னும் இரண்டு அழகிய படங்களைத் தயார் செய்தும் அவைகளில் மிகவும் உருக்கமாகவும் நடித்திருக்கிறார் இவர் தற்சமயம், 'அவரா' என்னும் படத்தைத் தயார் செய்துகொண்டிருக்கிறார் இப்படத்திலும், இவர் ஸ்ரீமதி நர்கிஸ்ஸுடன் நடித்து வருகிறார்.

மிகுந்த அனுபவமுள்ள நடிகரான மோதிலால் சில நாட்களுக்கு முன் பட முதலாளியானார். "எம். பிக்சர்ஸ்" என்று ஒரு கம்பெனியை ஸ்தாபித்து. 'பேவாஸ்' என்னும் படத்தை தயாரிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார். ஜெய்ராஜ் என்னும் நடிகர் பட முதலாளியாக உருக்கொண்டு. இப்பொழுது, சாகா என்னும் படத்தைத் தயார் செய்து வருகிறார் "பரத்மிலாப்", 'ராம ராஜ்யா' என்னும் படங்களில் ராமனாக நடித்த பிரேம் அடீப்பென்பவர், "பிரேம் அடீப் பிக்சர்ஸ்" என்று ஒரு கம்பெனியை ஸ்தாபித்து, ராம் விலாஸ் என்னும் படத்தை தயாரித்து முடித்துவிட்டார். இப்பொழுது அவர் இரண்டு படங்களைத் தயார் செய்து வருவதாக என்னிடம் சென்ற வாரம் சொன்னார் திருலோக்கப்பூர் என்னும் நடிகரும், பட முதலாளியாக மாறிவிட்டார். கெட்டிக்கார நடிகரான யாகுப் என்பவர் படமுதலாளியாகி கெட்ட பெயர்தான் சம்பாதித்துக் கொண்டார் இவரே முதன்மையாக தயாரித்து. டைரக்ட் செய்த "ஆயியே" என்னும் படம் மிகவும் மோசமான படம். ஆகையால், இவர் டைரக்ட் செய்ய லாயக்கில்லை நடிக்கத்தான் முடியுமென்று இங்கிருப்பவர்களெல்லோரும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

நடிகைகளில், பட முதலாளிகளாக மாறினவர்களில், பிரதிமா தாஸ் குப்தா, நர்கிஸ், மதுபாலா, கீதாபல்லி, சோபன சமர்த்து, ஸிதாரா பாரு, முதலியவர்களைக் குறிப்பிட வேண்டும் இவர்களை ஏன் பட முதலாளிகளானீர்கள் என்று கேட்டால், தாங்கள் நடிப்புக் கலைக்கும், நாட்டியக் கலைக்கும் தொண்டு செய்வதாக மார்பைத் தட்டிக்கொள்கிறார்கள்

—தி. மா. ராமச்சந்திரன்.



நடிகை ரேஹனு இருக்கிற யோசனையைப் பார்த்தால் விஷயம் ஏதோ பலமானதென்று தெரிகிறது. 'ஸ்வராஜ் முகி'யில் ஷியாமும் ரேஹனுவும் பிரதம பாகங்களில் நடிக்கிறார்கள்.



## ரஸாயனக்காரர்

(டைரக்டர் க. வேம்பு)

★

விஞ்ஞானவளர்ச்சி அடைந்த இந்தக் காலத்தில் ரஸாயனம் என்ன என தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள் எனச் சொல்லலாம் ஆனால் ரஸாயனம் சினிமா தொழிலில் எப்படி உபயோகப்படுகிறது என்பது தெரியுமா என்பது கொஞ்சம் சந்தேகம்தான்.

கச்சா பிலிம் தயாரிப்புக்கு அவசியம் ரஸாயனமும். ரஸாயனப் பொருள்களும். ரஸாயனக்காரர்கள் தான் கச்சாபிலிம் தயாரிப்பில் முக்கியஸ்தானம் வகிக்கின்றார்கள் ரஸாயனத்தன்மையால்தான் கச்சா பிலிம் படப்பிடிப்பு ஒலிப்பதிவு இரண்டும் சாத்தியமாகிறது ஒளிப்பதிவாளர்களும், ஒலிப்பதிவாளர்களும் கச்சா பிலிம் தன்மையுணர்ந்து கிரகிக்கும் சக்தியை நிர்ணயித்து கையாள கச்சா பிலிம் உற்பத்தியாளர் அவ்வப்போது கச்சா பிலிம் தன்மையும், குணகுணம் முதலியன விவரமாய் தெரிவிக்கும் குறிப்பு விநியோகிப்பதுண்டு அது ரஸாயனக்காரர்களுக்கும் உபயோகமாக இருக்கும்

படத்தொழிலில் ரஸாயனக்காரர் செய்யும் அலுவல் என்ன? கச்சா பிலிம் தயாரிப்புக்கு ரஸாயனம் எப்படி அவசியமோ அதேபோல் பதிவு செய்யப்பட்ட கச்சா பிலிம் கழுவப்படவும், பிரதிகள் தயாரிக்கவும் ரஸாயனப் பொருள்களும் ரஸாயனக்காரர்களும் அவசியம்

உபயோகிக்கப்பட்டுள்ள கச்சா பிலிம் தன்மைக்கும் ரஸாயன திரவத்திற்கும் எந்த அளவில் பொருத்தம் என சோதித்து அதன் (Developer) தன்மைக்கும். வலுவுக்கும் தகுந்த மாதிரி உபயோகிக்கப்பட்ட பிலிம் கழுவப்படும் நேரம் நிச்சயித்து உரிய காலத்தில் முறைப்படி சுத்தம்செய்து படப்பதிவும், ஒலிப்பதிவும் பிரதிகளின் தன்மை, உரு முதலியன நல்ல தோற்றம் தரத்தக்கமுறை கை ஆள வேண்டியவர் ரஸாயன நிபுணர்

ரஸாயனச் சாலையில் உள்ள நிபுணர்களை மூன்று வகையாய் பிரிக்கலாம் 1 இருட்டறையில் Dark Room வேலைசெய்பவர்கள் 2 உலரவைக்கும் இடத்தில் வேலை செய்பவர்கள். 3 ஒளி நிபுணர்கள்

இருட்டறையில் வேலை செய்பவர்கள் மிகவும் ஜாக்ரதையாயும் பொறுமையாயும் வேலை செய்ய வேண்டியவர்கள் இருட்டறையில் பிலிம் கழுவப்படுகிறது. சுருளாக டப்பாவில் அடைக்கப்பட்டிருக்கும் கச்சா பிலிம் கழுவுவதற்கு சாதகமாய் இருட்டில் கழுவ உபயோகப் படுத்தும் பலகையில் சுத்தப்படுத்தப் பட்டு முதலில் தண்ணீரில் நன்கமுக்கி ஸ்நானம் செய்விக்கப்படுகிறது இப்படி ஏன் முதலில் தண்ணீரில் அமுக்கப்படுகிறது என்றால், கச்சா பிலிம் ரஸாயனத் தண்ணீரில் கழுவப்படும்போது எல்லா பாகமும் ஒரே மாதிரியாய் கழுவப்பட வேண்டும் என்பதுதான் காரணம். அப்படி தண்ணீரில் அமுக்கப்படாவிட்டால் சில இடத்தில் காத்து கொப்பளம் (Air Rubles) உண்டாகும் அந்த பாகங்கள் கழுவப்படாமல் தங்கிவிடும் கழுவப்படாமல்விடப்பட்டால் ஒளிப்பதிவாலும் ஒலிப்பதிவாலும், பிரதிகளாலும் பாதிக்கப்படும்

2 ரஸாயன திரவத்தில் எவ்வளவு நேரம் கழுவப்பட வேண்டும் என நிச்சயிக்கப்பட்டதோ அவ்வளவு நேரம் கழுவப்பட்ட பின் வெளியே அனுப்பப்படுகிறது வெளியில் வந்ததும் மீண்டும் பிலிம் நன்கு கழுவப்பட்டு உலரவைக்க சட்டங்களால் செய்யப்பட்ட வட்ட வடிவமான Drum பீப்பாய் போன்ற சாதனத்தில் கோடு விழாமல் நளினமாய் சுத்தி, காத்தாடிகளின் உதவியால் உலருவதற்கு சுத்தப்படுத்தப்படுகிறது நன்கு உலர்ந்தபின் பிலிமை பக்குவமாய் சுத்திமேல் பார்வையாளரிடம் அனுப்பப்படும்.

3 இவைகளுக்கு பின்தான் அவசரப் பிரதி எடுக்கப்படும் பிரதி எடுக்கும்போது, பதிவு செய்யப்பட்ட Piv & Sound Negative படமும், சப்தமும் ஒன்று சேர்த்து 'Synchronise) செய்யப்பட்டு ஒளி நிபுணரிடம் கொடுக்கப்படுகிறது (Lighting) ஒளி நிபுணர் படத்தின் தன்மைக்கு தக்கவாறு என்ன அளவு வெளிச்சம் கொடுக்க வேண்டும் என தீர்மானித்து குறித்து அச்சடிப்பவரிடம் ஒப்படைக்கிறார் (Printer)

அச்சடிப்பவர் குறிப்புப்படி அச்சடித்து இருட்டறைக்கு அனுப்புகிறார். அச்சடிக்கப்பட்ட சுருளில் சப்தமும் படமும் ஒன்றாய் அமைந்து இருக்கும் இது கழுவப்பட்டு உலர்ந்த உடன் எடுத்து, ரஸாயனக்காரரா ஒளி ஒலிப்பதிவாளர்கள். டைரக்டர் எடிட்டர் முதலியவர்கள் போட்டு பார்த்து ஏதாவது தவறுகள் இருந்தால் அதை நிவர்த்தி செய்துகொள்ளப்படும். ஒளிப்பதிவாளரும் ரஸாயனக்காரரும்.

### ஒளிப்பதிவாளரும்— ரஸாயனக் காரரும்

ஒளிப்பதிவாளர் ஒவ்வொருநாளும் வேலை துவங்கு முன்தான் உபயோகப் படுத்தும் கச்சா பிலிம் தன்மை தெரிந்துகொள்ள ஒரு மாதிரி துண்டு (Test) எடுத்து அனுப்புவார் அந்தத் துண்டை குறித்த நேரத்தில் கழுவி எவ்வளவு நேரம் ஆகிறது என்பதையும் துண்டையும் ஒளிப்பதிவாளருக்கு அனுப்பினால் அவர்தான் கச்சா பிலிம் எவ்வளவு கிரகிக்கும் சக்தி உடையது என்பதை உணர்ந்து அதற்கு தகுந்தமாதிரி கெமராவில் (Exposure) சரி செய்துகொண்டு விளக்கு வெளிச்சத்தையும் (Lighting)ம் தக்கதாய் அமைத்துகொள்கிறார். சில சமயம் ஒளிப்பதிவாளர் (Exposure) நிர்ணயிப்பில் பிசகு ஏற்படுவதுண்டு. அம்மாதிரியான சந்தர்ப்பங்களிலும் ஒளியோ அல்லது ஒலியோ அவரவர்களை கூப்பிட்டு மாதிரித்துண்டை (Develop) செய்து காண்பித்து அவர்கள் குறிப்பிடும் காலத்தில் கழுவுவதுண்டு இப்படிப் பட்ட சங்கடம் வராமல் இருக்கத்தான் கச்சா பிலிம் எதுவானால் என்ன, கிரகிக்கும் சக்தி எப்படி இருந்தாலும், கழுவப்படும் நேரம் ஒரேமாதிரியாய் இருக்கும்படி ரஸாயனத் திரவத்தையும், சூழ்நிலை சீதோஷ்ணத்தையும் ஒருவிதமாய் வைத்துக்கொள்ளப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப்பின் ரஸாயன திரவத்தின் சக்தி குறையும். அதை உணர்ந்து அவ்வப்போது வேண்டிய அளவுக்கு ரஸாயன சேர்க்கை செய்து சேர்த்துக்கொள்ளுதல் உண்டு ஒளிப்பதிவிலோ, ஒலிப்பதிவிலோ எதுவானாலும் Exposure அதிகம்,கம்மிஎன்னும்வாதம் வராமல் இருக்க ரஸாயனக்காரர்தான் தன் வேலை கட்டும் கவனிப்பதோடு ஒளி, ஒலிப்பதிவாளர்களிடமும் எச்சரிக்கை செய்துவிடவேண்டும். இப்படி செய்யாமல் Exposuve கம்மியானதால் அதிக நேரம் Develop செய்யவேண்டும். ஜல்த்தி வேண்டும் என்னும் முடிவுக்கு வந்துவிடாமல் சாதாணமாய் Standard நிரந்தர நேரத்திற்கு Develop செய்வதுதான் உசிதம் இப்படிச் செய்வதால், ஒளி, ஒலி, பதிவாளர்கள் தங்கள் தவறுகளைத் தாங்களே திருத்திக்கொள்ள முடியும்.

(தொடரும்)




## 20

பத்திரிகை விற்கும் சிறுவன் சொன்ன 'செய்தியை'க் கேட்டதுதான் என் அடி வயிற்றில் சுரீர் என்றது. நிஜமாகவே சொல்கிறேன், மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்களே, அந்தமாதிரி, எங்கேயோ ஏதாவது நடைபெற்றதென்றால்கூட நமக்கும் அதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறமாதிரி தோன்றி மனது கலவரப்பட ஆரம்பித்து விடுகிறது.

நான் ஒரு சமயம் என் சித்தப்பாவின் வீட்டுக்குப் போயிருந்தேன். ராத்திரி எல்லோரும் அவரவர்கள் படுக்கையை உதறிப் போட்டுக்கொண்டு படுக்க ஆரம்பித்தார்கள் 'நீ எங்கே படுத்துக்கொள்ளப் போகிருய்?' என்று கேட்டாள் சித்தி.

வராண்டாவில் அழகான நாடா கட்டில் போடப்பட்டிருந்தது அதில் யாருமே படுத்துக்கொள்ளவில்லை சிறு வயது முதற்கொண்டே கொஞ்சம் 'ஏந்திரனைப்போல் உயரமான இடத்தில் படுத்துக்கொண்டே வழக்கம். கீழே தரையில் படுத்துக்கொண்டால் தூக்கமே வராது ஆகையால் கட்டிலில் யாரும் படுத்துக்கொள்ளவில்லையே?' என்று கேட்டேன்.

'இல்லை' என்றாள் சித்தி.

'அப்படியானால் நான் அதில் படுத்துக்கொள்கிறேன்' என்றேன்.

'சரி' என்று சொல்லி ஒரு ஜமக்காளத்தைக் கொடுத்துவிட்டுப் படுத்துக்கொள்ளப் போய்விட்டாள் சித்தி

கட்டிலில் ஜமக்காளத்தைப் போட்டுக்கொண்டு படுத்தேன்.

காலையில் எழுந்தேன்.

சித்தியின் பெரிய பெண் பானு வந்தாள்.

'ராத்திரி எங்கே படுத்துக்கொண்டாய் கல்யாணி!' என்று கேட்டாள்.

'நாடா கட்டிலில்' என்றேன்.

'நாடா கட்டிலிலா? பரவாயில்லை நன்றாகத்தான் தூங்கியிருப்பாய்?' என்றாள்.

'நல்ல தூக்கம்தான். ஆனால் கொசு உபத்திரவம்தான் அதிகமாக இருந்தது இருந்தாலும் ஊரிலிருந்து ரயிலிலும் பஸ்ஸிலும் வந்த அலுப்பு. தலையிலிருந்து கால்வரை பெட்ஷீட்டை இழுத்துப் போர்த்துக்கொண்டேன் தூங்கிவிட்டேன்,' என்றேன்.

பானு என் பதிலைக் கேட்டுவிட்டு இடி இடி என்று சிரித்தாள்

சிரித்ததோடு மட்டுமில்லை கீதா, ரமா, கோபு எல்லோரையும் கூப்பிட்டாள்.

'கல்யாணி ஜெயித்துவிட்டாள். கொண்டு வாருங்கள் பரிசை' என்றாள்.

'நிஜமாகவா?' என்றார்கள் எல்லோரும்.

'நிஜமாகத்தான். வேண்டுமானால் கேட்டுப்பாருங்களேன் அவளையே' என்றாள் பானு.

'ராத்திரி நாடா கட்டிலிலேயா படுத்துத் தூங்கினாய்?' என்று கேட்டார்கள் என்னை அவர்கள்.

'ஆமாம்! ஏன் என்ன ஸமாசாரம்? கரும்பு தின்னக் கூலி வேண்டுமா என்ன?' பேஷான நாடா கட்டில். அதில் படுத்துக்கொண்டு தூங்குவதற்கு என்ன கஷ்டம்?' என்றேன்.

'வெளிச்சத்தில் நீ கட்டிலைப்பார்த்தாயோ?' என்றார்கள்.

'இல்லை' என்றேன்.

'அதான் அப்படிச் சொல்லுகிறாய்! இந்தா, இதோ இப்படி கொஞ்சம் பார்' என்று நாடாவைக் கொஞ்சம் கத்தினார்கள்.



அடேயம்மா. பார்த்து அலறிப்போய்விட்டேன். நானும் கட்டில் இடுக்குகளில் மூட்டைப்பூச்சியைப் பார்த்திருக்கிறேன். இருந்தாலும் இப்படி 'அடை அடையாக' நான் பார்த்ததே இல்லை.

எனக்கு வேறொன்றும் ஆச்சரியமாகப்படவில்லை. இவ்வளவு மூட்டைப்பூச்சிகளும் ராத்திரியெல்லாம் என் உடம்பிலுள்ள ரத்தத்தை உறிஞ்சிய பிறகும் நான் உயிருடனிருக்கிறேனே என்ற ஆச்சரியம்தான் என்னை பிரமிக்க வைத்துவிட்டது.

'நிஜமாகவே நான் மூட்டைப்பூச்சியைப்பற்றி மனதாற்கூட நினைக்கவில்லை. கொசுவென்றுதான் எண்ணிக்கொண்டேன் சே! சே! ரொம்ப மோசம்!' என்றேன்.

அதற்குத்தான் உனக்குப் பரிசு கிடைக்கப்போகிறது. யார் அதில் ஓர் இரவு படுத்துத் தூங்கிவிடுகிறார்களோ அவர்களுக்கு ஒரு பவுண்டன் பேனா பரிசு என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். நாங்கள் அந்தப் பரிசைப் பெற எவ்வளவோ முயன்று பார்த்துவிட்டோம். யாராலும் முடியவில்லை. ஆகையால் உனக்குத்தான் அந்தப் பரிசு' என்று ஒரு பவுண்டன் பேனாவைக் கொடுத்தார்கள்.

அப்புறம் ஏன் நான் அந்தக் கட்டில்பக்கம் போகிறேன். கட்டில்பக்கம் மாத்திரமா? பிறகு அந்த வீட்டுக்கு எத்தனையோதரம் போயிருக்கிறேன் கீழே படுத்துக்கொள்வதற்குக்கூடப் பயம் படுத்துக்கொண்டாலும் தூக்கம் வருகிறதில்லை

'இப்போது இந்த வீட்டில் மூட்டைப்பூச்சியே கிடையாது அதெல்லாம் போய் ஒரு வருஷம் ஆகிறது' என்று சொல்வார்கள்

இருந்தாலும் மனதில் எப்பொழுது ஒருவித பீதியும் சந்தேகமும் ஏற்பட்டுவிட்டதோ நிஜமாகவே கொசுவோ ஈயோ, எறும்போ கடித்தால்கூட மூட்டைப்பூச்சி என்றே தான் நினைக்கத் தோன்றும்.

அந்தமாதிரி என் கணவரைப்பற்றி எப்பொழுது 'கன்னா பின்னா'வென்று வம்பளப்புகள் வர ஆரம்பித்துவிட்டதோ எதைக்கேட்டாலும் மனதில் ஒருவித பீதி ஏற்பட்டுவிடுகிறது அதிலும் '...கம்பெனி மானேஜர் கொலை' என்றால் என் மனது எப்படித்தான் இருந்திருக்குமென்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள்.

உடனே ஏய் பேப்பர்' என்றேன்.

'எதற்கடி பேப்பர்?' என்றாள் மாமி.

'பார்க்க வேண்டும் மாமி' என்றேன்.

'என்ன பார்க்க வேண்டும்?...கம்பெனி மானேஜர் கொலை என்று கத்துகிறானே அதற்கா?' என்றாள் மாமி.

'ஆமாம் மாமி' என்றேன்.

'தெரியுமே எனக்கு அவன் கத்தியது என் காதிலும் விழுந்தது இது உன் மனதைக் கவர்ந்திருக்கும் என்று அப்பொழுதே நினைத்து விட்டேன் நான் நினைத்தது சரியாகவும் போய்விட்டது அது சரிதான்...கம்பெனி மானேஜர் என்றால் அவன் ஒருவன்தானா? பட்டணத்தில் வேறு கம்பெனியே கிடையாதா?' என்றாள் மாமி

'எத்தனையோ இருக்கிறது இருந்தாலும் நமக்கு உடனே தோன்றுவது இதுதானே என்றேன்

இதற்குள் பத்திரிகை விற்கும் சிறுவன் வந்து சேர்ந்தான்.

காசைக் கொடுத்து பத்திரிகையை வாங்கினேன் அந்தச் செய்தி முதல் பக்கத்திலேயே கொட்டை எழுத்துக்களில் போடப்பட்டிருந்தது அதைப் படித்தேன் செய்தி பின்வருமாறு இருந்தது:—

## நகரில்......கம்பெனி மானேஜர் கொலை

## எதிரி தப்பியோடிவிட்டான்

சென்னை, செப் 24—

சென்னை...கம்பெனி மானேஜர் ஸ்ரீ ராமானுஜம் கொல்லப்பட்டார்.

இன்று காலை 7-25-க்கு சென்னை வந்து சேர்ந்த திருச்சி எக்ஸ்பிரஸில் முதல் வகுப்பு வண்டியில் ஒரு கோரக் கொலை நடைபெற்றிருக்கும் சம்பவம் தெரிய வந்தது

...கம்பெனி மானேஜர் ஸ்ரீ ராமானுஜம் தெரிவித்திருந்தபடி அவரை அழைத்துப்போக மேற்படி வண்டிக்கு அவருடைய டிரைவர் எழும்பூர் ஸ்டேஷனுக்கு மோட்டாரைக் கொண்டு வந்திருந்தார் ஸ்டேஷனில் வண்டி வந்து நின்றதும் டிரைவர் முதல் வகுப்பு வண்டியில் போய்ப் பார்த்தார் மூடப்பட்டிருந்த கதவைத் திறந்தார் உடனே ஹோ' வென்று கத்தினார் டிரைவர். அடுத்த நிமிஷமே பெருங் கூட்டம் கூடிவிட்டது

கம்பெனி மானேஜர் ஸ்ரீ ராமானுஜம் கழுத்தில் பிச்சுவாவினால் வெட்டப்பட்டு கீழே வீழ்ந்து கிடக்கிறார். அவரைச் சுற்றி ஒரே ரத்தம். பெட்டி, படுக்கையெல்லாம் அப்படியே இருக்கின்றன, அவருடைய கைக் கடியாரமும் ஜேபியில் இருந்த மணிபர்ஸும் பணத்துடன் அப்படியே இருக்கின்றன

எங்கே, எப்பொழுது யாரால் கொல்லப்பட்டார் என்று தெரியவில்லை. மேற்சொல்லப்பட்ட முதல் வகுப்பு வண்டியில் வேறுயாரும் பிரயாணம் செய்ததாகத் தெரியவில்லை

இது யாரோ விரோதிகளின் வேலை என்று பொதுவாகக் கூறிக்கொள்ளப்படுகிறது போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர்' என்று இருந்தது

கவலை நிரம்பியிருக்கும் என் மனதுக்கு மேலும் அதிர்ச்சியைக் கொடுக்க இதைவிட வேறு என்ன வேண்டும்?

மாமிகூட இதைப்பார்த்தவுடனே பயந்துபோய் விட்டாள்

'என்ன மாமி இது?' என்றேன்

'என்னவென்று தெரியவில்லையே' என்று சொல்லிவிட்டு 'உன் அகத்துக்காரர் எங்கே போயிருக்கிறார்?' என்று கேட்டாள்.

ரகுவா? அவன் ஒரு கலியாணத்துக்காக திருப்பதிக்கல்லவா போயிருக்கிறான்? எதற்காகக் கேட்கிறீர்கள்?' என்றார் மாமியார், மாமியை நோக்கி

'எதற்குமில்லை எங்கே என்று கேட்டேன்' என்றாள் மாமி

......மானேஜருக்கும் அவனுக்கும் துவேஷமாயிற்றே என்பதற்காகக் கேட்கிறீர்களா? என்ன தான் துவேஷமாக இருந்தாலும் ரகு இந்தமாதிரி வழிக்கெல்லாம் போகமாட்டான். அத்துடன் அவன் திருப்பதிக்குப் போயிருக்கிறான் இது திருச்சி எக்ஸ்பிரஸ்ஸில் நடந்திருக்கிறது' என்றார் மாமியார்.

'அதற்குக் கேட்கவில்லை மாமி எங்கே என்று கேட்டேன் நான் கேட்டது இதற்காக என்று நினைத்துக் கொண்டுவிட்டீர்களா என்ன? சே! சே! நன்றாக இருக்கிறது' என்றாள் மாமி

'கேட்டதாலும் ஒன்றும் தவறில்லை ஏதோ முன்பின் துவேஷம் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்த சமயத்தில் இந்தமாதிரியான சம்பவம் நடந்தால் சந்தேகம் தோன்றுவது ஸகஜந்தானே! அத்துடன் அவன்



ஊரிலும் இல்லை சந்தேகம்தோன்றத்தான் செய்யும்' என்ருர் மாமியார்.

உஸ் போதும். இந்தமட்டோடு நிறுத்துங்கள் யாராவது போலீஸ்காரர்கள் காதில் விழப்போகிறது! நாமாகவே ஒரு சந்தேகத்தைக் கற்பித்துக் காட்டிக் கொடுப்பானேன்? வந்திருக்கிற ஆபத்து போதும்; என்ருர் நாத்தனா்.

என்னமோ பேசிக்கொண்டிருந்தார்களே தவிர உள்ளுக்குள்ளே எனக்குத் திகில்தான்.

நான் நகையைக் கழற்றி அவரிடம் கொடுத்துவிட்டது முதல் அவருடைய போக்கே கொஞ்சம் மாறுதலடைந்துவிட்டதென்று எண்ணிக்கொண்டிருந்தேன் நடுவாந்தரத்தில் ஏற்பட்ட போக்கைப்போலில்லாமல் அவ்வப்பொழுது வீட்டுக்கு வருவதென்றும் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்வதென்றும் ஒரு வழக்கம் ஏற்பட்டிருந்தது சரி, பரவாயில்லை நகையை விற்று கம்பெனிக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டாற்போலிருக்கிறது அதனுல்தான் கொஞ்சம் சுமுகமாய்ப் பழகுகிருர் என்று எண்ணிக்கொண்டிருந்தேன் என்ன நடந்ததோ? யார் கண்டு வைத்தார்கள்! பெண்கள் மனதை அறியவே முடியாதென்று சொல்கிருர்கள் ஆண்கள் மனதை மாத்திரம் அறிய முடிகிறதா? நகை விற்ற பணத்தைக் கம்பெனிக்குக் கொடுத்தாரோ அல்லது அந்த சினிமாக்காரிக்குத்தான் கொடுத்துவிட்டாரோ! யாருக்கு என்ன தெரிகிறது? இப்படி தெய்வம் நம்மை ஊர் சிரிக்க வைத்துவிட்டதே' அன்று அப்பாவும் அம்மாவும் அப்படி பெருமைப்பட்டுக்கொண்டார்கள். கல்யாணிக்கு உத்கிருஷ்டமான வரன் கிடைத்துவிட்டதென்று நானும்தான் இல்லாத மனக்கோட்டையெல்லாம் கட்டிக்கொண்டிருந்தேன் என்ன உபயோகம்! எல்லாம் சொத்தைக் கனவாகவல்லவோ போய்விட்டது! என்று எண்ணிக் கஷ்டப்பட்டேன்.

எல்லோரும் பஸ்ஸில் ஏறிக்கொண்டோம்.

வீட்டு வாசலில் எத்தனை போலீஸ்காரர்கள் நின்றுகொண்டிருக்கிருர்களோ, எந்த மாதிரியான செய்தியைக் காதால் கேட்கப்போகிருேமோ என்ற திகில் என் மனதை வாட்டிக்கொண்டிருந்தது.

பஸ்ஸில் நாங்கள் ஒருவரோடொருவர் ஒன்றும் பேசவில்லை எல்லோர் மனதிலும் ஏற்பட்டிருந்த திகில்தான் இதற்குக்காரணம்.

பஸ்ஸை விட்டிறங்கி வீடுபோய்ச் சேர்ந்தோம்

தெருவில் போலீஸ் மோட்டாரையோ போலீஸ்காரர்களையோ ஒன்றையும் காணும் சற்று ஆறுதலாக இருந்தது இருந்தாலும் இதைக்கொண்டே தைரியமாய் இருந்துவிட முடிகிறதா?

ஆனுல் தெருக்கதவுமாத்திரம் திறந்திருந்தது

'இன்று மாமா ஆபீஸிலிருந்து சீக்கிரம் வந்துவிட்டார் போலிருக்கிறது? என்றேன் நான் மாமியைப்பார்த்து

'தெருக்கதவு திறந்திருக்கிறதே என்று சொல்கிருயா? இன்றைக்கு வருவதற்குக் கொஞ்சம் நேரம் ஆனுலும் ஆகும் என்று சொல்லிவிட்டுப்போனுர் என்னமோ சீக்கிரமே வந்துவிட்டாரோ என்னமோ?' என்ருள் மாமி

எல்லோரும் உள்ளே சென்ருேம்.

மாமியின் போர்ஷன் பூட்டப்பட்டு இருந்தது.

'இன்னும் மாமா வரவில்லை உங்கள் அறையில் போய்ப் பாருங்கள் என்ருள் மாமி

உள்ளே சென்ருேம். எங்கள் சமையலறை பூட்டப்பட்டிருந்தது மாடிக்குச் சென்று பார்த்தோம். மாடியறை திறந்திருந்தது.

அங்கே என் கணவரும் அவருடன் இரண்டு மூன்று பேரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

எங்களைப் பார்த்தவுடனே, 'நமது பக்தன் என்ன தெரிவிக்கிருன்? என்ருர் மாமியாரைப் பார்த்து என் கணவர்.

'என்னமோ தெரிவிக்கிருன். நீ எப்பொழுது வந்தாய்?'' என்ருர் மாமியார்!

'நீங்கள் 'நமது பக்தனை' நாடிப் புறப்பட்டவுடனே நான் வந்துவிட்டேன் என்ன, கோவிலில் வடை மாலை ஏதாவது சாத்தும்படி நமது பக்தனிடமிருந்து கட்டளை ஏதாவது பிறந்திருக்கிறதா என்ன? மார்க்கெட்டில் உளுத்தம் பருப்பு அகப்படுவது குதிரைக்கொம்பாக இருக்கிறது' சீக்கிரம் சொன்னுல் எங்காவது பிரயத்தனப்பட்டுப் பார்க்கிறேன்' என்ருர்

'அதெல்லாம் கிடக்கட்டும் நீ கொஞ்சம் கீழே இறங்கி வா' என்ருர் மாமியார்.

சரிதான். நமது பக்தன் இன்னும் ஏதோ பெரிய கட்டளை இட்டுவிட்டான் போலிருக்கிறது என்று சொல்லிக்கொண்டே என் கணவர் கீழே இறங்கி வந்தார்.

'ஆமாம், உனக்கு ஸமாசாரம் தெரியுமோ?' என்ருர் மாமியார்.

'நமது பக்தன் சென்னையில் முகாம் செய்திருக்கிற விஷயந்தானே? பேஷாகத் தெரியும்' என்ருர்.

'அது இல்லையடா...?'

'பின்னே என்ன?'

'உங்கள் கம்பெனி...'

'மானேஜர் கொலை செய்யப்பட்ட விஷயமா?'

'ஆமாம்'

'தெரியுமே!

'என்ன அக்கிரமமடா?'

'ரொம்ப அக்கிரமம் தான்!

'யாரடா செய்திருப்பார்கள்?'

'யாரோ தெரியவில்லையே'

'ஏதாவது சந்தேகத்துக்காவது இடம் இருக்கிறதாமோ?'



'ஒன்றும் தெரியவில்லை. புலன் விசாரித்துக்கொண்டிருக்கிருர்கள். போகப் போகத் தெரியும்.

'பெட்டி, படுக்கை, ரொக்கம் எல்லாம் அப்படியே இருக்கிறதாமே?'

ஆமாம். அப்படித்தான் சொல்லுகிருர்கள்'

'என்ன வேடிக்கையடா இது?'

'வேடிக்கை என்ன? பணத்தை உத்தேசித்துச் செய்யவில்லை ஏதோ விரோதத்தின் பேரில் செய்யப்பட்ட வேலையென்று தெரிகிறது.

'அவருக்கு யாராவது அப்படிப்பட்ட விரோதிகள் இருக்கிருர்களாமோ?'

'மனுஷ்யன் என்று இருந்தால் விரோதிகள் என்று இருந்துகொண்டுதான் இருப்பார்கள். அதிலும் ஒரு கம்பெனி மானேஜர் என்ருல் கேட்கவேண்டும்?

'அப்படியானுல் கம்பெனியைச் சேர்ந்தவர்களே யாராவது செய்திருப்பார்கள் என்கிருயா?'

'அதெப்படிச் சொல்லிவிட முடியும்? கம்பெனிக்கு வெளியில் விரோதிகள் இருக்கக் கூடாதா என்ன?'

'இருக்கலாம். அப்படி சந்தேகிக்கக் கூடியவர்கள் யாராவது இருக்கிருர்களா என்று கேட்கிறேன்.'

'ஏன் நமது பக்தனைக் கேட்டால் சொல்லிவிடுகிருன். வரும்போது இதையும் கேட்டுவிட்டு வரக்கூடாதோ?'

'போடா, எதையோ கேட்டால் எதையோ சொல்லிக்கொண்டு.'

'பின்னே என்ன அம்மா. உனக்கெதற்கு இந்த வீண் தொல்லையெல்லாம் எவனே பிச்சுவாவினுல் குத்தினுன் எவனே செத்தான். உனக்கேன் இந்த வீண் விசாரமெல்லாம்?'

'உன்னுடைய கம்பெனி மானேஜராயிற்றே என்று கேட்டேன் வேறு யாராவதாக இருந்தால் கேட்கப் போகிறேனு என்ன?

'பத்திரிகையில் எவ்வளவு விவரம் வந்திருக்கிறதோ அவ்வளவுதான் எனக்கும் தெரியும் அத்துடன் நான் இன்று கம்பெனிக்குப் போயிருந்தாலும் ஏதாவது தகவல் தெரிந்தாலும் தெரியலாம் நான் நேராக திருப்பதியிலிருந்து சற்று முன்புதான் வந்தேன் ஆகவே எனக்குத் தகவல் அதிகம் ஒன்றும் தெரியாது' என்று சொல்லிவிட்டு மாடிக்குப் போய்விட்டார்

இந்த பதிலிலிருந்து என்னத்தை முடிவு செய்கிறது! பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்திக்குமேல் ஒரு இம்மி தகவல்கூட அவர் கொடுக்கவில்லை. அவ்வளவு ஜாக்கிரதையாகப் பதில் சொல்லியிருக்கிருர்.


ஆனுல் அவர் பதில் சொன்ன தோரணையையும், அப்பொழுது அவர் முகத்தில் ஏற்பட்டிருந்த பாவத்தையும் பார்த்தால் இதற்கும் அவருக்கும் துளிக்கூட சம்பந்தம் இருக்குமென்று தோன்றவே இல்லை மனதில் பீதியோ, கல்மிஷமோ இருந்திருந்தால் அவ்வளவு தாராளமாகத் தட்டுத் தடங்கலில்லாமல் வார்த்தைகள் வந்திராது என்று மாத்திரம் எண்ணிக்கொண்டேன்

'பார்த்தாயா, நான்தான் சொன்னேனே! என்னதான் இருந்தாலும் அவ்வளவு தூரத்துக்குக்கூட மனது துணியுமா?' என்ருர் மாமியார்

என்ன அவருக்கென்ன தெரியும் பாவம் சுபாவத்திலேயே மாமியார் ரொம்பவும் நல்லவர் பாவம்! கள்ளங்கபடம் ஒன்றும்தெரியாது வெளுத்ததெல்லாம் பால், கருத்ததெல்லாம் நீர்' என்று நம்பிவிடுகிற சுபாவம் அவருடையது அப்படிப்பட்டவர் இந்த பதிலைக் கேட்டுவிட்டு வேறு என்ன சொல்லப் போகிருர்!

எனக்கு மாத்திரம் மனதில் கவலைவிட்டபாடில்லை

'கவலைப்பட்டு என்ன செய்வது! கவலைப்படுவதற்கென்றுதான் பெண்ணுய்ப் பிறந்துவிட்டோம் வந்ததை அனுபவிக்கிறதைத் தவிர வேறு வழியில்லை எதுவாக



இருந்தாலும் இன்றைக்கில்லாவிட்டால் நாளைக்கே தன்னாலே தெரியப்போகிறது. நாம் மூடி மூடி வைத்தால் மாத்திரம் தெரியாமல் நின்றுவிடப் போகிறதா என்ன?' என்று மனதைச் சற்று சமாதானப்படுத்திக்கொண்டு சமையல் வேலையைக் கவனிக்கச் சென்றேன்.

அப்பொழுது தெருவில் பூம் பூம் என்று மோட்டார் ஹாரன் சப்தம் கேட்டது

அடுத்த நிமிஷமே ஒருவர் உள்ளே வந்து 'மிஸ்டர் ரகுநாதன் இருக்கிருரா?' என்று கேட்டார்.

'ஆகா இருக்கிருர்' என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்று 'உங்களை யாரோ கூப்பிடுகிருர்கள்' என்றேன் என் கணவருடன்.

உடனே என் கணவர் கீழே இறங்கி வந்தார்.

'என்ன கோபால்! வாயேன் உள்ளே!' என்ருர் என் கணவர், வந்தவரைப் பார்த்து.

'இல்லை. தெருவில் மோட்டார் நின்றுகொண்டிருக்கிறது. உங்களைக் கூப்பிடுகிருர்கள்' என்ருர் வந்தவர்

உடனே என் கணவர் தெருப்பக்கம் சென்றவர் அடுத்த நிமிஷமே மாடிக்குச் சென்று கூட இருந்தவாகளையும் அழைத்துக்கொண்டு 'எனக்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டாம், ராத்திரி வந்தாலும் வருவேன். இல்லாவிட்டாலும் இல்லை' என்று என்னிடம் சொல்லிவிட்டு தெருப்பக்கம் சென்ருர். நானும் அவர் பின்னுலேயே சென்றேன் மாமி என் பின்னுல் வந்தாள்.


அவர்கள் மோட்டாரில் ஏறிக்கொண்டார்கள்.

'அதே பின் ஸீட்டில் உட்கார்ந்திருப்பது யார் பார்த்தாயா?' என்ருள் மாமி

'ஆமாம். அந்த சினிமாக்காரிதான்' என்றேன்.

உடனே மோட்டார் புர்' என்று கிளம்பிவிட்டது


(தொடரும்)






உள்ளம்கவர் அழகி-கலை ஊற்றின் சுவையுமவள்;
மெள்ள என்னுள்ளம் தொட்டே-தன்வசமதாக்கிவிட்டாள்!
வீணையின் நாதத்திலே-இன்ப வேய்ங்குழல் கீதத்திலே
மோன நிலையினிலே-அவள் மோகன ரூபமம்மா!
அலைகடல்போல் நெஞ்சம்-அலைந் தாரப் பறிக்கும்போதும்
கலையெனுமோடம் கொண்டே-கரைசேர்ந்திட வந்திடுவாள்!
கதிரின் வெம்மையிலே-இன்ப மதிதன் தண்மையிலே
விதியின் போக்கினிலே-வந்து விந்தைகள் செய்யுகின்ருள்!
மருட்டும் மாதர்விழி-அவள்தன் மற்ருெரு ரூபமம்மா?
இருட்டை யகற்றுமொளி-எங்கும் இன்முகம் காட்டுகின்ருள்!
இரவில்லை; பகலில்லை-அவளுக்கு,எந்நேரமென்பதில்லை.
விரவியழைக்க வேண்டாம்-தானே விரைந்து வந்திடுவாள்!
துக்கமென்ருேர் இருளை-விலக்கும் தூயச் சுடராமவள்.
சித்தம் கலங்கும்போதும்-என்றன் சிந்தைதெளிய வைப்பாள்!
பித்தனென்றென்னை ஏச-ஆம்; கவிப் பித்தனய் ஆகிவிட்டேன்!
சித்தம் தெளிய வைக்கும்-கவிதைச்சிறுக்கியைக் காதலித்தே!






198571

150. आद्याद्यमूर्च्छनातानेे संपूर्णे कथिते बुधैः ।
तानाः पञ्च सहस्राणि चत्वारिंशद् युतानि च ॥

ஆத்யாத்ய மூர்ச்சனுதானே
ஸம்பூர்ணே கதிதே புதை: |
தானா: பஞ்சஸஹஸ்ராணி
சதவாரிம்சத் யுதாநிச ||

151. तावत्संख्याविशिष्टानां तानानां गणना कृता ।
खरसेपुरसाने त्रमव्धिर्वह्निः शशीति च ॥

தாவத்ஸங்க்யா விசிஷ்டாநாம்
தாநாநாம் கணநா க்ருதா |
கரஸேஷுரஸா நேதர
மப்திர்வஹ்நி: சசீதி ச ||

''ஸரிகமபதநி'' என்ற ஸப்தஸ்வரங்களுள் முறையே ஒவ்வொரு ஸ்வரங்களையும் முதலாகவுடைய ஸம்பூர்ண மூர்ச்சனைகளின் தான பேதங்கள் 5040 ஏற்படுகின்றன. (அதாவது $1 \times 2 \times 3 \times 4 \times 5 \times 6 \times 7 = 5040$)

மேற்கூறப்பட்ட 5040 ஸம்பூர்ண மூர்ச்சனைகளும், விக்ருத ஸ்வரங்களால் ஏற்படும் மூர்ச்சனையின் பேதங்களும் சேர்ந்து மொத்தம் 13426560 என்று கணக்கிடப் பட்டுளது.

152. निधपमगरीणां तु लोपादथ च षाडवाः ।
क्रमादे कैकसंत्यागात् षट्त्रिंशन्मूर्च्छना मताः ॥

153. एवं षाडवशुद्धाः स्युः......................

நிதபமகரீணாம் து லோபாதத
ச ஷாடவா: |
க்ரமாதேகை கஸந்த்யாகாத்
ஷட்த்ரிம்சந் மூர்ச்சனுமதா : ||
ஏவம் ஷாடவ சுத்தா :
ஸ்யு : .................... |

ஷாடவ சுத்தஸ்வர மூர்ச்சனைகள்

'நி-த-ப-ம-க-ரி' இவைகளுள் ஒவ்வொரு ஸ்வரத்தையும் விட்டு விடுவதால் ஷாடவ மூர்ச்சனைகள் ஏற்படுகின்றன. 'ஷாடவம்' என்ற சொல்லுக்கு ஆறு ஸ்வரங்களால் ஆனது என்று பொருள். மேற்கூறிய ஸ்வரங்களுள் ஒவ்வொன்றையும் முறையே விடுத்து உண்டாகும் மூர்ச்சனைகள் ஒவ்வொன்றும் 36 இங்ஙனம் ஷாடவ சுத்தஸ்வர மூர்ச்சனைகள் கூறப்பட்டுள்ளன.

......................विकृता अपि चक्ष्महे ।
त्रयोदश रिभेदाः स्युः भेदास्तत् सप्तमा मताः ॥

154. इति भेदा निहीनानां अष्टसप्ततिरीरिताः ।
..................................

விக்ருதா அபி சக்ஷ்மஹே |
த்ரயோதச ரிபேதா : ஸ்யு :
பேதாஸ்தத் ஸப்தமா மதா :
இதி பேதா நிஹீநாநாம்
அஷ்ட ஸப்ததிரீரிதா : |

ஷாடவ விக்ருத ஸ்வர மூர்ச்சனைகள்

இனி ஷாடவ விக்ருத ஸ்வர மூர்ச்சனைகளைக் கூறுவோம்:—ரிஷபம் முதலிய விக்ருதஸ்வரங்கள் மொத்தம் 17 அவற்றுள் நால்வகை நிஷாதங்கள் தவிர மீதி பதிமூன்று பேதங்கள் உள. ஆகையால் 'நி' (நிஷாதம்) இல்லாத ஷாடவ-விக்ருத-மூர்ச்சனைகள் $(13 \times 6 = 78)$ ஏற்படுகின்றன.

एवं भेदा घहीनानां अशीतिश्चतुरुत्तराः।

ஏவம் பேதா தஹீநாநாம்
4 3 4
அசீதிஸ்சதுருத்தரா : |

இவ்வாறு தைவதம் இல்லாத ஷாடவ விக்ருத மூர்ச்சனைகள் எண்பத்தி நான்கு. (விக்ருதங்களான மூன்றுவித தைவதங்கள் தவிர மற்ற ஸ்வரங்கள் 14 14X6 = 84)

155. तथा भेदाः पहीनानां स्युः शतं लोचनो त्तरम्।

ததா பேதா பஹீநாநாம்ஸ்யு:
2 4 3
சதம் லோசநோத்தரம்

அங்ஙனமே 'ப' (பஞ்சமம்) இல்லாத விக்ருத-ஷாடவ-மூர்ச்சனைகளின் எண் நூற்றிரண்டு ஆகும் (17X6 = 102)

महीनानां तु भेदाः स्युरशीतिश्चतुरुत्तराः।

மஹீநாநாம் து பேதா:
4 3
ஸ்யு: அசீதிஸ்சது ருத்தரா : |

'ம' (மத்தியமம்) இல்லாத அத்தகைய மூர்ச்சனைகளின் பேதங்கள் எண்பத்தி நான்கு (14X6 = 84)

156. तथा गान्धारहीनानां अष्टसप्ततिरीरिताः।
रिहीनानामपि ज्ञेया अशीति श्चतुरुत्तराः॥

ததா காந்தார ஹீநாநாம்
2 3 4
அஷ்ட ஸப்ததிரீரிதா :
ரிஹீநா நாமபி ஞேயா
அசீதிஸ்சதுருத்தரா:||

அவ்வாறு 'கா' (காந்தாரம்) இல்லாத அத்தகைய மூர்ச்சனைகளின் எண்ணிக்கை எழுபத்தெட்டு (13X6 = 78). 'ரி' (ரிஷபம்) இல்லாத அத்தகைய மூர்ச்சனைகளின் பேதங்கள் எண்பத்தி நான்கு (14X6 = 84). என்று அறிக.

157. चतुर्भिश्च रिभिस्तत्र गान्धारैः पञ्चभिः स्वरैः।
षण्णवतिर्निहीनाः स्युः भेदा उक्ता मनीषिभिः॥

சதுர்பிஸ்ச ரிபிஸ்தத்ர
4 4
காந்தாரை : பஞ்சபி : ஸ்வரை : |
3 4 4
ஷண்ணவதிர்நிஹீநா : ஸ்யு :
பேதா உக்தா மநீஷிபி : ||
4 3 4

விக்ருதங்களான நால்வகை ரிஷபங்களாலும், அத்தகைய ஐந்துவித காந்தாரங்களாலும் ஏற்படும் நிஷாதமில்லாத ஷாடவ-விக்ருத மூர்ச்சனைகள் தொண்ணூற்றாறு. (96).

158. रिभिस्त्रिभिस्तथा मैश्च भेदाः स्युरब्धिराशुगाः।
एवं रिभिस्तथा धैश्च भेदास्तावन्त एव हि॥

ரிபிஸ்த்ரிபிஸ்ததா மைஸ்ச
4 4 2
பேதா : ஸ்யு : அப்திராசுகா: |
4 3 3 4
ஏவம் ரிபிஸ்தா தைஸ்ச
4 2 4
பேதாஸ்தாவந்த ஏ ஹி ||
4 3

மூன்றுவித ரிஷபங்கள், அத்தகைய மத்யமங்கள் இவைகளின் சேர்க்கையால் உண்டாகும் நிஷாதமில்லாத ஷாடவ-விக்ருத மூர்ச்சனைகள் 54.

இவ்வாறே மூன்றுவித விக்ருத ரிஷபங்கள், அவ்வாறுள்ள தைவதங்கள் இவைகளால் ஏற்படும். பேதங்களும் ஐம்பத்தி நான்கு ஆகும் (54)

159. पञ्चभिर्गैस्त्रिभिर्मैश्च भेदा नवतिरीरिताः।
गान्धारधैवतानां तु द्विसप्ततिभिदा मताः॥

பஞ்சபிர்கைஸ்த்ரிபிர் மைஸ்ச,
4 3 4
பேதா நவதிரீரிதா : |
4 3
காந்தாரதைவதா நாம் து
3 4 4
த்விஸம்ததிபிதா மதா : ||
3 4 3

ஐந்துவித காந்தாரங்கள் மூன்று வகையான மத்யமங்கள் இவைகள் சேர்ந்து ஏற்படும் ஷாடவ-விக்ருத-மூர்ச்சனைகளின் பேதங்கள் தொண்ணூறு ஆகும். காந்தாரம், தைவதம் இவைகளால் ஏற்படும் பேதங்கள் எழுபத்திரண்டு (72) என்று கூறப்படுகிறது.


160. मध्यमानां तथा धानां भेदाः स्युरब्धिराशुगाः।
इति भेदा निहीनानां सविंशति चतुः शती॥

மத்யமானும் ததா தாநாம்
4 2 4
பேதா ஸ்யுரப்திராசுகா: |
4 3 3 4 3
இதி பேதா நிஹீநாநாம்
4 3
ஸவிம்சதி சது : சதீ ||

மூன்று விக்ருத மத்யமங்களாலும், மூன்று விக்ருத தைவதங்களாலும் தோன்றும் நிஷாதமில்லாத ஷாடவ-மூர்ச்சனைகள் ஐம்பத்தி நான்கு (54)

இவ்வாறு இரண்டு இரண்டு விக்ருதஸ்வரங்களும் மற்ற சுத்தஸ்வரங்களும் சேர்ந்து ஏற்படும் நிஷாதமில்லாத ஷாடவ-விக்ருத-மூர்ச்சனைகளின் மொத்த எண்ணிக்கை நானூற்றிருபதாகும். (420).







சங்கீதத்திற்கு சுருதிபோல, சாப்பாட்டிற்கு சுவைபோல பண்டிகைகள் வாழ்வின் இன்றியமையாத தேவைகள். மாலையில்லாப் பிரசங்கமும் நடனமில்லா சினிமாப் படமும், பண்டிகை இல்லா மாதமும் பாழ்தான். களைத்துவருபவர்களுக்கு ஊக்கமளிக்கும் சூடான காப்பிபோல, இயந்திர வாழ்க்கையில்ஈடுபட்டு, இடர்மிகுபடும் மக்களுக்கு இதந்தருவன பண்டிகைகள்.

பண்டிகை என்றாலே கொண்டாட்டம்தான்! வாசலிலே செம்மண் கோலங்களும் வாயிற்புறத்தில் மாவிலைத் தோரணங்களும், பூத்துக் குலுங்கும் மகிழ்ச்சியும் பண்டிகையின் விளைவுகள் பட்டுப் புடவையின் சலசலப்பையும், பாயஸத்தின் நறுமணத்தையும் பண்டிகை அல்லாமல் வேறு என்றாவது அனுபவிக்க முடியுமா?

இந்தத் தீபாவளியை எடுத்துக் கொள்ளுங்கள் புது வேட்டி, சட்டை அணிந்து கொண்டு, வேட்டும் வெடியும் தீர்த்துக்கட்டி, வேண்டும் பக்ஷணங்களை உள்ளே போட்டுவைக்கும் வாண்டுப் பயல்கள் மட்டும்தானா ஆசையோடு எதிர்பார்க்கிறார்கள்? ஓடும் நாட்கள் ஊர, தீபாவளி வருமளவும் வாடி இருக்கும் எத்தனையோ புதுமணத் தம்பதிகளைப் பார்த்திருக்கிறோம்! மூக்கால் அழுது முனகிக்கொண்டே, காசையோ கடனையோ வாங்கி பெண்ணைப் பெற்றவர் செய்யப்போகும் தீபாவளிச் சீர்களா அவனை ஆகர்ஷிக்கின்றன? அதற்கும் அப்பால், அப்பாலுக்கப்பாலாய், கம்பிமத்தாப்புபோல கண்கள் பிரகாசிக்கத் தன்னைக் கவர்ந்திழுக்கும் 'அவளை' நினைக்கும்போது வெடிக்கும் சீன வெடிபோல அவன் மனம் துடிக்க ஆரம்பித்துவிடுகிறது பாத-தாமரைகள் நொந்திடாமல் கார்தனில் தன்னைத் தேடிவந்து மாலையிட்ட கணவனை மீட்டும் சந்திக்க அவள் எவ்வளவு ஆதுரத்துடன் தீபாவளிப் பண்டிகையை எதிர்பார்க்கிறாள் என்பதை எளிதில் அளந்து கட்டிவிட முடியுமா? இவ்வாறு புதிதாக விவாகமான 'ஜோடி'களுக்கு வாழ்விலோர் திருநாளாக அமைந்த தீபாவளி செய்யும் பேருதவி எத்தகையது?

தம்பதிகள் அடையும் ஆனந்த அனுபவம் இருக்கட்டும்; இந்த ஜவுளி வியாபாரிகள் அடையும் பண லாபத்தைக் கணக்கிடஎந்த கஜக்கோலும்காணாது. எங்கேயோ தேங்கிக்கிடந்த 'கட்டுக்கடைப் புடவைகளைத் தேடிக் கொணர்ந்து, 'தீபாவளிக் கென்றே ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டது' என்று விளம்பர வாண வேடிக்கைகள் செய்து, இந்தப் பேதைப் பெண்கள்—இல்லை, அப்பாவிக் கணவர்கள்—தலையில் கட்டி விடுகிறார்கள்!



பொங்கும் மங்களம் எங்கும் தங்கிட வரும் பொங்கல் பண்டிகை என்றால் ஒரே பூரிப்புதான் 'பொங்கலோ பொங்கல்' என்ற கூக்குரலில் வழியும் குதூகலத்தை ஒரு குழந்தையின் சிரிப்பில் கூடக் காண முடியாது. நம்மைத் 'தூங்காமூஞ்சி'யாக்கித்துயர் தரும் மூட்டைப் பூச்சிகளும், பழம் பானைகளும் அழுக்குச்சுவர்களும் அன்றோடு பொங்கலாகி விடுகின்றன! புதுக் காவி ஏறி, புத்தழகுடன், புதுமையொளி வீசும் வீடுகள் பார்ப்பதற்கு ரம்யமாகவே இருக்கின்றன.

வீட்டிற்கு வீடு வாசற்படி இருக்கிறதோ இல்லையோ; ஆனால்'பொங்கல்படி' வழங்காத வீடு மட்டும் இல்

லவே இல்லை! அது நாள்வரை படி ஏறாத, அடையாளமே தெரியாத ஆசாமிகளுக்கெல்லாம் 'பொங்கல் படி' கொடுக்க வேண்டியிருப்பதை நினைத்து. நாம் 'மயான காண்டம்' பாடினால்கூட அந்த அல்பத் தொகையைப் பெற்றுக்கொள்ளும் ஏழைகளுக்குப் பொங்கல் வரவேற்கத்தக்க பண்டிகைதானே!

தமிழர் பண்டிகைகளில் உயர்ந்தது பொங்கல்தான் என்பது ஒரு கட்சியாரின் முடிவு. இப் பண்டிகையின் மூலம் மனிதர்கள் மட்டுமின்றி மாடுகளும் அடையும் நன்மைகளினால்தாம் அவ்வாறு கூறுகிறார்களோ என்னவோ! கொம்பைச் சீவி, வர்ணந் தீட்டி, குப்பிமாட்டி, மாலையிட்டு, மஞ்சள் பூசி, மரியாதை செய்யும் காட்சியைக் காண எத்தனை லின்லித்கோவும், டால்மியாக்களும் இருந்தாலும் காணாதே! மேலும் கிராமங்களிலே 'சல்லிக்கட்டு' என்றால் காளைகளுக்கு யோகம்; அதை நிறுத்திப் பிடித்துவிடும் வாலிபக் காளைகளுக்குப் பெருமிதம்; வெற்றிபெற்ற அவர்களை மணந்துகொள்ளும் பெண்களுக்கோ ஒரே குதூகலம்!


புது வருடம் பிறக்கும்போது நமது அகத்திலும் மலர்ச்சி பிறக்கின்றது. காலண்டர்களோடு, பஞ்சாங்கத்தோடு பானகத்தோடும் தன் வருகையைத் தெரிவித்துக் கொள்ளும் புது வருடப் பிறப்பன்று நாம் எத்தனையோ சங்கல்பங்கள் செய்துகொள்கிறோம். ஆனால், எண்ணி இரண்டு வாரங்களுக்கு மேல், எழுதப்படாத புது வருட டயரிபோல், அத் திட்டங்களும் உருவாகாமல் போய்விட்டால்கூட வருடந்தோறும் பிரதிக்ஞைகள் செய்துகொள்வது என்னவோ குறையப் போவதில்லை!

கார்த்திகை என்றால் திருவண்ணாமலை தீபச் சுடருடன் வீடுகள்தோறும் விளக்குகள் ஒளி வரிசை செய்கின்றன. பிறந்தகத்துப் பெருமையை நிலைநாட்ட வரும் சகோதரனின் சீரைப் பெற்றுக்கொள்ளும் பெண்கள் முகங்களில் எவ்வளவு பெருமிதம்! சிதம்பரத்தில் ஆருத்ரா தரிசனம் என்றால் இந்த நாளைய ரயில் பிரயாணத்தையும் அனுபவித்துக்கொண்டு செல்லத்தயாராக இருக்கும் பக்த கோடிகள் அனந்தம். திருவாதிரைக் களியும், கார்த்திகைப் பொரியும், கோகுலாஷ்டமி பக்ஷணங்களும், விநாயக சதுர்த்தி கொழுக்கட்டைகளும் நமது வாழ்விற்கு ருசியளிப்பவை! பண்டிகைகள் இல்லாவிடில் இத்தனை பண்டங்கள் ஏது?

காவியம் என்றால் கடவுள் துதி இருந்தாக வேண்டும். பண்டிகை என்றால் விடுமுறை இல்லாமல் இருக்க முடியாது. கடவுளும் தத்துவமும், காப்பியும் சர்க்கரையும்போல அவை ஒன்றோடொன்று ஒன்றி நிற்பவை. பண்டிகை விடுமுறையை ஒட்டி, பாட்டியின் சாவையும் வரவழைத்துக்கொண்டு, ஒன்றுக்கு இரண்டு நாளாக லீவு வாங்கிக் கொண்டு ஊரிலிருக்கும் தனது இளம் மனைவியைப் பார்க்கச் செல்லும் 'கலியாணமாகியும்பிரம்மச்சாரி'யான ஊழியர்கள் பலர். இந்த சலுகையைப் பெறும் மேற்படி உத்தியோகஸ்தர்கள் பண்டிகைகள் வாழ ஒன்று கூடி கோஷ்டி கீதம் பாடினாலும் ஆச்சரியமில்லை!

இத்தனை பண்டிகைகளும் போதாது என்று இப்போது அரசியல்பண்டிகைகளும் இடையில் புகுந்து 'ஜே' போடுகின்றன. சுதந்திர தினம், காந்தியந்தி, குடியரசு நாள் முதலியன பண்டிதரும் பாமரரும், பணக்காரரும் ஏழைகளும் ஏற்றத்தாழ்வு, ஜாதி வித்தியாசமின்றி ஒருமிக்கக் கொண்டாடிடும் கோலாகலப் பண்டிகைகள் அல்லவா? தேசியப் பண்டிகைகள் என்றால் மூவர்ணக் காகிதங்கள் எங்கும் அலங்கரிக்க, தாயின் மணிக்கொடி வானுற ஓங்கி காற்றிலே பட படக்கும் காக்ஷியைக் காணக்கண்கோடி வேண்டும். வெறும் நாட்களிலேயே 'ஸ்டேட்மெண்டிற்'குப் பஞ்சமில்லாத இக்காலத்தில், பண்டிகைகள் என்றால் அரசியல் தலைவர்கள்ரேடியோ, பத்திரிகைகள்வாயிலாக 'பண்டிகைச் செய்தி' அனுப்பி வைப்பதற்குக் கேட்கவேண்டுமா? பொதுஜனங்களாகிய நாம் சும்மா இருப்போமா? விரும்பியோ விரும்பாமலோ, வேண்டிய வேண்டாத நண்பர்களுக்கும், மேலிடத்துப் பெரியார்களுக்கும், பிரமுகர்களுக்குப் புதுவருட—பொங்கல்—குடியரசு வாழ்த்துக்களை அனுப்பி வைத்து, மறுதபாலிலேயே ஒரு மனமார்ந்த வந்தனத்தையும் பெற்றுக்கொள்ளத் தயங்குவதில்லை

அரசியல் தினங்கள் பொதுப் பண்டிகைகள் ஆகிவிட்டனவா? இதர நாட்களில் இரையுண்ட பாம்புபோல் செயலிழந்து கிடக்கும் சங்கங்கள்கூட இந்தமாதிரி அரசியல் விழாக்களை நடத்தி, தங்கள் உயிர்த்துடிப்பை அவ்வப்பொழுது காண்பித்துக் கொள்கின்றன. குறைந்த பக்ஷம் தலைமை வகிப்பதற்கோ அல்லது 'கலந்து கொள்வதற்'கோ கூட சந்தர்ப்பம் கிடைக்காமல் திண்ணை வேதாந்திகள் ஆகிவிட்ட கோடையிடிப் பிரசங்கிகளுக்கும், அரசியல் மடிசஞ்சிகளுக்கும் பண்டிகைகளை ஒட்டிய விழா மேடைகள் கிடைத்தால்தானே உண்டு! விழா விமரிசையோடு நகம் முளைத்த நாள் முதலாய் தாங்கள் செய்த சேவையை சொல்லாமற்சொல்லி, சோடாவுக்கும் சபையோர் காதுகளுக்கும் பிடித்த கேடாய் மணிக் கணக்காய் பேசித் தீர்த்துவிடமாட்டார்களா?



இந்தப் பண்டிகைகளின் வருகையைக் காலண்டர்களும் பஞ்சாங்கங்களும் அறிவுறுத்த மறந்தால்கூட ரேடியோ



நிலையங்களும், சினிமாக்காரர்களும் சும்மா விடுவதில்லை காதைத் துளைக்கும் விசேஷ ரேடியோ ப்ரோகிராம்களுக்குச் செவிசாய்க்கும்போது பண்டிகை நினைவு வராமற் போகுமா? எண்ணற்ற பாடல்களும் எடுப்பான ஹாஸ்யமும் கொண்டுள்ள பொது ஜன ரஞ்சகமான புராணப் படங்களைத் தயாரித்துள்ள முதலாளிகள் கூட நல்லதோர் தியேட்டரில் திரையிடுவதற்கு ஒரு பண்டிகை நன்னாளைத்தான் எதிர்பார்க்கிறார்கள். காசு நடமாட்டம் குறைந்த மாதத்தின் கடைசி வாரத்தில் பண்டிகை வந்தால் கூட படம் என்னவோ தீபாவளி அல்லது பொங்கல் ரிலீஸாக இருக்கும் "நாடெங்கும் குதூகலிக்க...திருநாள் வருகிறது; அன்றே உங்களை மகிழ்விக்க எங்கள் படமும் வருகிறது" என்று சொந்தத் தம்பட்டத்திற்கு இடமின்றி விளம்பரம் செய்துகொள்வதில் அவர்களுக்கு தனி மகிழ்ச்சி இவர்களுக்குப் போட்டியாக கிராமபோன் கம்பெனிக்காரர்களும் பண்டிகைகள்தோறும் புதிய இசைத்தட்டுகளை வெளியிட்டுப்பெருமை அடைகிறார்கள்.



ஆனால், பண்டிகைகளினால் பெரும் பயனை அடைபவர்கள் பத்திரிகாலயங்கள்தாம். பொங்கலா—உம், ஒரு விசேஷ இதழ்; தீபாவளியா—சரி, பிரத்யேக மலர்; குடியரசு தினமா—அதற்கொரு 'இஷ்யூ'—என்று விசேஷ மலர்கள் வெளியிட்டுத் தள்ளி விடுகிறார்கள். ஏழெட்டு வண்ண ஓவியங்களோடு, நாலு 'பெரிய' மனிதர்கள் கட்டுரைகளோடு ஏறிய விலையில் வெளிவரும் விசேஷ மலர்களையெல்லாம் ஒரேசமயத்தில் வாங்க முடியாமல் திணறும் வாசகர்கள் படும் பாடு விநோதம்தான்! இந்த ரஸிகர்களோடு பழம் பேப்பர்காரன் அடையும் லாபம் செய்தியில் அடங்காது.

இவர்கள்மட்டுமா? வருடத்திற்கொருமுறை விசேஷ மலர்களுக்கு மட்டும் விஷயதானம் செய்யும் 'பிரமுகர்'களுக்கு இத்தகைய பண்டிகைகள் வராவிடில் வேறு வாய்ப்பு ஏது? எண்ணிறந்த கதைகளை எழுதிக் குவிக்கும் எழுத்தாளர்களுக்குப் பண்டிகைகள் புரியும் உதவி இவ்வளவு அவ்வளவு அல்ல! பிரிந்தவர்கள் கூடினால் பேச முடியாத தீபாவளிக் குதூகலக் கதைகள், பொங்கல் தினத்தன்று அழும் குழந்தையோடு அரிசியின்றி அல்லற்படும் 'அஞ்சலை'கள் பற்றிய சோக சித்திரங்கள், கார்த்திகையையும் சகோதர வாஞ்சையையும் கலந்து குழைத்து, நவராத்திரியோடு குழந்தைகள் மனத்தத்துவத்தைப் புகுத்தி எழுத்தாளர்கள் எழுதித் தள்ளிய சிறுகதைகள் பற்பல எல்லாம் பண்டிகைகளின் மகாத்மியம் என்று கூறுவதல்லாமல் வேறென்ன சொல்லுவது?

இவ்வாறு ஆஸ்திகர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும், வியாபாரிகளுக்கும் விவாகமானவர்களுக்கும், குழந்தைகளுக்கும் கிழவர்களுக்கும் எல்லோருக்கும் மொத்தத்தில் மகிழ்ச்சி அளிப்பவை பண்டிகைகள். 'விலைவாசிகள் ஏறிக் கிடக்கும் இந்நாளில், பண்டிகையாவது, ஒன்றாவது?' என்று வரட்டுத் தத்துவம் பேசும் வேதாந்திகள் பேச்சை விட்டுத் தள்ளுங்கள். பொருளாதார நெருக்கடியினால் பொழுது போக்குச் சாதனங்களையும், இதர தேவைகளையும் நாம் குறைத்துக் கொண்டு விடவில்லை. உண்மையாகக் கொண்டாடப்படும் பண்டிகைகளிலுள்ள ஆத்மத் திருப்தியும், ஆனந்தமும் புகை மண்டாத சினிமாக் கொட்டகையிலோ, குழந்தையின் அழுகை கலக்காத சங்கீதக் கச்சேரியிலோ பெற்றுவிட முடியாது. பண்டிகை பண்டிகைகள் தாம்! வாழ்க அவை!!


பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)

Phone: 84254.

குழந்தைகளின் ஈரல், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்று தான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

10, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

திருச்சி கிளை:— 15, புதுபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

# ஹிந்திப் பாடங்கள்

'பண்டிட்ஜி'

## பயிற்சி 10-अभ्यास-10

### விடைகள்-उत्तर

(அ)

1. कटहल मीठा (அல்லது बड़ा) फल है।
2. मदरास और मैसूर बड़े (அல்லது अच्छे) शहर हैं।
3. जी नहीं, भारत में पचास करोड़ लोग नहीं हैं।
4. जी नहीं, आर्लदूर में लाख लोग नहीं हैं।
5. कुंभकोणम में एक लाख लोग हैं।
6. जी नहीं, नेहरू जी नाटे आदमी नहीं हैं।

(ஆ)

1. शंकर बहुत अच्छा आदमी है।
2. वह गाँव का आदमी है।
3. शंकर का गाँव छोटा गाँव है।
4. कंदन भी गाँव ही में है।
5. शंकर और कंदन गाँव के आदमी हैं।
6. वे बहुत अच्छे आदमी हैं।
7. वे बुरे आदमी नहीं हैं।
8. राम का बड़ा भाई कहाँ है?
9. गोपाल का छोटा भाई यहाँ नहीं है।
10. घर में कैसे फल हैं?
11. बाग़ में यहाँ बुरे फल नहीं हैं।
12. यहाँ सब अच्छे फल ही हैं।

## பாடம் 11-पाठ 11

சென்ற வாரத்துப் பாடத்தில் நீங்கள் படித்த சில சொற்றொடர்களை மீண்டும் குறிப்பிடுகிறேன். கவனித்துப் பாருங்கள்:

बड़ा देश—பெரிய தேசம்

बड़े देश—பெரிய தேசங்கள்

छोटा शहर—சிறிய நகரம்

छोटे शहर—சிறிய நகரங்கள்

मीठा फल—இனிப்பான பழம்

मीठे फल—இனிப்பான பழங்கள்

இந்தச் சொற்றொடர்களிலுள்ள देश, शहर, फल என்ற பெயர்ச் சொற்கள் (Nouns) ஒருமையிலும் (Singular) பன்மையிலும் (Plural) ஒரே ரூபத்தில் இருக்கின்றன. ஆனால் இந்தப் பெயர்ச் சொற்களின் குண விசேஷங்களைக் குறிப்பிடும் பெயர் உரிச்சொற்கள் (Adjectives) ஒருமையில் आ ஓசையிலும், பன்மையில் ए ஓசையிலும் முடிகின்றன. பெயர் உரிச்சொற்களின் முடிவிலுள்ள இந்த आ அல்லது ए ஓசையிலிருந்துதான் அவற்றைச் சேர்ந்த பெயர்ச் சொற்கள் ஒருமையா அல்லது பன்மையா என்ற விவரம் நமக்குத் தெரிகிறது.

बड़ी स्त्री—பெரிய ஸ்த்ரீ

छोटी रानी—சிறிய ராணி (ராணீ)

अच्छी माता—நல்ல தாயார்

இந்தச் சொற்றொடர்களையும் கவனித்துப் பாருங்கள் இவற்றிலுள்ள பெயர்ச்சொற்கள் உங்களுக்குத் தெரிந்தவையே. அவைகள் பெண்பால் (Feminine Gender) வார்த்தைகள் என்பதையும் சொல்லத் தேவையில்லை. இந்தப் பெயர்ச் சொற்களின் குண விசேஷங்களைக் குறிப்பிடும் பெயர் உரிச்சொற்களும் உங்களுக்குப் புதியனவல்ல. ஆனால் சிறிது மாறு வேஷத்துடன் வந்திருக்கின்றன. அவ்வளவுதான் அடுத்து வரும் பெயர்ச்சொல்லுக்குத் தகுந்தாற்போல் தான் பெயர் உரிச்சொல்லும் வேஷம்போட்டுக்கொண்டு வருகிறது.

அதாவது, அடுத்து வரும் பெயர்ச்சொல் ஆண்பால் (Masculine Gender) ஒருமைச் சொல்லானால் அதை விளக்கும் பெயர் உரிச்சொல்லும் ஆண்பால் ஒருமை ரூபத்தில் இருக்கிறது. ஆண்பால் பன்மைச் சொல்லானால் அதை விளக்கும் பெயர் உரிச்சொல்லும் ஆண்பால் பன்மை ரூபத்தில் இருக்கிறது. பெயர்ச்சொல் பெண்பாலில் இருந்தால் அதைச் சேர்ந்த பெயர் உரிச்சொல்லும் பெண்பால் ரூபத்தில் இருக்கிறது. மேலே बड़ी, छोटी, अच्छी என்று பெயர் உரிச்சொற்கள் ई ஓசையில் முடிவதற்கு இதுதான் காரணம்.



बड़ी नदी—பெரிய நதி

अच्छी विधि—நல்ல விதி (முறை, சட்டம்)

இந்தச் சொற்றொடர்களில் 'நதி' 'விதி' என்பவை தமிழில் ஆண்பால் சொற்களும் அல்ல பெண்பால் சொற்களும் அல்ல ஒன்றன் பால் சொற்கள் ஆனால் ஹிந்தீ மொழி பெயர்ப்பில் அந்தப் பெயர்ச் சொற்களுக்கு முன்புள்ள பெயர் உரிச் சொற்கள் ई ஓசையில் முடிகின்றன. ஏனெனில் ஹிந்தீ பாஷையில் नदी, विधि ஆகிய சொற்கள் கூட பெண்பால் சொற்கள்!

இது தமிழர்களுக்குக் கொஞ்சம் புதுமையாகப்படும் देश, शहर, बाग़ முதலியவை ஆண்பால் சொற்களாவது! नदी, विधि முதலியவை பெண்பால் சொற்களாவது! தமிழில் இந்த மாதிரி கிடையாதேயென்று நீங்கள் ஆச்சரியப்படலாம் வாஸ்தவம்.

தமிழ்ச் சொற்களில் 'தாய்', 'தகப்பன்', 'பையன்', 'பெண்' என்ற உயர் திணைச் சொற்களைத்தான் ஆண்பால். பெண்பால் என்று வகுப்பது வழக்கம். வீடு', 'தோட்டம்', 'மாடு' 'கன்று', 'நாய்', 'குதிரை' முதலிய அஃறிணைச் சொற்களையெல்லாம் ஒன்றன்பால் என்ற வகுப்பில் சேர்ப்போம்

ஹிந்தியில் இந்தமாதிரி ஒன்றன் பால் கிடையாது ஆண்பால், பெண்பால் என்ற இரண்டு பால்கள் தான் உண்டு எனவே உயர் திணைச் சொற்களைப்போலவே அஃறிணைச் சொற்களும், ஆண்பால், பெண்பால் என்ற பாகுபாட்டுக்குள்ளாகின்றன சில அடிப்படைகளின் பேரில்தான் இந்தப் பாகுபாடும் செய்யப்படுகிறதெனினும் அந்த அடிப்படைகள் அவ்வளவு திட்டமாகவும், கண்டிப்பாகவும் கவனிக்கப்படுவதில்லை. ஆதலால் விதிவிலக்குகளும் ஏராளமாக இருக்கின்றன எனவே அந்த அடிப்படைகள் யாவை என்னும் விஷயத்தை உடனடியாகக் கவனித்தாக வேண்டியதில்லை. பின்னொரு ஸமயம் அதை ஸாவகாசமாகக் கவனித்துக் கொண்டால் போதும் இப்போதைக்குப் புரிவதற்காக இனி வரும் பெயர்ச் சொற்களுக்குப் பக்கத்தில் 'ஆ. பா.' என்றும் 'பெ. பா' என்றும் குறித்து ஆண்பால், பெண்பால் பாகுபாட்டை விளக்குகிறேன் சரியாக கவனித்துக் கொள்ளுங்கள்.

இதுவரை நம் பாடங்களில் அடிப்படைச் சொற்களில் வந்துள்ள பெயர்ச் சொற்கள் எல்லாம் ஆண்பால் பெயர்ச் சொற்களே!

இனி கீழேயுள்ள சொற்றொடர்களை கவனியுங்கள்:

बड़ा लड़का—பெரிய பையன்.

बड़े लड़के—பெரிய பையன்கள்.

बड़ी लड़की—பெரிய பெண்

बड़ी लड़कियाँ—பெரிய பெண்கள்.

सुंदर लड़का—அழகான பையன்.

सुंदर लड़के—அழகான பையன்கள்.

सुंदर लड़की—அழகான பெண்

सुंदर लड़कियाँ—அழகான பெண்கள்.

लड़का என்பது ஆண்பால் ஒருமைப் பெயர்ச்சொல் அது ஆண்பால் பன்மையில் लड़के என்றும், பெண்பால் ஒருமையில் लड़की என்றும், பெண்பால் பன்மையில் लड़कियाँ என்றும் மாறிவிடுகிறது

இந்தப் பெயர்ச் சொல்லைப் போலவே बड़ा என்ற ஆண்பால் ஒருமைப் பெயர் உரிச்சொல்லும் ஆண்பால் பன்மையில் बड़े என்றும், பெண்பால் ஒருமை பன்மை இரண்டிலும் बड़ी என்றும் மாறிவிடுகிறது.

அதாவது ஆண்பால் ஒருமையில் आ ஓசையில் முடியும் பெயர்ச் சொற்களும், பெயர் உரிச் சொற்களும், ஆண்பால் பன்மையில் ए ஓசையில் முடிகின்றன; பெண்பாலில் ई ஓசையில் முடிகின்றன आ-ए-ई என்ற முடிவோசையைப்பற்றிய இந்த விதிக்குத்தான் ஹிந்தியில் "आ-ए-ई விதி" என்று பெயர்.

ஆண்பால் ஒருமையில் आ என்ற ஓசையில் முடியும் பெயர்ச் சொற்களுக்கும், பெயர் உரிச் சொற்களுக்குந்தான் இந்த आ-ए-ई விதி பொருந்தும். आ அல்லாத வேறு ஓசையில் முடியும் பெயர்ச் சொற்களுக்கோ, பெயர் உரிச் சொற்களுக்கோ இந்த आ-ए-ई விதி பொருந்தாது.

घर என்ற பெயர்ச் சொல் आ ஓசையில் முடியவில்லை எனவே ஒருமை-பன்மை என்ற மாறுதலின்றி இரண்டிலும் அது घर என்ற ரூபத்திலேயே இருக்கிறது. அதே மாதிரி सुंदर என்ற பெயர் உரிச்சொல்லும் आ ஓசையில் முடியவில்லை ஆகையினால்தான் ஆண்பால் ஒருமை, ஆண்பால் பன்மை, பெண்பால் ஒருமை, பெண்பால் பன்மை ஆகிய நான்கு நிலைகளிலும் அது மாறவில்லை

राम का लड़का—ராமனுடைய பையன்

राम के लड़के—ராமனுடைய பையன்கள்.

राम की लडकी—ராமனுடைய பெண்.

राम की लडकियाँ—ராமனுடைய பெண்கள்.

இந்தச் சொற்றொடர்களையும் கவனித்துப்பாருங்கள் का என்பதற்கு 'உடைய' என்றுதான் அர்த்தம். ஆனால் அது राम என்ற சொல்லுடன் சேர்ந்து பெயர் உரிச் சொல்லைப் போலவே வழங்குவதால் அதுவும் आ-ए-ई விதிக்கு உட்படுகிறது. எந்தப் பெயர்ச் சொல்லின் குண விசேஷங்களை அது குறிக்கிறதோ அந்தப் பெயர்ச்சொல் ஆண்பால் ஒருமையா, பன்மையா அல்லது பெண்பாலா, என்பவற்றைப் பொருத்து का வும் के என்றோ की என்றோ மாறுகிறதுஎனினும் का, के, की ஆகிய

மூன்றுக்கும் 'உடைய' என்ற ஒரே அர்த்தம்தான்.

கீழேயுள்ள வாக்யங்களை நீங்கள் கவனமாகப் படித்து எழுதிப் பழகினால் இந்த आ-ए-ई விதி உங்களுக்கு வெகு நன்றாக விளங்கிவிடும்:—

**राम कौन है ?**

ராமன் யார்?

**राम एक लड़का है।**

ராமன் ஒரு பையன்.

**वह अच्छा लड़का है।**

அவன் நல்ல பையன்.

**लक्ष्मण भी एक लड़का है।**

லக்ஷ்மணன் கூட ஒரு பையன்.

**वह कैसा लड़का है ?**

அவன் எப்படிப்பட்ட பையன்?

**वह भी अच्छा लड़का है।**

அவனும் நல்ல பையன்.

**राम और लक्ष्मण दो लड़के हैं।**

ராமனும், லக்ஷ்மணனும் இரண்டு பையன்கள்

**दोनों कैसे लड़के हैं ?**

இருவரும் எப்படிப்பட்ட பையன்கள்?

**दोनों अच्छे लड़के हैं।**

இருவரும் நல்ல பையன்கள்.

**राम का भाई लक्ष्मण है।**

ராமனுடைய ஸஹோதரன் லக்ஷ்மணன்

**लक्ष्मण का भाई राम है।**

லக்ஷ்மணனுடைய ஸஹோதரன் ராமன்.

**राम और लक्ष्मण भाई हैं।**

ராமனும், லக்ஷ்மணனும் ஸஹோதரர்கள்.

**दोनों भाई-भाई हैं।**

இருவரும் (பரஸ்பரம்) ஸஹோதரர்கள்.

**दोनों अच्छे लड़के हैं।**

இருவரும் நல்ல பையன்கள்.

**भरत कौन है ?**

பரதன் யார்?

**भरत भी राम का भाई है।**

பரதனும் ராமனுடைய ஸஹோதரன்.

**राम, लक्ष्मण और भरत भाई-भाई हैं।**

ராமனும், லக்ஷ்மணனும் பரதனும் (பரஸ்பரம்) ஸஹோதரர்கள்.

**तीनों अच्छे भाई हैं।**

மூவரும் நல்ல ஸஹோதரர்கள்.

**कमला कौन है ?**

கமலா யார்?

**कमला एक लड़की है।**

கமலா ஒரு பெண்.

**वह कैसी लड़की है ?**

அவள் எப்படிப்பட்ட பெண்?

**वह सुंदर लड़की है।**

அவள் அழகான பெண்.

**विमला भी एक लड़की है।**

விமலாவும் ஒரு பெண்

**क्या, वह भी सुंदर लड़की है ?**

அவளும் அழகான பெண்ணா?

**जी हाँ, वह भी सुंदर लड़की है।**

ஆம் ஐயா, அவளும் அழகான பெண்.

**कमला और विमला दो लड़कियाँ हैं।**

கமலாவும், விமலாவும் இரண்டு பெண்கள்.

**दोनों सुंदर लड़कियाँ हैं।**

இருவரும் அழகான பெண்கள்.

**कमला विमला की बहन है।**

கமலா விமலாவின் ஸஹோதரி.

**दोनों बहनें हैं।**

இருவரும் ஸஹோதரிகள்.

**कमला राम की बहन है।**

கமலா ராமனுடைய ஸஹோதரி.

**विमला भी राम की बहन है।**

விமலாவும் ராமனுடைய ஸஹோதரி

**कमला और विमला, दोनों राम की बहनें हैं।**

கமலா, விமலா, இருவரும் ராமனுடைய ஸஹோதரிகள்.

**दोनों लड़कियाँ राम, लक्ष्मण और भरत की बहनें हैं।**

இரண்டு பெண்களும் ராமன் லக்ஷ்மணன், பரதனுடைய (மூவருடைய) ஸஹோதரிகள்.

**सब लोग एक ही घर में हैं।**

எல்லா ஜனங்களும் (எல்லோரும்) ஒரே வீட்டில் இருக்கிறார்கள்.

**घर में राम का बाप है।**

வீட்டில் ராமனுடைய தகப்பன் இருக்கிறான்.

**राम का बाप कैसा आदमी है ?**

ராமனுடைய தகப்பன் எப்படிப்பட்ட மனிதன்?

**राम का बाप बूढ़ा आदमी है।**

ராமனுடைய தகப்பன் கிழ மனிதன் (கிழவன்)

**वह जवान आदमी नहीं है।**

அவன் யௌவன மனிதன் (வாலிபன்) அல்ல.

**बाप का नाम क्या है ?**

தகப்பனின் பெயர் என்ன?

**बाप का नाम नारायण है।**

தகப்பனின் பெயர் நாராயணன்.

**राम की माँ भी घर में है।**

ராமனுடைய தாயும் வீட்டில் இருக்கிறாள்

**राम की माँ कैसी औरत है ?**

ராமனுடைய தாய் எப்படிப்பட்ட ஸ்த்ரீ?

**राम की माँ भी बूढ़ी है।**

ராமனுடைய தாயும் கிழவியாக இருக்கிறாள் (கிழவி)

**वह जवान नहीं है।**

அவள் யௌவனமான (ஸ்த்ரீ) அல்ல.

**माँ का नाम क्या है ?**

தாயின் பெயர் என்ன?

**माँ का नाम तंगम्मा है।**

தாயின் பெயர் தங்கம்மா.

**तंगम्मा नारायण की कौन है ?**

தங்கம்மா நாராயணனின் யார்? (தங்கம்மாவுக்கும் நாராயணனுக்கும் என்ன உறவு?)

**तंगम्मा नारायण की पत्नी है।**

தங்கம்மா நாராயணனின் மனைவி.

**नारायण तंगम्मा का कौन है ?**

நாராயணன் தங்கம்மாவின் யார்? (நாராயணனுக்கும் தங்கம்மாவுக்கும் என்ன உறவு?)



**नारायण तंगम्मा का पति है।**

நாராயணன் தங்கம்மாவின் கணவன்.

**राम नारायण का बेटा है।**

ராமன் நாராயணனின் புத்ரன்.

**राम, लक्ष्मण और भरत नारायण के बेटे हैं।**

ராமனும், லக்ஷ்மணனும். பரதனும் நாராயணனின் புத்ரர்கள்.

**कमला नारायण की कौन है ?**

கமலா நாராயணனுடைய யார்? (கமலாவுக்கும் நாராயணனுக்கும் என்ன உறவு?)

**कमला नारायण की बेटी है।**

கமலா நாராயணனின் புத்ரி.

**कमला और विमला नारायण की बेटियाँ हैं।**

கமலாவும் விமலாவும் நாராயணனின் புத்ரிகள்.

**तो, घर में कौन-कौन हैं ?**

அப்படியானால், வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?

**घर में माँ, बाप, तीन बेटे और दो बेटियाँ हैं।**

வீட்டில் தாயும், தகப்பனும். மூன்று புத்ரர்களும். இரண்டு புத்ரிகளும் இருக்கிறார்கள்

**घर में कितने लोग हैं ?**

வீட்டில் எத்தனை ஜனங்கள் (பேர்கள்) இருக்கிறார்கள்?

**घर में सात लोग हैं।**

வீட்டில் ஏழு பேர்கள் இருக்கிறார்கள்.

**सातों लोग बहुत अच्छे हैं।**

ஏழு பேர்களும் ரொம்ப நல்லவர்கள்.

**राम मोटा लड़का है।**

ராமன் பருமனான பையன்.

**पर, लक्ष्मण मोटा नहीं है।**

ஆனால் லக்ஷ்மணன் பருமனாக இல்லை.

**वह दुबला लड़का है।**

அவன் மெலிந்த பையன்.

**भरत भी दुबला लड़का है।**

பரதனும் மெலிந்த பையன்.

**दोनों दुबले लड़के हैं।**

இருவரும் மெலிந்த பையன்கள்.

**दोनों लंबे भी हैं।**

இருவரும் நெட்டையாகவும் இருக்கிறார்கள்.

**दोनों लंबे और दुबले हैं।**

இருவரும் நெட்டையாகவும் மெலிந்தும் இருக்கிறார்கள்.

**राम लंबा नहीं है।**

ராமன் நெட்டையாக இல்லை.

**राम नाटा लड़का है।**

ராமன் குட்டையான பையன்.

**राम नाटा और मोटा है।**

ராமன் குட்டையாயும், பருமனாயும் இருக்கிறான்.

**राम काला नहीं है।**

ராமன் கருப்பாக இல்லை.

**पर दोनों लड़कियाँ काली हैं।**

ஆனால் இரண்டு பெண்களும் கருப்பாக இருக்கிறார்கள்.

**कमला की आँखें बड़ी हैं।**

கமலாவின் கண்கள் பெரியவை.

**विमला की आँखें लंबी हैं।**


விமலாவின் கண்கள் நீண்டவை.

**दोनों की आँखें कैसी हैं ?**

இருவருடைய கண்களும் எப்படிப்பட்டவை?

**दोनों की आँखें बहुत सुंदर हैं।**

இருவருடைய கண்களும் மிகவும் அழகானவை.



## குறிப்புக்கள்

நீங்கள் நன்ருக ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டுமென்பதற்காக இந்தப் பாடத்தின் ஸாரத்தை மீண்டுமொருமுறை கீழே குறிப்பிடுகிறேன். கவனித்துக் கொள்ளுங்கள்:

1. ஆண்பால் ஒருமையில் आ ஓசையில் முடியும் பெயர் உரிச்சொற்கள் ஆண்பால் பன்மையில் ए ஓசையில் முடிகின்றன; பெண்பால் ஒருமை—பன்மை இரண்டிலும் ई ஓசையில் முடிகின்றன.

(உ-ம்) बड़ा, अच्छा முதலியன.

2. आ அல்லாத வேறு ஓசைகளில் முடியும் பெயர் உரிச்சொற்கள் ஆ. பா, பெ பா., ஒருமை, பன்மை ஆகிய எந்த நிலையிலும் மாரு.

(உ—ம்) सुंदर, जवान முதலியன,

3 ஆண்பால் ஒருமையில் आ ஓசையில் முடியும் பெயர்ச் சொற்கள் ஆண்பால் பன்மையில் ए ஓசையில் முடியும். அவற்றிற்கு நேரான பெண்பால் சொற்கள் இருக்குமானல், அவை பெண்பால் ஒருமையில் ई ஓசையிலும் பெண்பால் பன்மையில் इयाँ ஓசையிலும் முடியும்.

(உ-ம்) लड़का, बेटा முதலியன

4. आ அல்லாத வேறு ஓசைகளில் முடியும் ஆண்பால் பெயர்ச் சொற்கள் ஒருமை—பன்மை ஆகிய இரு நிலைகளிலும் மாருமல் ஒரே ரூபத்துடன் இருக்கும்.

(உ-ம்) देश, शहर, घर, बाग़, आदमी, भाई முதலியன.

5 अ ஓசையில் முடியும் பெண்பால் ஒருமைப் பெயர்ச் சொற்கள் பன்மையில் एँ ஓசையில் முடியும்.

(உ-ம்) बहन, आँख முதலியன.

(இங்கு 'பஹன்' 'ஆ(ம்) க்ஹ' என்று படிக்கும் போது மெய்யொலியில் முடித்தாலும் 'ன' 'க்ஹ' என்ற முடிவெழுத்துக்களின் முழு ஓசையிலிருந்து முடிவோசை अ என்று நிர்மானிக்க வேண்டும்)

### இந்தப் பாடத்தில் வந்துள்ள புதிய அடிப்படை வார்த்தைகள்

लड़का—(ஆ பா) பையன்

लड़की—(பெ. பா.) பெண்

दोनों—இரண்டும், இருவரும்

तीनों—மூன்றும், மூவரும்

सातों—ஏழும், ஏழு பேர்களும்

का, के, की—அது இன், உடைய

सुंदर—அழகான

बहन—(பெ. பா) ஸஹோதரி

बाप—(ஆ. பா.) தகப்பன்

माँ, माता—(பெ பா) தாய்

बूढ़ा, बूढ़े, बूढ़ी —கிழ

जवान—யௌவனமான, வாலிப

नाम—(ஆ. பா.) பெயர்

औरत—(பெ பா.) ஸ்த்ரீ

मोटा, मोटे, मोटी—பருமனுன

दुबला, दुबले, दुबली — மெலிந்த, ஒல்லியான

काला, काले, काली—கருப்பான

बेटा—(ஆ பா) புத்ரன்

बेटी—(பெ. பா.) புத்ரி

पति—(ஆ. பா.) கணவன்

पत्नी—(பெ. பா.) மனைவி

आँख—(பெ. பா.) கண்

## பயிற்சி 11-अभ्यास 11

(அ)

அடைக்கோடுகளில் கொடுக்கப்பட்டுள்ளசொற்களிலிருந்துதகுந்தவற்றைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்பவும்:—

1. नारायण—आदमी है।
(लंबे पतली, बूढ़ा)

2. तंगम्मा नारायण—पत्नी है।
(का, के, की)

3. लक्ष्मण और भरत—लड़के हैं।
(लंबा, अच्छे, बड़ी)

4. गाँव में आम—तीस पेड़ हैं।
(का, के, की)

5. यहाँ का बाग़—है।
(अच्छे, बड़ा, छोटी)

6. यह—लडकी कमला है।
(लंबा, काली, बड़े)

(ஆ)

ஹிந்தியில் மொழி பெயர்க்கவும்:—

1 கோபாலன் ஒரு நெட்டையான பையன்.
2. அவன் மெலிந்தவனுகவும் இருக்கிருன்.
3 கோபாலன் நெட்டையான, மெலிந்த பையன்
4. ஸீதா கருப்பான பெண்.
5 ஆனல் அவள் அழகானவள்.
6. ஸீதா கருப்பான, ஆனல் அழகான பெண்.
7. ஸீதா கோபாலனின் ஸஹோதரி
8 கோபாலன் ஸீதாவின் ஸஹோதரன்
9 ஸீதாவின் கணவன் ராமஸ்வாமி
10. ராமஸ்வாமி ஒரு நல்லமனிதன்.
11. ஜலஜாவும், வனஜாவும் ஸீதாவின் புத்ரிகள்.
12. ராமுவும் கோபுவும் ஸீதாவின் புத்ரர்கள்.

(விடைகள் அடுத்த இதழில்)

**जय हिंद ! जय हिंदी !**



# நவரஸ நந்தவனம்

★ [ கனல் ] ★

## 11
## அதிசயம்

★

வானத்தில் தவழும் இரண்டு ஒளிக் குழந்தைகளைக் காணும்போது நாம் அடையும் உணர்ச்சியை என்னென்பது! நீலக்கடலும், வானவெளியும் வளர்மா மலைகளும். பசுஞ் சோலையும் நமக்கு அளிக்கும் இன்பம் தான் என்ன! ஆகா! இயற்கையின் எல்லை கடந்த ஸௌந்தரியத்தில் இல்லாத இன்பமும் உண்டா? கவலைக்கு மருந்தல்லவா அவைகள்? போராட்டத்திற்கு முடிவைத் தரும் பொக்கிஷங்கள் அல்லவா அவைகள்! தினமும் பொழுது விடிகிறது;மறைகிறது. சூரியன் தோன்றுகிருன் மறைகிருன்.

சில நாட்களில் சந்திரன் வளர்கிருன். பின்னும் சில நாட்களில் தேய்ந்து குறைகிருன். ஒரு நாள் பூரண ஸ்வரூபத்துடன் காட்சியளிக்கிருன் மற்றொரு நாள் அவனைக் காண முடிவதேயில்லை!

இவைகளுக்கு முடிவே கிடையாது அல்லவா? இவைகளுடைய எழுச்சியால்தான் எத்தகைய மேலான நிலை சம்பவிக்கிறது!

ஆகா! என்ன ஆச்சரியம் இது!

சூரியன் உதித்ததும் தாமரை மலர்கிறது.

அவன் மறைந்தால் அது குவிகிறது.

சந்திரனைக்கண்டு குமுதம் மலர்கிறது

சூரியனைக்கண்டுவிட்டால் கூம்புகிறது. என்ன அதிசயம் இது!

இன்று பொட்டலாகக் கிடக்கும் பிரதேசம் சில நாட்களில் பசும் பூஞ்செடிகள் நிறைந்த பூங்காவனமாக ஆகிவிடுகிறது.

அதே பூங்காவனம் பின்னும் சில நாட்களில் வெறும் பொட்டலாகிவிடுகிறது.

நேற்றிருந்தவன் இன்றிருப்பதில்லை

நேற்றில்லாதவன் இன்று முளைத்துவிடுகிருன்! வந்து வீசுகிறது மந்தமாருதம்; அதன் மூலாதாரம் நமக்குத் தெரிவதில்லை சில நாட்கள் மழை பெய்கிறது, சில நாட்கள் நல்ல வெயில் அடிக்கிறது, வேறு சில நாட்கள் பனி சூழ்கிறது!

இவைகள் எல்லாம் அதிசயமே அல்லவா? விதம் விதமான வர்ணங்கள்! பல்வகையான பிராணிகள் பற்பல விசித்திரமான தோற்றங்கள்! பலவகையான நிலைகள்!

என்னே இயற்கையில் புதைந்து கிடக்கும் அதிசயம்!

படைப்புத் தேவனின் பரிபூரணமான ஆற்றலும். அவனுடைய இயற்கைப் பொருள்களிலேயே தேக்கப்பட்டிருக்கிறது அந்த இயற்கையின் இயற்கையே நமக்கு அற்புதமாக இருக்கிறது! அற்புதத்தின் உறைவிடம் அந்த இயற்கை. அதைக் கண்டு கொண்டிருந்தாலே போதும்; நமக்குத் துன்பம் இல்லை; துயரம் இல்லை. அவைகளுக்கு மாருக நாம் பெறுவதோ இன்பம்தான் சுகானுபவம்தான்!

ஒப்பற்ற கலைஞர்களும், கவிஞர்களும் அந்த அதிசயத்தின் இன்பத்தில் ஆழ்ந்துவிடுவதனுல்தான் மகா ரஸிகர்களாகவும். உலகம் போற்றும் மகா புருஷர்களாகவும் விளங்க முடிகிறது. உண்மையிலேயே அவர்கள் இயற்கையில் இறைவனைக் காண்கிருர்கள் இறைவனைக் கண்டுவிட்டவர்கள் பார்வையை வேறு பக்கம் திருப்புவார்களா? மகமேரு பருவதத்தின் சிகரத்தில் வாழும் ஸௌபாக்கிய நிலையிலிருந்து, மடுவில் குதிக்க எவரே விரும்புவா?

அற்புதமான காட்சியிலே நமக்கு உண்டாகும் இன்பம் அலாதிதான். உலக அதிசயங்கள் என்னென்ன என்பதைக் கணக்கிட்டு, அவைகளைப் பார்க்கச் செல்வதில் நாட்டம் செலுத்தாதவர் இருக்க முடியாது இந்த இருபதாம் நூற்ருண்டில்தான் என்னென்ன அதிசயங்கள்! உள்ளத்தின் உத்ஸாகத்திற்கு அவைகள் எத்தகைய உறுதியைத்தான் அளித்துவிடுகின்றன!

அதிசயம், அற்புதம் என்று கூறிப் போற்றத் தக்க பொருள்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவ்வாறு கூறத் தக்க செயல்கள் எவ்வளவோ நடக்கின்றன. அவைகளை அறிந்து நாம் அடையும் வியப்புணர்ச்சியே நமக்கு இன்பம் அல்லவா?

அன்று கண்ணன் அவதரித்தான்!

அவன் செய்த ஜாலங்கள் எத்தனை. எத்தனை! "கண்ணன் முகம் மறந்து போனல், இரு கண்கள் இருந்து பயன் இல்லை" என்றும், "தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கும் இன்பமெல்லாம் ஒருருவாய்ச் சமைந்தவன்" என்றும் பாரதியார் மனமுருகிப் பாடும் பாட்டைச் சாமானியமானதாகச் சொல்லிவிட முடியுமா? 'கண்ணன் கதை'யைக் கேட்டு களிக்க விரும்பாத ஜீவன் இல்லை யென்றே கூறலாம் அல்லவா? 'பிள்ளைக் கனியமுதே' என்று பாரதியார் கண்ணனைக் கொண்டாடுவதை நினைக்கையிலேயே ஒரு பேரின்பம் வியாபிக்கத்தான் செய்கிறது. இன்னும் ஆழ்வார்கள் கண்ணனைப் பற்றிப் பாடியுள்ள செய்யுட்களைத் தினந்தோறும் அனுபவித்தால், அப்பொழுது ஏற்படும் இன்பம் எத்தகையது என்பதை எளிதில் சொல்லிவிட முடியாது.

அவன் தீராத விளையாட்டுப் பிள்ளை! அவனது பால லீலைகள் யாவும் அற்புதங்கள். உலக மகா நாடகத்தை நடத்தும் உயர்ந்த நடிகனும், ஒப்பற்ற சூத்ரதாரியுமான அவனது செயல் ஒவ்வொன்றும், சாமானிய மனிதனுல் கனவிலும் கருத முடியாத சாதனைகள்

பெரியவர்கள் சொல்வதுண்டு, 'அலைகள் வீசும் இன்பத் துளிகள் நமக்கு எவ்வளவு ஆனந்தம் தருகின்றன. அந்தக் கடலிலேயே திளைக்கும் ஆனந்தம் கிடைத்துவிட்டால். அப்புறம் என்ன இருக்கிறது?' என்று.

அதுபோல், சாதாரண மனிதனிடம் நாம் எதிர் பாராமல் காணும் அற்புதச் செயல்களையே கொண்டாடும்போது, மூலாதாரமான கண்ணனின் விளையாட்டுக்கள் கருத்தைப் பெரிதும் கவர்ந்து நம்மை வியப்பில் ஆழ்த்துவதில் தடையில்லையல்லவா?

முதலில் அவன் பிறப்பே ஓர் அற்புதம்தான் இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறந்தான் அதுவும் சிறையில் பிறந்தான். பிறந்தவன். தன்னை ஈன்ற தாயுடனுவது இருக்க முடிந்ததா? அதுவும் இல்லை.

குழந்தை பிறந்ததும் எப்படியாவது அதை வெளியேற்றினுல் போதும் என்று ஆகிவிட்டது பெற்ருேருக்கு. ஒவ்வொரு நிமிஷமும் பகைவன் அதையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருன் என்பது அவர்களுக்கல்லவா தெரியும்! குழந்தையுடன் தாம் சேர்ந்து இருக்கத்தான் முடியவில்லை; குழந்தையாவது ஸௌக்யமாக வாழ வேண்டுமே என்ற அளவுக்கு அவர்கள் கவலை சென்றுவிட்டது உலகத்தின் தலைவனுன அவனது கோபத்துக்காக உள்ளம் ஊசலாடியவர்கள் அவர்கள்! உண்மையில் அவன் அவர்களைக்



காக்கவும், அவனியைக் காக்கவும் பிறந்தவன்! அவனுக்குத் தன்னைக் காத்துக்கொள்ளத் தெரியாதா? உண்மையில், புத்திர வாஞ்சைதான் வசுதேவரைத் தூண்டியது.

குழந்தையை மெல்லத் தூக்கிக்கொண்டு, சிறையிலிருந்து நகர்ந்தார் வசுதேவர் தாமாகக் கால் விலங்குகள் கழன்றன. சிறைக் கதவு தானாகத் திறந்துகொண்டது காவலாளர்கள் நல்ல நித்திரையில் இறங்கியிருந்தனர். வசுதேவர் கண்ணனுடன் சிறைக்கு வெளியே வந்துவிட்டார். யமுனா நதியைக்கடந்து கோகுலத்தில் உள்ள நந்தன் வீட்டை அடைந்தார்.

அங்கே யசோதை அப்பொழுதே ஒரு பெண் குழந்தையைப் பெற்று மயங்கிப் படுத்திருந்தாள். அதைத் தூக்கிக்கொண்டு, கண்ணனை அங்கே வைத்துவிட்டுக் கிளம்பினார் வசுதேவர்

பழையபடி சிறைச்சாலைக்குள் புகுந்ததும் கதவு மூடிக்கொண்டது. கால்களில் விலங்குகள் தாமாகப் பொருந்தின, தேவகியின் மடியில் இருந்துகொண்டு அப்பெண்குழந்தை கத்தியது. காவலர்கள் விழித்துக்கொண்டனர் கம்ஸன் வந்தான். அவன் திடுக்கிட்டான் 'பெண்ணாய்ப் பிறந்திருக்கிறதே' என்ற சந்தேகம் அவனுக்கு; 'எதுவானாலென்ன. கொன்றுவிட வேண்டியதுதான்' என்று முடிவு கட்டி, அக்குழந்தையைப் பாறையில் வீசியடிக்கப் போனான்.

ஆனால் அச்சமயம் அக்குழந்தை கையிலிருந்து நழுவி ஆகாசத்திற்குப் போய், 'ஏ மூடா! உன் பகைவன் வேறிடத்தில் சௌக்யமாய் வளர்கிறான்' என்றுகூறி. மறைந்துவிட்டது,

'இதென்னடா அதிசயம்!' என்று கம்ஸன் திகைத்தான். எப்படியாவது பகைவனைக் கண்டுபிடித்துக் கொன்றுவிடுவது என்ற தீர்மானம் அவனுக்குள் ஏற்பட்டது.

இங்கே இப்படியிருக்க, கண்ணன் யசோதையின் குமாரனாக வளரலானான். ஆயர்பாடி முழுவதும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியது அவனது முக ஸௌந்தரியத்தில் மூழ்கித் திளைத்த ஆயர்கூட்டம். அந்த இன்பமே பேரின்பம் என்றும் தீர்மானித்தது.

இதற்குப் பிறகுதான் பல அற்புதச் செயல்கள் ஒன்றுக்குமேல் ஒன்றாக நடக்க ஆரம்பித்தன.

பூதனா என்னும் அரக்கி வந்தாள் அழகிபோல் வேடந்தரித்து வந்தவள், யசோதையிடம்போய் இனிமையாகப் பேசிக் கண்ணனை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு பால் கொடுக்க ஆரம்பித்தாள். கண்ணன் என்ன செய்தான்; அவள் உடலிலுள்ள விஷத்தோடு, இரத்தத்தையும் உறிஞ்சி, அவனைக்கொன்றே விட்டான்!

இதைக் கண்டு கோகுலம் முழுவதும் வியப்பில் மூழ்கியது. விண்ணும் மண்ணும் அளாவிய தோற்றத்துடன் பூதனா செத்துக்கிடந்த காட்சியும், கண்ணனின் மோனப் புன்னகையும் அவர்களுக்கு வியப்பைத் தந்ததில் வியப்பில்லையல்லவா?

ஒரு சமயம் யசோதை குழந்தை கண்ணனை மடியில் வைத்துக்கொண்டிருந்தாள். குழந்தை திடீரென்று கனத்தது. மலைபோன்ற கனம் அதற்கு அவ்வளவு வேகமாக ஏன். எப்படி ஏற்பட்டது என்பது பேதை யசோதைக்குத் தெரியவில்லை,

ஆனால், கண்ணனுக்கு எல்லாம் தெரியுமல்லவா? வந்தவன் திருணாவர்த்தன் என்னும் ஓர் அரக்கன் கம்ஸனால் அனுப்பப்பட்டவன் அவன் குழந்தை—கண்ணனைத் தூக்கிச் செல்வதற்காக வந்தான். யசோதையின் மடியில் குழந்தை இருந்தபடியால் முதலில் கனக்க வைத்தான். யசோதை கீழேவைத்தாள் கண்ணனை ஒரு சுழல் காற்றாக மாறிய அரக்கன் கண்ணனைத் தூக்கிக்கொண்டு போனபோது, கண்ணனே அவனது கழுத்தையே நெரித்துக் கொன்றான்! மலையெனச் சாய்ந்தான் அம் மாபாதகன்! குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது, அவனது சவத்தின்மேல். குழந்தையா அவன்! கோகுலமே வியந்தது,

யசோதைக்குத் தன் கண்ணன் பரந்தாமனே என்பது தெரியாது ஒருநாள் குழந்தை மண்ணைத் தின்கிறதைக் கண்டாள். உடனே அவனருகில் போய், 'ஏண்டா, இப்படி மண்ணைத் தின்கிறாய்!' என்றாள் 'நானா! தின்னவேயில்லையே! என்று சாதித்தான் கண்ணன். அவள் அதட்டினாள், அவன் தன் வாயைத் திறந்தான்—அவள் பார்த்தாள்! எதைப்பார்த்தாள், அவன் தின்ற மண்ணையா? இல்லை. ஈரேழு உலகங்களையுமே பார்த்தாள். ஸ்தம்பம்போல் நின்றுவிட்டாள். 'என் குழந்தையா இவன்!'—அவளால் அதற்கு மேல் ஏதும் நினைக்க முடியவில்லை பிறகு அவன் பாதத்தில் விழுந்து, 'ஹே! பரந்தாமா!' என்று கூறி வணங்கவே முனைந்தாள். ஆனால், சற்றே நிதானித்துத் திரும்பவும் பார்த்தாள் குழந்தையின் வாயை; அப்பொழுது வாயில் வாயைத் தவிர்த்து வேறு ஏதும் தெரியவில்லை!

இது என்ன அதிசயம்!

ஒரு சமயம் கண்ணனின் விஷமம் பொறுக்காமல் உரலில் அவனைக் கட்டியிருந்தாள் யசோதை. அதை உருட்டிக்கொண்டே சென்றவன், இரண்டு மரங்களுக்கு நடுவில் புகுந்தான், அந்த மரங்கள் அப்படியே வேரற்று விழுந்தன!

யசோதை கலங்கினாள். 'நல்ல வேளையாகக் குழந்தை பிழைத்தது' என்று கருதினாள் பேதை.

'மகா துஷ்டன்' என்று பெயர்



பெற்ற கண்ணனே மகா வசீகரமுள்ளவனாதலால், கோகுலத்தார் அனைவராலும் கொண்டாடப்பட்டான். கண்ணனைக் கண்டு அனவரதமும் அவனுடன் கொஞ்சிப் பேசுவதுதான் அவர்களின் லட்சியம், வாழ்க்கை, இன்பம் எல்லாம்!

அதன்பின் கோகுலமே பிருந்தாவனத்திற்குக் குடியேறியது அங்கே யமுனா நதி தீரமும், அதன் ஓரமும், கோவர்த்தன கிரியுமேஅவர்களுடைய விளையாட்டு ஸ்தலமாக அமைந்தன


இப்பொழுது கண்ணன் மாடுகளை மேய்க்கும் அளவுக்கு வயது பெற்றுவிட்டான் பலராமனுடனும், ஆயர் சிறுவர்களுடனும் அவன் மாடு, கன்றுகளை ஓட்டிக்கொண்டு தினமும் போவான் ஒருநாள் அவ்வாறு அவன் சென்றபோது. ஓர் அற்புதமான காரியத்தைச் செய்தான். ஒரு கன்றின் காலைப்பிடித்துச் சுற்றிப் பக்கத்தேயிருந்த விளாமரத்தின் மேலே வீசி எறிந்தான்:

இரண்டு அரக்கர்கள் அப்பொழுது செத்து விழுந்தார்கள். கன்றின் உருவத்தில் ஒருவனும். விளாம்பழ வடிவில் ஒருவனுமாக, அவர்கள் கண்ணனைக் கொல்ல காத்திருந்தது ஆயர் சிறுவர்களுக்கு எங்கே தெரிந்திருக்கப் போகிறது! ஆகவே அவர்கள் வியப்புக்கடலில் மூழ்கினார்கள்.

ஒருநாள் யமுனையின் மடுவில் கோபாலர்கள் தண்ணீர் குடித்தனர். அங்கே காலீயன் என்னும் விஷநாகம் இருந்தபடியால், அதன் விஷத்தால் தண்ணீர் கெட்டிருந்தது அதைக் குடித்ததனால் அவர்கள் எல்லோருமே இறந்தார்கள். கண்ணன் அங்கு வந்தான் எல்லோரையும் உயிர்ப்பித்தான். அதன்பின், அந்த நாகத்தையே அங்கிருந்து அகற்ற விரும்பினான். உடனே ஒரு புன்னை மரத்தின்மேல் ஏறி மடுவில் குதித்தும் பேரொலியை எழுப்பினான் காலீயன் கண்ணனைச் சுற்றிக்கொண்டது கடிக்கவும் முயன்றது' சேஷசயனம் புரியும் பரந்தாமன் அவன் என்பது அதற்குத் தெரியாது போயிற்று! கண்ணன் தன் மேனியைப் பெரிதாக உப்பும்படிச்செய்து, சுற்றிய பாம்பை நழுவச் செய்தான். கடைசியில் அதன் தலையில் ஏறி நடனம் புரிந்தான், எல்லோரும் அக்காட்சியைக்கண்டு வியந்தனர், கடைசியில் காலீயன் அந்த மடுவைவிட்டே அகன்றது.

இன்னொரு சமயம் கோபர்கள் தேவேந்திரனுக்குப் பூஜை செய்யத் தொடங்கினார்கள். கண்ணன் சொன்னான், 'கோவர்த்தனகிரிதான் நம் தெய்வம். ஏனென்றால் அதுதான் நம் மாடு கன்றுகளுக்குப் புல் அளித்துக் காக்கிறது'என்று அவ்வாறேநடந்தது,

ஆனால் இந்திரன் கோபித்துக் கொண்டு விட்டான். அதன் விளைவாய்ப் பெருமழை விடாமல் பெய்தது



ஆயர் சேரியே வெள்ளத்தால் முழுகி விடும் என்கிற நிலையும் வந்துவிட்டது. கண்ணன் அப்பொழுது ஓர் அற்புதமான செயலைப் புரிந்தான். கோவர்த்தனகிரியையே தூக்கிக் குடையாய்ப் பிடித்து, அத்தனை இடையர்களையும் காத்தான். எல்லோரும் வியப்புற்றார்கள்! ஏன், இந்திரன்கூட இதைக் கண்டு வியந்தான்!

* * *

அற்புதம் ஒரு ரஸம். அந்த அற்புதத்தின் இனிமையும், சக்தியும் மேம்பட்டவை வீரத்திலிருந்தும் அற்புதம் பிறக்கிறது! அதற்கு அபிமன்யுவைப் போன்ற மகாவீரர்களின் செயல்கள் உதாரணமாகும். மனிதன் அதிசயித்து ஒன்றைப் பார்ப்பதில் பெருவிருப்புடையவன். ஆகவே அதிசயப் பொருள்கள், அதிசயச் செயல்கள் ஆகியவற்றை அறிவதில் அவனுக்கு அலாதி நோக்கம்!

உலகமே ஓர் அதிசயம்! அதில் உள்ள அவனும் ஓர் அதிசயம்தான்! ஆனால் அந்த இறைவன் அத்தனைக்கும் மேலான ஓர் அதிசயம் அல்லவா!

# அவள் விருப்பம்

...கேயெஸ்...

"பொம்மை!......பொம்மை!" தெருவின் கடைசியிலுள்ள தன் ஏகாந்தமான அறையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி கற்பனையுலகிலே சஞ்சரித்துக்கொண்டு இருந்த கஜேந்திரனை இந்தக் குரல் வசீகரித்தது

"பொம்மை!......பொம்மை!!"

கஜேந்திரன் எழுந்து வெளியே தலையை நீட்டி "ஏ பொம்மை! இங்கே வா" என்று கூவிவிட்டுத் திரும்பவும் சாய்வு நாற்காலியில் போய் அமர்ந்து கொண்டான்.

"ஏன் சாமி பொம்மை நீங்களா கூப்பிட்டது?" என்று கேட்டுக்கொண்டே அவள் வந்தாள்.

"ஆமாம் கூடையையிறக்கு......... இதோ இப்படி உள்ளே இறக்கு...... அங்கே வெயில்"

அவள் கூடையையிறக்கி அறையினுள் வைத்தாள் கூடைக்குள்ளிருந்த பொம்மைகளை ஒவ்வொன்ருக எடுத்துக் கீழே வைத்துக்கொண்டே,

"காந்தி......ஜவாஹர்......நேதாஜி. ......புத்தர்......ஏதுசாமி வேண்டும்"

"அழகா இருக்கே" என்ருன் அதுவரை அவளையே பார்த்து மெய்ம் மறந்திருந்த கஜேந்திரன்.

"கஷ்டப்பட்டு செய்தா நல்லா இல்லாமலா போயிடும்" பொம்மைகளைப் பார்த்துக்கொண்டே பேசினுள் அவள்.

"ஆமா, நீ எந்த ஊர்?"

"அதையேன் சாமி, கேட்கிறே?"

"இல்லே, அழகாயிருக்கேன்னு கேட்டேன்"

"யாரு?"

"இந்தப் பொம்மைகள்தான், எந்த ஊரிலே செய்தது"

அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்கள் அவனுடைய கண்களைச் சந்தித்தன. 'இல்லை ஒன்றையொன்று கவ்வின. கண நேரம். சட்டென்று தன் பார்வையை பொம்மைகளின் மீது திருப்பி, ஒரு காந்தி பொம்மையையெடுத்துக்கொண்டு 'இதையெடுத்துக்குங்க, நன்ருயிருக்கு' என்ருள்.

'நான் எல்லாத்தையும் எடுத்துக்கிறேன்...நான் கேட்ட கேள்விக்கு நீ பதில் சொல்லல்லியே'

'எல்லாத்தையும்னு...பொம்மைகளைத்தானே?

"...இல்லே உன்னையும் சேர்த்துத் தான்...'

'என்ன சாமி விளையாடறே?... பொம்மை வேணுமா வேணுமா?

அவள் இதைக் கோபமாகச் சொல்வது போன்றிருந்த போதிலும் இதழ்க் கடையில் இளநகையரும்பி நின்றது.

'சரி...கொடு அந்தப் பொம்மையைத்தான்...'

அவள் பொம்மையைக் கொடுத்தாள். அவன் வாங்கினுன். அந்தப் பரிமாறலிலே. அவர்கள் கண்கள் மூலம், உள்ளத்தையும் பரிமாறிக் கொண்டனர். அவள் கை அவன் கரத்தைத் தீண்டியதால் இருவர் உடம்பிலும் ஒரு, மின்சார அலை பாய்ந்தது. சிறிது நேரம் அவனைப் பார்த்தபடி அசைவற்று நின்ற அவள், சட்டென்று உணர்வு வந்தவள்போல், பொம்மைகளையெடுத்துக் கூடைக்குள் வைத்தாள். கூடையைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு

'நான் வரேன் சாமி' என்று சொல்லிவிட்டு வெளியேறினுள். கையில் பொம்மையை வைத்துக் கொண்டு, அவள் தெருக் கோடியைத் தாண்டும்வரை பார்த்துக்கொண்டேயிருந்துவிட்டு, ஒரு பெரு மூச்சுடன் தன் சாய்வு நாற்காலியில் போய் உட்கார்ந்தான்.

வாங்கிய பொம்மைக்குக் காசு கொடுக்கவில்லையே' யென்று அப்போதுதான் நினைவு வந்தது. 'காசு வாங்குவதற்காக மறு முறை வருவாள்' என்று எண்ணியபோது அவனுக்கு மகிழ்ச்சியுண்டாகியது. சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி கண்களை மூடிக் கொண்டான். அவள் உருவம் அவன் கண் முன் நின்றது. மெல்லிய பூங்கொடி போன்ற உடல் மாசு மறுவற்ற வதனம். கருமையான கண்கள்; குறு குறுப்பான தோற்றம், இனிமையான பேச்சு, மிடுக்கான நடை, வாரிவிடப்படாமல் முகத்திலே சுருண்டு விழுந்து அவள் அழகை அதிகரிக்கும் கேசம்......அனைத்தும் அப்படியே அவன் உள்ளத்திலே பதிந்துவிட்டது. அவன் சிந்தித்தான். "அவள் யாரோ நொடிப் பொழுதில் என்னுள்ளத்தைக் கவர்ந்துவிட்டாளே...ஏன் அவளுந்தான் தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டாள்... அவளை நான் அடைய முடியுமானுல் என் வாழ்க்கை எவ்வளவு வளம் பெற்றதாக இருக்கும்" சட்டென்று அவன் சிந்தனை தடைப்பட்டது. ஓராண்டுக்கு முன் நிகழ்ந்த சம்பவங்கள் அவனுக்கு நினைவு வந்தன

* * * *

கஜேந்திரன், ராணுவத்திலிருந்துவிடுபட்டு அன்று தான் தன் கிராமத்துக்குத் திரும்பி வந்திருக்கிருன். அந்த ஊரே அவனைச் சூழ்ந்து கொண்டு நின்றது. சண்டையைப் பற்றிச் சினிமாவில்கூடப் பார்த்திராத கிராம மக்கள், அவனிடம் விநோதமான கேள்விகளைப் போட்டுக்கொண்டிருந்தனர். "அத்தான்...அத்தான்" என்று ஐந்தாறு சிறுமிகள் அவனைச் சுற்றிச் சுற்றி வந்தனர். அவனுக்கு முறைமைப் பெண்களான ஐந்தாறு பருவமெய்திய பெண்கள் சற்றுத் தொலைவில் நின்று கஜேந்திரனின் கடைக் கண்ணேக்குக் கிடைக்காதா என்று காத்திருந்தனர். எல்லோருக்கும் பதில் சொல்லிக்கொண்டேயிருந்த கஜேந்திரனின் கண்கள் அந்தக் கூட்டத்தை ஆராய்ந்தன. அவன் யாரை நினைத்துக்கொண்டு ஆனந்தத்தோடு, கிராமத்துக்கு வந்தானே, அவளைக் காணேம், மான் கன்றுபோல் துள்ளிக் குதித்துக்கொண்டு அத்தான் என்று அன்பு ததும்ப அழைத்தபடி ஓடிவரும் அவளைக் காணேம். அவனுக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

"ஏண்டா தம்பி, வா, வா; குளிச்சுட்டு சாப்பிடு. அவங்கெல்லாம் எங்கே ஓடிப்போருங்க" என்று அவன் தாயார் கூப்பிடுவதைக் கேட்டு.

'ஆமா, தம்பி, நீ போ" என்று விடை கொடுத்து விட்டு எல்லோரும் கலைந்து விட்டனர்.

கஜேந்திரன் சாப்பிட்டுக்கொண்டே.

'ஏனம்மா, எங்கே அந்த அமிர்தத்தைக்காணேம்' என்று தன் தாயாரைக் கேட்டான்.

'நீ வர்ர வரைக்கும், 'அத்தான் எப்போவரும் எப்போவரும்னு கேட்டுக்கிட்டேயிருந்தா. இப்ப உனக்கு முன்னே வரத்துக்கு, வெட்கப்படருபோலிருக்கு. ஆளான



பொண்ணல்லவா' என்று சொல்லி விட்டுத் தாயார் வீட்டின் கொல்லைப் புறம் சென்ருள்.

'அத்தே...அத்தே' என்று கத்திக் கொண்டே ஒருபெண் வீட்டினுள் நுழைந்தாள்.

அவளைக் கண்டதும் 'அமிர்தம்! என்ன கண்ணிலேயே காணேம். சுகமா' என்று ஆவல் ததும்பக் கேட்டான் கஜேந்திரன்.

'நீதான் என் கண்ணிலேயேயிருக்கிருய். நான் உன் கண்ணிலே காணேமென்ருல், அது என் தவரு'

'என் தவறுதான்'

'அப்படிவா. அதுதான் சுத்த வீரனுக்கு அழகு'

'ஏண்டா தம்பி யாருகூடப் பேசறே.....சாப்பாட்டைக்கூடக் கவனிக்காமே' என்ற தன் தாயாரின் குரலைக்கேட்டு, கஜேந்திரன் அவசர அவசரமாகத் தன் சாப்பாட்டில் கவனத்தைச் செலுத்தினுன். அவள் ஓடி மறைந்துவிட்டாள்...ஒரு மின்னலைப் போல!

கஜேந்திரனின் ஒன்றுவிட்ட அத்தைமகள்தான் அமிர்தம். பிள்ளைப்பிராயத்தில், புழுதியில் விளையாடியதுமுதல், பெரியவனுகிப் போர் முனைக்குச்செல்லும்வரையில் கஜேந்திரனுடன் ஒன்ருக விளையாடினவள் அமிர்தம். இன்னும் எத்தனையோ பெண்கள் அவனுடன் விளையாடிய போதிலும், அமிர்தம்தான் அவன் உள்ளத்திலே உயர்ந்ததொரு ஸ்தானத்தைப் பெற்றிருந்தாள். அவன் ராணுவத்தில்சேர்ந்து அவளைப் பிரிந்து செல்லும்போது 'அத்தான் என்னை மறந்துவிடாதே. நான் உனக்காகக் காத்திருப்பேன். வெற்றியுடன் திரும்பிவா' என்று சொல்லி அனுப்பினுள். அவனும் அவளை மறக்கவில்லை. அவளுடைய இனியமுகம் அடிக்கடி அவன் முன் தோன்றி அவனுக்கு ஊக்கமும் உற்சாகமும்அளித்து ஓரே ஆண்டில் சாதாரண சிப்பாயாகச் சேர்ந்தவனை ஹவில்தார் பதவிக்கு உயர்த்திவிட்டது "ஊருக்குத் திரும்பியதும் வண்ணமலரெனத் திகழும் அவளை மணந்து, வாழ்க்கையை ஒரு இன்பப் பூஞ்சோலையாக்க வேண்டும்" என்ற எண்ணத்துடன் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு ராணுவத்திலிருந்து விடுபட்டு வந்தான்.

"ஏண்டா தம்பீ! என் பொண்ணைக் கட்டிக்க, உன் பொண்ணைக் கட்டிக்கன்னு உங்க மாமன்மாரெல்லாம் தொந்தரவு செய்யருங்க..." என்று சொல்லிக்கொண்டே தாய் வந்தாள்.

"யாருக்கு!"

"யாருக்கா? உனக்குத்தான், உனக்கு எந்தப் பொண்ணு பிடிச்சிருக்கு"

"ஏனம்மா, எனக்கு எந்தப் பொண்ணு பிடிச்சிருக்கிறதென்று சொல்கிறேன். நீ தடை சொல்ல மாட்டாயே"

"உன் இஷ்டத்துக்கு நான் ஏன் தடை சொல்லப் போகிறேன்"

"எ...னக்கு..."

"சும்மா...சொல்லு...யாரு?"

"அ...மிர்...தம்"

அமிர்தம். இந்தப் பதிலைக் கேட்டதும் தாய் துணுக்குற்ருள். ஆம் அதற்கும் காரணமிருந்தது.

"நம்ம பெண்களிலே மூத்த பெண்ணை கட்டிக்கட்டும். இல்லை, எந்தப் பெண் பிடிக்குதோ, அதற்கு மூத்தப் பெண்களுக்கு கல்யாணமாகிற வரை பொறுத்திருந்து, பிடித்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளட்டும்."

"பட்டாளத்திலே சேர்ந்து நாலு பட்டணம் பார்த்ததினுலே, பட்டிக் காட்டுப் பெண் எனக்கு வேண்டாமென்று மகன் சொல்லுகிருனென்று பிறத்தியிலே எங்காவது போனீங்க, நம்ம உறவும் அன்ருேடே போச்சு"

"ஆமாம் நிச்சயந்தான்.

இவ்வளவும், 'கஜேந்திரன் திரும்பி வரப் போவதாகக் கடிதம் வந்ததும், அவன் கல்யாணத்தைப் பற்றிப் பேசியபோது அம்மான்மார்கள் சொன்னதுதான்.'

கஜேந்திரன் 'பட்டிக்காட்டுப்பெண் வேண்டாமென்று' சொல்லவில்லை. ஆனுல் நெருங்கிய உரிமைப் பெண்களையெல்லாம் விட்டு, மூன்ருங்கால் உறவான ஒருவர் வீட்டுப் பெண்ணை விரும்பினுன். அவன் விருப்பப்படி நடப்பதானுல், தன் தாய் வீட்டு உறவே அற்றுப் போகும், என்று எண்ணியபோது, அவன் தாய்க்கு வருத்தமாக இருந்தது. அண்ணன்மார்கள் வீட்டில்தான் அவளுக்குச் செல்வாக்கு பூர்ண கர்ப்பிணியாகயிருந்த அவளைத் தன் கணவன் நிராதரவாக விட்டு இறந்த பிறகு, தன் அண்ணன்மார்களின் உதவியால் தான் காலந்தள்ளி வந்தாள். தன் சகோதரர்களின் உறவைப்பார்ப்பதா? தன் பிள்ளையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வதா? அவள் உள்ளப் போராட்டங்களை தன் மகனிடம் சொல்வதற்கும் அவள் விரும்பவில்லை.

இந்த சமயத்தில் திண்ணையில் நின்று ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்த பக்கத்து வீட்டுக் கிழவி உள்ளே நுழைந்தாள்.

"ஏண்டீ, அலமேலு! உனக்குத் தெரியுமா? தச்சூரார் வீட்டுப் பெண்ணுக்கு, நிச்சயதார்த்தமாம்" என்று கேட்டுக்கொண்டே சம்பாஷணை தொடர்ந்தது.

அமிர்தத்திற்கு கல்யாணம் நடக்கப் போகிறது. யாரோ பட்டணத்துப் பிள்ளை ஏதோ ஆபீசில் பியூன்வேலையிலிருக்கிருன். பெண்ணின் பேற்ருேர்களுக்குப் பிடித்தமில்லை அவனையே தான் மணந்துகொள்ள வேண்டுமென்றுசொல்லுகிருள் அந்தப்பெண்ணுக்கு இன்னும் இரண்டு தினங்களில் நிச்சயதார்த்தம்.


அவர்கள் சம்பாஷணையின் சாரம் இதுதான். கஜேந்திரனுல் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. அவன் கட்டியிருந்த இன்பக் கோட்டைகள் இடிந்து விழுந்தன சீ என்ன ஏமாற்றம் நிறைந்த வாழ்க்கை! பிள்ளைப் பிராய முதல் கிள்ளைபோல் கொஞ்சிக் குலாவிவிளையாடிய...அமிர்தம் அவனை வஞ்சித்துவிட்டாள்! அவனுக்கு ஒரு நிமிஷமும் அங்கு...அந்த கிராமத்திலேயேயிருக்கப் பிடிக்கவில்லை. எந்த கிராமத்திற்குப் போகப் போகிருேம் என்று சந்தோஷ மிகுதியால் துடிதுடித்தானே அதே கிராமத்தைவிட்டு உடனே வெளியேற வேண்டுமென்று இப்போது துடித்தான். வேலை தேடும் விஷயமாக உடனே திருச்சிக்குப் போகவேண்டியிருக்கிறதென்று கூறி அன்று மாலையே வீட்டை விட்டுக் கிளம்பினுன் இரண்டு மைல் தூரத்திலுள்ள ஜீயபுரம் ஸ்டேஷனுக்கு தனியாக நடந்து சென்ருன். வாழைத் தோட்டத்துக்குப் போய்விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்த அமிர்தம் வழியில் எதிர்ப்பட்டாள். அவளைக் கண்டதும் கஜேந்திரனின் உடல் பதறிற்று. அவள் கழுத்தைப் பிடித்து நெறித்து அவளைக் கொன்றுவிட வேணுமென்று தோன்றிற்று அவனுக்கு அவள்மீது அவ்வளவு ஆத்திரமேற்பட்டது.

"அத்தான் என்று ஆவல் ததும்ப அழைத்துக்கொண்டே அருகில் வந்த அவளை, ஆத்திரம் பொங்கப் பிடித்துத் தள்ளினுன். அதிர்ச்சியுடன் சமாளித்துக்கொண்டு நின்ற அவள்.

"என்ன, அத்தானுக்கு நிஜமாகவே கோவம் போலயிருக்கே" என்ருள் சிரித்தபடியே.

"சீ! மூடு வாயை. சிரிச்சுச் சிரிச்சுத் தான், ஏச்சுப்புட்டியே என்னை"

"நிஜமாகவேக் கோவமா...."என்று கேட்டபோது, அவள் கண்களில் இருந்து குபு குபுவென்று நீர் வந்துவிட்டது துக்கம் தொண்டையை அடைக்கத் தழுதழுத்த குரலில்,




"நான் என்னென்னமோ, எண்ணிக் கிட்டிருந்தேன்......" என்றாள். அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை.

"எண்ணிக்கிட்டிருந்துதான் எவளையோ கட்டிக்கப் போறியோ, உன்னை நம்பி இருந்த என்னை மோசம் பண்ணிட்டியே துரோகி!" என்று ஆவேசம் வந்தவன்போல் கத்திவிட்டு வேகமாக நடந்தான். அவன் காதுகளில் விழுந்த 'விசும்பல்' சத்தம் அவன் நடக்க நடக்க மங்கி மறைந்தது.

* * *

திருச்சிராப்பள்ளியில் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தை அடைந்த அவனுக்கு எளிதில் வேலை கிடைத்துவிட்டது. திருச்சியிலேயே கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் வேலை. வேலை கிடைத்த மறுவாரமே கடலூருக்கு மாற்றிவிட்டார்கள். அவனும் தன் கிராமத்திலிருந்து எவ்வளவு தொலைவில் இருக்க முடியுமோ அவ்வளவு தொலைவிலிருக்க விரும்பினான் தன் தாயாருக்குக் கடிதம் எழுதக்கூட விரும்பவில்லை. ஆனால் தன் மகன் திரும்பவும் ராணுவத்துக்கே போயிருப்பானென்று சந்தேகித்து பழைய விலாசத்துக்கு அவன் தாயார் எழுதிய கடிதம் எண்ணற்ற முத்திரைகளைத் தாங்கி எப்படியோ, ஒரு வருஷம் கழிந்து அவன் கைக்கு வந்து சேர்ந்தது கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். "அவன் பிரிவுக்காகத்தான் மிகவும் வருந்துவதாகவும் அவன் திருமண விஷயத்தில் அவன் விருப்பப்படியே நடப்பதாகவும் உடனே ஊருக்குத் திரும்பிவரும்படியும் எழுதியிருந்தாள் அவன் தாய்.

'அதெப்படி முடியும் அமிர்தம் தான் வேறு ஒருவனை மணந்துகொண்டிருப்பாளே!.........ஒருக்கால் அவள் மனம் மாறி, அந்தப் பட்டிணத்துப் பையனை மணந்துகொள்ள மறுத்திருந்தால்..." என்று ஏதேதோ அவன் மனம் எண்ணமிட்டது. மறுநாளே தன் தாயாருக்குக் கடிதம் எழுதினான். தான் சொல்லாமல் வந்ததைப்பற்றி மன்னிக்கும்படியும், தனக்கு வேலை கிடைத்த விபரம்பற்றியும் எழுதினான் "திருமண விஷயத்தில் என் விருப்பப்படி நடப்பதாக எழுதியிருந்தாயே... எப்படி இயலும்...?" என்று எழுதுவதற்கும் மறக்கவில்லை.

ஒரு வாரத்தில் பதிலும் வந்தது. அன்று பக்கத்து வீட்டுப் பாட்டி சொன்னது யாவும் எதிர்ச்சக்தியின் சூழ்ச்சிகளின் விளைவென்றும், உண்மையில் கஜேந்திரனைத் தவிர வேறு ஒருவரையும் மணந்துகொள்ள அமிர்தம் விரும்பவில்லையெனவும் எழுதியிருந்தாள் இதைப்படித்ததும் சந்தோஷம் கொண்ட கஜேந்திரன். "ஆனால் பாவம் அமிர்தத்தின் வீடும் தோட்டமும் கடன்காரர்கள் வசமாகிவிட்டதால் அவர்கள் குடும்பமே இரவோடு இரவாக எங்கோ வெளியூருக்குச் சென்றுவிட்டார்கள்" என்று எழுதியிருந்ததைப் படிக்கும்போது அசந்து போனான்.

"அன்று அவளிடம் அப்படி மிருகத்தனமாக நடந்துகொண்டேனே அவள் என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பாள். ஆத்திரப்பட்டு, ஆராய்ந்து பாராமல் அறிவையிழந்துவிட்டேனே என்னிடம் களங்கமற்ற காதலைக் கொண்டிருந்த அவள் மனம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும். அதையெல்லாம்கூட பொருட்படுத்தாமல் அவள் என்னை எதிர்பார்த்திருப்பாள். உண்மையுணர்ந்து ஒரு நாள் திரும்பி வந்து அவளை ஏற்றுக்கொள்ளுவேன் என்று எதிர்பார்த்து ஏமாந்திருப்பாள் வறுமையும் சதி செய்து அவர்களை ஊரைவிட்டே விரட்டிவிட்டது வாழ்க்கையை இன்பப் பூஞ்சோலையாகக் காணப்போகிறோம் என்று கற்பனை செய்துகொண்டிருந்தவள். அது ஒரு பாலை வனம் என்பதை யுணர்ந்து வெறுப்புற்றிருப்பாள். ஐயயோ! அன்பின் வடிவான அமிர்தத்தைப் போய் 'துரோகி' என்றேனே...உண்மையில் நானல்லவா துரோகி அவளைக்கண்டு மன்னிப்புக் கேட்கவேண்டும்...அவளுக்கு ஆறுதல் கூறி அவள் துயரைத் துடைக்கவேண்டும். ஆனால் இந்த விருப்பம் எவ்வாறு நிறைவேறும் அவளை எங்கு போய்க் கண்டுபிடிப்பது என்று ஏதேதோ சிந்தித்து வருந்தினான்.

"தான் செய்த இந்தப் பெருந்தவறுக்குப் பிராயச்சித்தமாக என் வாழ்வு நாளெல்லாம் பிரம்மச்சாரியாகவே யிருப்பேன்" என்று கங்கணங்கட்டிக்கொண்டான் இரண்டாண்டுகள் எப்படியோ தன் பிரம்மச்சரியத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறான். சட்டென்று திரும்பவும் அவனுக்கு அன்றுவந்த பொம்மைக்காரியின் நினைவு வந்தது, அவன் சிந்தித்தான்.



"சற்று முன் வந்தாளே அந்த பொம்மைக்காரி, அவள் என்னை ஒரு கலக்குக் கலக்கிவிட்டாள். பெண்களை ஏறிட்டுப் பார்க்கக்கூடாதுஎன்றிருந்த என்னை, அவள் தன் விழியால் மொழி பேசி கண்களால் கணைவிடுத்து, முறுவலால் மகுடி ஊதி மயக்கிவிட்டாளே! கணப்பொழுதில் என் உள்ளத்திலே உயர்ந்ததோர் இடத்தைப் பெற்றுவிட்டாளே. அமிர்தம் பெற்றிருந்த அந்த ஸ்தானத்துக்கு இவள் தகுதியுடையளா? அவள் யாரோ...என்ன ஜாதியோ? ஏன் என்ன ஜாதியாயிருந்தால் என்ன? யாராயிருந்தாலென்ன? இருவர் உள்ளமும் காதலென்ற கயிற்றால் பிணைக்கப்பட்டபின், கடலினும் பெரிய கஷ்டமே வரினும் அது ஒரு பெரிதாகுமா..."அவன் சிந்தனைத் தடைப்பட்டது. திரும்பவும் அந்த இனிமையானகுரல் காற்றிலேமிதந்து வந்தது "பொம்மை! பொம்மை" அவசரமாக எழுந்தான் அவன் மடியிலிருந்த பொம்மைக் கீழே விழுந்து உடைந்ததைக் கூடக் கவனிக்கவில்லை. இவன் கூப்பிடுவதற்குள் அவளே வந்தாள், 'ஏன்சாமீ ஏமாத்திட்டியே?' என்று கேட்டுக்கொண்டே அறைக்குள் நுழைந்ததும் கீழே உடைந்து கிடந்த பொம்மை அவள் கண்ணில் பட்டது. அவள் துணுக்குற்றாள்.

'ஏன்சாமீ பொம்மையே உடைச்சுட்டீங்க? உங்களுக்கு ஏதாவது கோபமா' என்று கேட்டாள் சற்றுக் கலவரமடைந்த முகத்துடன்.

'ஆமாம் கோபந்தான்...' என்றான் கஜேந்திரன் சிரித்துக்கொண்டே.

'இப்படித்தான் சாமீ ஆம்பிள்ளேங்களே, கோவத்திலே எதையும் செய்துடுரது அருமை பெருமைத் தெரியாமே, அழகா இருக்கிறதைக்கூட வெறுத்துடறது. என்ன கோபம்?'

இந்தபதில் அவன் உள்ளத்தில் சுருக்கென்று தைத்தது. அவன் எண்ணினான் 'அமிர்தம் சொல்லவேண்டியதை இவள் குறிப்பாகச் சொல்லுகிறாளே! ஒருக்கால் இவளிடம் அமிர்தம் தன் கதையைச் சொல்லியிருப்பாளோ.' அவன் அவள் முகத்தை ஏறிட்டுப்பார்த்தான். அவள் அமிர்தத்தை ஒத்திருந்தாள் ஆனால் அமிர்தத்தின் கண்களிலே வீசிய ஒளி, கன்னங்களிலே இருந்த சிகப்பு, இதழ்க்கடையிலே தோன்றும் குறும்பு. கண்களிலேநிறைந்த கவர்ச்சி விழிகளிலே நிறைந்த மருட்சி, அவளிடமிருந்த அளவுக்கு இவளிடமில்லை.

'அதுசரி, உன்பெயர் என்ன...எந்த ஊர்'

'என் ஊர்...இப்போ பன்ருட்டி'

'இப்போ பன்ருட்டியின்னு... அதுக்குமுன்னே?'

அறைக்கு வெளியே ஏதோ சத்தம் கேட்டது கஜேந்திரன் அந்தப்பக்கம் தன் பார்வையை செலுத்தினான். வாசலில் ஒரு வண்டிநின்றது. வெளியே ஓடிப்பார்த்தான். வண்டியிலிருந்து அவனது தாய் இறங்கியதைக் கண்டதும் அவனுக்குப் பகீரென்றது. 'அறையில் அந்தபொம்மைக் காரியைப் பார்த்து என்ன நினைப்பாளோ, தாயாருக்குத் தெரியாமல் பொம்மைக் காரியை எப்படி வெளியே அனுப்புவது' என்று திண்டாடிக்கொண்டிருந்த மகனைப்பார்த்து 'தம்பீ இந்தா இந்த நோட்டை எடுத்துக்கொண்டு போய்க் கடையிலே சில்லறைமாற்றி வண்டிக்காரனுக்கு எட்டணா கொடுத்துவிட்டுவா என்று சொல்லிக்கொண்டே ஒரு ஐந்து ரூபாய் நோட்டைத்தன் தாயார் நீட்டினாள். அதை வாங்கிக்கொண்டு வண்டிக்காரனைப் பின் பற்றி கடையை நோக்கி நடந்தான். அறைக்குள்ளே நுழைந்ததும்பொம்மைக்காரியைக் கண்ட கஜேந்திரனின்தாய், அவளை சந்தேகக் கண்களுடன் மேலும் கீழும் பார்த்தாள். அவள் முகம்மலர்ந்தது பொம்மைக்காரியின் கைகளைப் பற்றிக்கொண்டு,

'ஏண்டி அமிர்தம்! இங்கே எப்படி வந்தே? இப்படி உருமாறிப் போயிட்டியே?' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

'அத்தே...என்னைக் கண்டு பிடிச்சுட்டியே! அத்தானுக்கு என்னைத் தெரியவேயில்லை' என்று சொல்லிவிட்டு அவளைக் கட்டிச் சேர்த்துப் பிடித்துக்கொண்டாள்.

கெட்டிக்காரிடி நீ:- எப்படியும்உன் விருப்பத்தை நிறைவேத்திட்டியே!



உங்க அப்பா, அம்மா எல்லாம் எங்கே இருக்காங்க?...ஏது இது, பொம்மைக் கூடை?'

'நாங்க பன்ருட்டியிலே இருக்கிரேரும். அப்பா பொம்மை விற்கிறதுக்கு இந்த ஊருக்கு அடிக்கடி வருவாங்க. இந்தத் தெருவிலே ஒருத்தர் நம்ம அத்தான் மாதிரியே இருக்காருன்னு அப்பா சொன்னுங்க. பாத்துட்டுப் போகலாமின்னு இன்னிக்கி அப்பாகூட நானும் வந்தேன்.'

'பொம்மை பொம்மேய்'

'இதோ அப்பாகூட வராங்க' என்று சொல்லிக்கொண்டே அவள் வெளியில் தலையை நீட்டி அப்பாவைக் கூப்பிட்டாள். அறைக்குள் நுழைந்த தந்தை

'அடே பெரியவீட்டு அம்மாவா, சரிதான் நான் சந்தேகப்பட்டது சரியாப் போச்சு' என்று சொல்லி ஒரு பெருமூச்சுவிட்டபடி பொம்மைக் கூடையைக் கீழே இறக்கி வைத்தார்.

இந்த சமயத்தில் கடையிலிருந்து திரும்பிய கஜேந்திரன் அறைக்குள் நுழைந்தான்.

'தம்பிக்கு, ஒரு கல்யாணத்தை முடிச்சிட வேண்டுமென்றுதான் வந்தேன். எனக்கு முன்னுடியே பொண்ணு இங்கே வந்து நிக்கிது. என்று சொல்லிக்கொண்டே கஜேந்திரனின் தாய் அர்த்த புஷ்டியுடன் அமிர்தத்தைப் பார்த்தாள்.

ஒன்றும் விளங்காது பொம்மைக்காரியின் முகத்தைப் பார்த்து விழித்த கஜேந்திரனை நோக்கி அவன் தாய்:

"என்ன தம்பீ, அமிர்தத்தை தெரியல்லையா?" என்று கேட்டுவிட்டு,

"என்ன தச்சூராரே, உங்களுக்குச் சம்மதந்தானே?" என்று அமிர்தத்தின் தந்தையைப் பார்த்துக் கேட்டாள்.

"அதுக்காகத்தானே 'பொண்ணு பொறந்தது முதல் தவங்கிடக்கிரேரும். அவள் விருப்பம் அதுதான்" என்று சொல்லிவிட்டு மகிழ்ச்சியுடன் தன் பெண்ணின் முகத்தைப் பார்த்தார் தந்தை.

"அமிர்தம்" என்று உணர்ச்சி ததும்பக் கூறிய கஜேந்திரனின் கண்களில் இரு துளி நீர் அரும்பி நின்றது.

"என் பேரப்பிள்ளைக்கு பொம்மை வாங்கவேண்டிய அவசியமேயில்லை யென்று சொன்ன தாயின் ஆசீர்வாதமும் ஒரே ஆண்டில் பலித்துவிட்டது.


## கேம்பிரிட்ஜ் ஸீனியர் 1950 டிஸம்பர் பரீட்சை

1950 டிஸம்பரில் நடக்கவிருக்கும் கேம்பிரிட்ஜ் ஸீனியர் பரீட்சைக்கு எழுத விரும்பும் மாணுக்கர் அவரவர் பெயர்களை உடனே பதிவு செய்து கொள்ளக் கோரப்படுகின்றனர். டியூஷன் கட்டணம் ரூ. 180. பரீட்சைக் கட்டணம் ரூ. 55. புத்தகக் கிரயம் ரூ. 40. கட்டணத்தில் எதுவும் குறைக்க சாத்யமில்லை. இங்கிலீஷில் நல்ல தேர்ச்சியுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். கணிதம் அவசியபாடமல்ல. உங்களுக்கு இஷ்டமான ஏதேனும் ஆறு பாடங்கள் படிக்கலாம். ஆனுல் அதில் ஒன்று இங்கிலீஷ் பாடமாக இருப்பது அத்யாவச்யம்.

விண்ணப்பிக்கும் விலாசம் :

மானேஜர், கேம்பிரிட்ஜ் காலேஜ், கைத்தமுக்கு, திருவனந்தபுரம்.

Manager, THE CAMBRIDGE COLLEGE. Kaithamukku. Trivandrum.

பரீட்சையில் தேர்ந்த மாணுக்கரின் அபிப்பிராயங்கள் :

"சென்ற கேம்பிரிட்ஜ் ஸீனியர் பரீட்சையில் நான் வெற்றி பெற்றதைக் குறித்த உங்கள் 15-ந்தேதியிட்ட கடிதம் கிடைத்தது மிக்க சந்தோஷம். பரீட்சைக்குப் படித்ததில், தபால் மூலமாகக் கிடைத்த உங்கள் டியூஷனைத் தவிர நான் வேறு எவ்வித டியூஷனும் வைத்துக்கொள்ளவில்லை அது அற்புதமான பயனளித்திருக்கிறது தபால் மூலமாக கிடைக்கக்கூடிய மிகத் திறமையான கல்வி போதனையே தாங்கள் வழங்கிவருவது." (இந்த மாணுக்கர் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ருர்.)

(ஒப்) எல். சாரதா C/o. S. V. லக்ஷ்மணய்யர், அட்வகேட், சிவகங்கை.

"........தாங்கள் அனுப்பிய பாட முறைகள் நான் விஷயங்களை கிரகிக்கப் பெரிதும் உபயோகமாயிருந்தன அவை நுட்பமான விஷயங்களையும் சுருக்கமாயும் தெளிவாயும் விளக்கிவிடுவதால், பாடப் புத்தகங்களைப் படிக்காவிட்டால்கூட பரீட்சையில் விடை எழுதி தேர்ச்சி பெறும் திறமை தருவதாயுள்ளன." (இந்த மாணுக்கர் மூன்றும் வகுப்பில் தேர்ச்சி பெற்ருர்.)

(ஒப்) பி. தாகூர் ஸாலமன், ஒட்டப்பாளையம், குரோம்பேட். சென்னை.







75

## யார் யாருக்கு ஆதாரம்?

★

நீர், நிலம், நெருப்பு, முதலிய வேருன பொருள்களில் எல்லாம் பகவான் இருக்கிருர், ரஸம், கந்தம் (வாசனை), ஒளி என்று ஒவ்வொரு பொருளையும் வேறுபடுத்திக் காட்டும் பிரதான குணங்களுக்குக் காரணம் அவரேயாதலால் அக்குணங்களின் பெயர்களும் பகவானையே குறிக்கின்றன. பகவானை அக்குணங்களால் வியவகரிக்கலாம். அது மாத்திரமின்றி அக்குணங்களால் உணர்ந்து தியானம் செய்வதற்கு அவ்வுணர்வைச் சாதனமும் ஆக்கிக் கொள்ளலாம்.

பிரபஞ்சத்திற்கும் அதிலுள்ள பொருள்களுக்கும் பிராணிகளுக்கும் பகவான் காரணமாய் இருப்பதை 'ஆதி பகவன் முதற்றே உலகு என்ற முதல் குறளின் தொடர் நன்கு வெளிப்படுத்துகிறது பானைதோன்றுவதற்குக் குயவன் காரணமாவது போல் மாத்திரம் பகவான் பிரபஞ்சத்திற்குக் காரணமாயிருப்பதில்லை என்பதை 'எழுத்தெல்லாம் அகர முதல' என்ற முதல் குறள் உவமை எடுத்துக் காட்டுகிறது. பிற எழுத்துக்களின் ஒலியிலிருந்து பிரிக்க முடியாமல் அகரக்கூறு (பகுதி) சேர்ந்தேயிருப்பதுபோல் பகவானும் பதார்த்தங்களை வேறுபடுத்திக் காட்டுகின்ற பிரதான குணங்களிலிருந்து பிரிவுபடாமல் கலந்தேயோ அல்லது குணங்களாகவேயோ இருக்கிருர்.

ஆகப் பகவானை உற்பத்தி ஸ்திதி லயத்திற்கு (படைத்தல், காத்தல் அழித்தலுக்கு)ச் சட்டி பானைக்குக் குயவன் ஆவதுபோல நிமித்தகாரணன் என்றே, பானையாவதற்கு மண்ணும் குயவனும்போல உபாதான காரணன், நிமித்தகாரணன் இரண்டும் என்றே எவ்விதம் சொன்ன போதிலும் முத்தொழில்களை உலகத்தாரைப் போலச் செய்வதில்லையென்றே வேதம் சொல்லுகிறது. அதை எல்லா சித்தாந்திகளும் அபிப்பிராய பேதமில்லாமல் ஒப்புக்கொள்ளவே செய்கின்றனர்.

முத்தொழில்களும் தானுக நடைபெறுவதில்லை பகவானுல் சங்கல்ப மாத்திரத்தில் நடைபெறுகின்றன அனுயாசமாக நடைபெறுகின்றன. அது லீலை அல்லது விளையாட்டாகவே நடைபெறுகிறது. என்று உபநிஷத்தில் சொல்லப்படுகின்றன. அதை யொட்டிச் சித்தாந்திகள் செய்த பல சுலோகங்களும் கவிகள் இயற்றிய பல பாடல்களும் இருக்கின்றன.

'உலகம் யாவையும்
தாம் உள ஆக்கலும்
நிலை பெறுத்தலும்
நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு
உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே
சரண் நாங்களே'

என்ற கம்பர் பாடல் வேத வாக்கியங்களை ஒட்டி வந்ததேயாகும்.

ஈச்வரன் எல்லாவற்றிற்கும் காரணமாய் பொருள்களை வேறுபடுத்திச் சொல்வதற்கான அவற்றிற்குரிய பிரதான குணங்களாயிருக்கிருர் என்று சொன்னமையால் கடவுளை எந்த விதமாகவும் தியானம் செய்யலாம் என்று ஏற்படுமல்லவா? துர்நாற்றம், கொடுமை, சினம் முதலிய தீய குணங்களைப் பெற்றவைகளும் பிரபஞ்சத்தில் பல இருக்கின்றன. அக் குணங்களாகவோ அவை பெற்ற பொருள்களாகவோ உணர்ந்து தியானம் செய்வதைவிட நற் பொருளின் நற்குணங்களாகத் தியானம் செய்வதே மேல் என்பதை அடுத்த சுலோகத்தால் கண்ணன் வெளியிடுகிருர்.

திண்மையிஞேர் திண்மையுநான்
தீதிலாத் தேசுபெறும்
ஒண்மையறு காமரா
கம்மொழிந்த—வண்மை
அறம்செறியும் காமநான்
ஆடவர்கள் ஏறே
சிறந்ததெலா நானுத் தெளி.

(இ-ள்) ஆடவர்கள் ஏறே—ஆண்களில் சிங்கம் போன்றவனே! திண்மையிஞேர்—பலவான்களுக்கு, தீது இலா தேசுபெறும்—குற்றமற்ற புகழைத்தரும் ஒண்மை அறு—மேன்மை இல்லாத காமராகம் ஒழிந்த—ஆசாபாசம் நீங்கிய, திண்மையும் நான்—பலமும் நானுக விருக்கிறேன், வண்மை அறம் செறியும் காமம் நான்—வளம் தருமத்தோடு விரோதிக்காத ஆசை நானே ஆகிறேன், சிறந்தது எலாம் நானுத் தெளி—சிறந்த பண்புகளையெல்லாம் நான் என்றே அறிந்துகொள்.

1 3
பலம் பலவதாஞ்சாஹம்
2
காமராக விவர்ஜிதம்
4 3 4 4
தர்மா விருத்தோ பூதேஷு
4 4
காமோஸ்மி பரதர்ஷப

(இ-ள்) பரதர்ஷப—பரதச் சிரேஷ்டனே!, பலவதாஞ்ச—பலவான்களுக்கு, அஹம்—நான், காமராக விவர்ஜிதம்—ஆசாபாசங்கள் அற்ற, பலம்—பலமாயிருக்கிறேன், பூதேஷு—பிராணிகளிடம் தர்மா விருத்த:—தருமத்தோடு விரோதிக்காத காம: அஸ்மி—காமம் (நான்) ஆகிறேன்.

வெவ்வேருன எல்லாப் பொருள்களின் தோற்ற ஒடுக்கத்திற்குக் காரணமாய் பொருள் வேறுபாட்டைத்தரும் தன்மை தானேயாய், எங்கும் எல்லாவற்றிலும் பரம்பொருள் நிறைந்திருப்பின் உயிர்களைப் பாதிக்கும் பிரகிருதி பகவானைப் பாதிக்காமலிருக்குமா? என்ற

கேள்வி பிறப்பது இயல்பு. அதற்கு விடையாகக் கண்ணன் தானிருக்கும் நிலையை மேலே வெளியிடுகிறார்.

இன்ன குணமூன்றில்
ஏய்ந்த பொருளனைத்து
மன்னே என் தன்மையினால்
வாய்ந்ததென - உன்னுக நீ
ஆங்கவைஎன் பாலே
அமைந்திடினும் யான்அவற்றின்
நீங்கலுற நிற்பன் நிகழ்ந்து.

(இ-ள்) இன்ன குண மூன்றில்—இவ்விதமான (சாத்விக, ராஜஸ, தாமஸ) மூவகைக் குணங்களில், ஏய்ந்த—பொருந்திய, பொருள் அனைத்தும்—(உலகில் சரீரம், இந்திரியம், போக்யப் பொருள் என்ற) வஸ்துக்கள் எல்லாம், 'என் தன்மையினால் வாய்ந்தது என—என்னால் என்னிடம் உண்டானவைகள் என, நீ உன்னுக—நீ அறிந்து கொள்வாயாக, அவை என்பாலே அமைந்திடினும்—அவை என்னிடம் இருந்த போதிலும், யான் அவற்றின் நீங்கல் உற நிகழ்ந்து நிற்பன்—நான் அவற்றில் பொருந்தாமல் நீங்கியே நிலையாக இருப்பேன் (நான் அவற்றில் இல்லை)

4

யேசைவ ஸாத்விகா பாவா
ராஜஸாஸ்தாமஸாச்சயே
3 4
மத்த ஏவேதி தாந் வித்தி
நத்வஹம் தேஷு தே மயி

(இ-ள்) ஸாத்விகா:-சாத்துவிகங்களாயும், ராஜஸா:—ராஜஸங்களாயும் தாமஸா:—தாமஸங்களாயும், ஏச ஏச பாவா:—எந்தெந்தப் பொருள்களுண்டோ, தாந்—அவற்றை, மத்த ஏவ இதி—என்னிடத்தினின்று (உண்டானவை) என்றே, வித்தி—அறிந்து கொள், தே மயி—அவை என்னிடம் (இருக்கின்றன,) அஹம் து—நானோ, தேஷு ந—அவற்றினிடம் இல்லை.

'பாவா' என்பதற்கு வெவ்வேறான பெயர்கள் சொல்லக்கூடிய பொருள்கள் எனக் கொள்ளவேண்டும் குணங்களின் வெவ்வேறான பரிணாம நிலைகளை அதற்குக்காரணம் அவ்விதம் தோன்றும் எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணம் தானே என்று முன்னே சொல்லி வந்தவற்றைத் தொகுத்துக் கூறினார் புறக்காரணமின்றி அகக் காரணமும் தானே என்பது தோன்ற அவற்றிற்குப் பிறப்பிடம் இருப்பிடம் இறப்பிடம் எல்லாம் தானே என்பது தோன்ற 'மத்த ஏவேதி' (அவை என்பாலே) எனக் கூறினார் சுக துக்கத்திற்குக் காரணமாய் பிரகிருதியும் அதன் குணங்களும் அவற்றின் பரிணாமப் பொருள்களும் பகவானிடத்தில் இருந்தால் அவற்றால் பகவான் பாதிக்கப்படமாட்டாரா என்ற வினா எழும். அதற்கு விடையாகத் தன்னிடம் அவை இருந்தபோதிலும் அவற்றிடம் தானில்லை, அதனால் தான் பாதிக்கப்படுவதில்லை என்பதை நுட்பமாகத் தெரிவித்தார் இப்பகுதிக்கு ராமாநுஜர் கூறிய உரை கவனிக்கத்தக்கது

ராமா:—ஜீவாத்மா இல்லாமல் சரீரம் இருக்கமாட்டாது. ஜீவாத்மா சரீரம் இல்லாமல்இருக்கும் ஜீவாத்மா உடலால் போக விஷயத்திற்கு உதவி பெறுகிறது அவ்வாறு பகவானுக்குத் தேகத்தால் ஆகவேண்டியது எதுவுமில்லை. லீலையின் பொருட்டுத் தேகத்தைக் கிரகிக்கிறார் என்பதே இதன் பொருள்'

'உலகு நின்னோடு ஒன்றி நிற்க வேறு நிற்றியாதலால்' என்று வரும் திருமழிசைப் பிரானின் மொழிகள் இதற்கு மேற்கோளாகும்

வேதாந்த விசாரம் செய்வோர் இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுவதுண்டு குற்றவாளி சிறையில் கைதியாக விருக்கிறான். காவலாளியும் (சிறை அதிகாரியும்) அங்கேயே இருக்கிறான் அவ்விடத்தில் இருப்பது கைதிக்குத் துக்க ரூபமாயிருக்கிறது. காவலாளிக்கோ அவ்வாறில்லை. ஒரே இடத்தில் இருந்த போதிலும் ஒருவனுக்கு அவ்விருப்பு துக்க ரூபமாயும் மற்றொருவனுக்குஅவ்வாறில்லாமலும் இருப்பதால் இடம் துக்கத்திற்குக் காரணம் ஆகாது. ஒருவன் (கைதி) தான் தான் செய்த குற்றத்திற்காக அங்கு நிர்ப்பந்தமாய்க் கொண்டுவரப்பட்டான் மற்றவன் (காவலாளி) தன் இச்சையால் அங்கு இருக்கிறான். அங்கு துக்கத்திற்குச் செய்த வினை காரணமாகிறது. அவ்வாறே பிரகிருதியில் சேர்ந்திருக்கும் ஜீவனின் துக்கத்திற்குக் காரணம் அவன் செய்த கர்மம். கர்மத்தால் ஜீவனுக்குப் பிரகிருதி சம்பந்தம் விரும்பினும் விரும்பாவிடினும் நிர்ப்பந்தமாய் வந்தது ஈச்வரனுக்கு இச்சையால் வந்தது. ஆகவே பிரகிருதி ஜீவனுக்குத் துக்க ரூபமாயும் பகவானுக்கு அதில்லாமலும் இருக்கிறது சம்பந்தமோ இடமோ அதற்குக் காரணமாகாது. என்பது இதனால் விளங்குகிறது

அன்றியும் இச் சுலோகத்தின் பிற்பகுதியால் பிரகிருதியும் பிரகிருதி விகாரமான பொருள்களும் பகவானை ஆச்ரயித்து அவரை ஆதாரமாய்க் கொண்டு அவர் அதீனத்திலே அவரிடம் இருக்கின்றன ஆனால் பகவான் அதை ஆச்ரயித்து அதனிடம் இருக்கவில்லை ஆகையால் மாயாதீதன் எனப்படுகிறார். பகவான் ஜீவனுக்கும் பிரகிருதிக்கும் ஆதாரம் அவை அவருக்கு ஆதாரமல்ல. ஆகையால் அவர் ஆனந்த மயனாயிருக்கிறார்.




"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"

1 மண்டலம் (48-நாள்) பூஜை செய்தும் ஆயுள்பூராவும் பலன்தரும் வெள்ளி ரக்ஷை ரூ. 43-12-0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். டி தொகை வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை மீதி ரூ 38/-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பிவைக்கவும்.

N. B. (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்பு தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) வி. பி கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,
கோட்டமருதூர், அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)

ஆஸ்த்மா என்னும் இளைப்பு, இருமல் வியாதிகளுக்கு

இருமல் ரோகச் சூரணமும், வெங்காயச் சுண்ணமும் சாப்பிடுங்கள்.

இளைப்பு இருமல், க்ஷயம், காசம், கோழை, மூச்சுவிட முடியாமல் கஷ்டப்படுவது உடம்பு நாளுக்கு நாளாய் இளைப்பது முதலிய வியாதிகள் 24-நாள் மருந்தில் குணமாகின்றது 24-நாள் மருந்தின் விலை ரூ. 20. மலாய் நாட்டு வாசிகள் முன் பணமாய் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும்

அரண்மனை வைத்தியர்
S. T. மாணிக்கம் பிள்ளை, R. I. M. P.
பழனி ஆண்டவர் வைத்தியசாலை, 116, சூளை ஹைரோடு, சென்னை.
தலைமை ஆபீஸ் :—பழனி.







## திராக்ஷைப்பயிர் செய்வோர் கவனிக்கவேண்டிய முக்கிய பொதுவிதிகள்.

★

1 திராக்ஷைக்கொடி துண்டுகளைப் புதியன் போட்டு நடவேண்டியதிருப்பதால் நோய்வாய்ப்பட்ட செடிகளிலிருந்தாவது இவற்றை வாங்கி நடவேகூடாது,

2. நோய்ப்பட்ட செடிகள் கபாத்துசெய்த துண்டு துணுக்குகளை நெருப்பிட்டுக் கொளுத்திப் போட வேண்டும்,

3. 'சாம்பல் நோய்' விழுந்து கெடுக்கக்கூடிய இதரபயிர் பச்சைச்செடி இனங்கள் திராக்ஷைத் தோட்டங்களுக்கருகாமையில் பயிரிடப்படாது

4. இப்பயிர் செய்யும் தோட்டங்களில் களைப் பூண்டுகள் எதுவும் இல்லாதபடி சுத்தமாக வைத்திருக்கப் படவேண்டும்.

5. சரியானபடி சூரியகிரணங்கள் விழும்படியாகத் தோட்டத்தில் உள்ள கொடிகள் யாவும் கத்தரிக்கப்பட வேண்டும்.

6. போதுமான அளவுக்கு அதிகமாகத் தண்ணீர்பாய்ச்சவோ இறைக்கவோ கூடாது முதலில் காய்க்கத்தொடங்கு முன் வாரம் மும்முறையும் காய்க்கும் பொழுது ஒன்றுவிட்டொருநாளும் நீர் இறைக்கப்படவேண்டும்.

7 தோட்டக்காரர் வெகு கவனத்துடன் ஒவ்வொருநாளும் தோட்ட முழுமையும் சுற்றித்திரிந்து சாம்பல் நோய் காணப்படுந்தோறும் அவ்விலை கொடிகளை அப்பொழுதே பிடுங்கியோ கத்தரித்தோ அப்புறப்படுத்தி தொலைவில் கொண்டுபோய் நெருப்பிட்டுக் கொளுத்திப்போடவேண்டும்.

8 நோய் விழுந்திருக்கிறதைக் கண்ட க்ஷணமே அதை அடக்குமுறைகளை அனுசரிப்பதால் அந்நோய் பரவி விருத்தியாகிப் பெருநஷ்டம் உண்டாகாதபடி செய்யலாம்.

9 நோய்வாய்ப்பட்ட தோட்டத்திலிருந்து யாதாவதொரு மனிதனோ, மிருகமோ, வண்டி வாகனங்களோ, கூடைகள், கருவிகள் முதலிய பணிமுட்டுகளோ நோய்பிடிக்காத ஆரோக்கியமாக உள்ள தோட்டங்களுக்குள் புகவே விடக்கூடாது இம்முறைகளைக் கையாளுவதில் ஒரு சிறிது அசிரத்தை அஜாக்கிரதை கூடவே கூடாது.

### புதிய பச்சை திராக்ஷைப்பழத்தின் ரசாயன சேர்க்கை

| | |
|---|---|
| ஈரம் | 85 51% |
| புரதம் | 0·83, |
| உலோக சத்து | 0 54 |
| நார் | 3% |
| கார்போ ஹைட்ரேட் | 10·13% |
| சுண்ணாம்பு | 0 025 |
| பாஸ்பரஸ் | 0 019 |
| இரும்பு மக்னீஷியம் | 1 16. |
| கனலி | 44·17 |

### கிஸ்மிஸ் பழம்

| | |
|---|---|
| ஈரம் | 18·5 |
| புரதம் | 2·0 |
| கொழுப்பு | 0 2 |
| உலோக சத்து | 2·0 |
| நார் | — |
| கார்போ ஹைட்ரேட் | 77 3 |
| சுண்ணாம்பு | 0·10 |
| பாஸ்பரஸ் | 0·08 |
| இரும்பு மக்னீஷியம் | 4·0 |
| கனலி | 310 |
| வைடமின் ஏ. | — |
| " பி. | — |
| " சி. | அனுவளவு. |

கிஸ்மிஸ் பழ கஷாயம் நலிந்த குடலை வலுவாக்கும்

### 1 ராத்தல் கிஸ்மிஸ் பழம்

1/3 ராத்தல் மாட்டிறைச்சி
6 ராத்தல் இலந்தைப்பழம்
5 வாழைப்பழங்கள்
4½ ராத்தல் உருளைக்கிழங்கு
1 ராத்தல் ரொட்டி.
4 ராத்தல் பால்
4½ ராத்தல் மீன்
2 கோழிமுட்டைகள்

ஆங்கிலேயர் ஒரு வருஷத்தில் சராசரி 6 ராத்தல் கிஸ்மிஸ் பழம் உட்கொள்ளுகிறார்கள். அமெரிக்கர் 1 ராத்தலே உண்கிறார்கள். எவ்விதமாக உபயோகித்தாலும் சரி. இது நல்ல ஆகாரம்.

திராக்ஷைப் பழத்தில் சர்க்கரை, சுண்ணாம்பு சத்து, மக்னீஷியா, டார்டாரிக் அமிலம், இரும்பு சத்து இருக்கின்றன. மேல்தோல் சற்று துவர்ப்பு உடையது பழரசம் லகு பேதிசெய்வது இந்தப் பழம் தாகத்தைத் தணிக்கும். ஜ்வரங்களில் எடுக்கும் நீர்வேட்கைக்கு நல்ல வஸ்து. கடுங்கோடையில் இப்பழம் மிகவும் குணத்தைச் செய்வது புதிதாகப் பல் முளைத்து வெளியாகிற குழந்தைகளுக்கு மிகவும் நல்லது வாத ரோகிகளுக்கு நல்லது.

பழங்களில் பெரும்பாலானவை ஒரு வித பக்குவமும் செய்யவேண்டிய அவசரமில்லாமல் சுபாவஸ்திதியிலேயே சாப்பிடத்தக்கவையாக இருக்கின்றன. ஆகையால் பழங்கள் மனிதனுக்கே ஸகஜமான ஆகாரம் என்று சொல்லத்தகும் சாமான்னியமாக அநேக ஜாதி பழங்களின் ரசத்தில் 100-க்கு 65-90வரை நீர் இருக்கும். பாக்கி நிற்கிற 10-35 பாகமே கனமான பொருள்கள் இவற்றில் கார்போஹைட்ரேட்ஸ் அதிகமாக உண்டு. இவை நன்றாகப் பழுத்த பழங்களில் பல விதங்களான 'சர்க்கரை' ரூபத்தில் இருக்கும். ஆனது பற்றியே பழங்கள் இனிப்பாக இருப்பது. அநேக ஜாதி பழங்களில் சற்று அதிகமாக புளி மூல பதார்த்தங்கள் கூட இருக்கும் இவ்வித பழங்களில் திராக்ஷையும் ஒன்று.

### வளர்ந்து வருகிற திராக்ஷைக் கொடிகளுக்கு நீர் வார்த்தல்

தென் இந்தியாவில் இக் கொடிப் பயிர் விஸ்தீரணம் அதிகரிக்காமலிருப்பதன் முக்கிய காரணம் இறவை நீர்ப் பாய்ச்சுவதில் ஆகும் அதிகச் செலவு தான். காய்க்கும் பருவம் பூரா ஒவ்வொரு நாளும் தண்ணீர் பாய்ச்சுவது அவசியம் எனக் கருதுகிறார்கள் இது அப்படி அல்ல. நீர் இறைப்பதைக் குறைப்பது மிகவும் முக்கியம். மற்றும் அனாவசியச் செலவும் குறைக்கப்படலாம்.

(1) மழைப் பொழிவு எப்பொழுதும்போல் இருந்தால் செப்டம்பர் மாதத்தில் நன் மழைகள் பெய்கையில் பூமியின் அடியில் சுமார் 4 அடி

ஆழம் ஈரம் கோத்திருக்கும். ஆகை யால் இலைகள் கபாத்து செய்வதன் முன்பாவது பின்பாவது நீர் இறைப் புத் தேவையில்லை. இறைக்கவும் கூடாது.

(2), என்றாலும் மழைகள் கம்மி யாகப் பெய்த காலை செப்டம்பரில் பூமி அடித்தரையில் ஈரம் அற்றுப், போயிருந்தால் கபாத்து செய்வதன் முன் நன்றாக ஏராளமான தண்ணீர் கட்டவேண்டும். இச்சமயம் செடிகள் ஓய்வடைந்திருக்குமாகையால் அதி காரத்தால் வேர்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டா. இப்பொழுது நிறைய நீர் பாய்ச்சி விட்டால் பின்னால் நவம்பரில் ஒரு முறையும் கம்மிப் படுத்தலாம். இதனால் வியாதி தாக்கு வதும் குறைவாகும். கபாத்து செய்த பிறகு இரண்டாவது இறைப்புத் தேவையாகாது செய்யவும் கூடாது

கபாத்து சேய்தான பின்பு கொடி கள் தளிரடித்து நல்ல வளர்ச்சியடை யும். உள்ளிருக்கும் ஈரம் கொடிக ளுடைய புது வளர்ச்சிக்குப் போதும் காய்களும் ஒரே மாதிரி நிரவலாகக் காய்க்கும். டிசம்பர்வரை யாதொரு இறைவையும் தேவையாகாது.

(3) டிசம்பர் முதல் மார்ச்சு வரை காய்கள் பருத்து முற்றிப் பழுக்கும் பரியந்தம் ஒவ்வொரு மாதமும் ஒரு முறை ஏராளமான தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பூமியின் அடித்தட்டில் 4 அடி ஆழம் சரியானபடி ஈரமாக இருக்கப் போதிய அளவு நீர் ஒவ்வொரு தடவையும் பாய்ச்சவேண்டும்.

(4) பழுக்கும் சமயத்தில் இலேசான ஒரு நீரிறைவை வேண்டியிருக் கும்.

(5) கொடிகளைக் கத்தரித்துமாருல் அடைந்தானபின் ஏப்ரல்மாதத்தில் கொடிகள் கபாத்துசெய்யும் காலம் ஏப்ரல்—மே மாதங்களில் 20-நாட் களுக்கொருமுறை தண்ணீர் பாய்ச்ச லாம் கோடையில் கொடிகள் வீசி வளரும். பலத்தவெயிலும் பெருங் காற்றும் சேர்ந்து இலைகளின்வழியாக ஏராளமான தண்ணீர்ப்பதம் சுரந்து போகும்படிசெய்யும். ஆகையால் வேர் கள் அதிகமான ஈரத்தைக் கவர்ந் தெடுக்கும். பின்வரும் காய்ப்புப் பருவம் எவ்வளவு சிலாக்கியமாக இருக்கு மென்பது ஏப்ரல்—மே மாதங்களில் கொடிகள் வளர்ந்திருப்பதையே முற்றிலும் பொறுத்தது.

(6) பருவமழைகள் பெய்கிற காலத்தில் இறைவை வேண்டவே வேண்டாம்.

(7) முதல் இரண்டுமூன்று வருஷங் கள் சிறு கொடுகளின் வேர்கள் பரந்து ஓடி வீசியிராவாகையால் தொடுத்துத் தொடுத்துத் தண்ணீர் கட்ட வேண்டி வரும். காய்க்காத இளங்கொடி களுக்கு காலதாமதமாக தண்ணீர் விட் டால் கொடிகள் கேடுறும் வளர்ந்து வருகிறபொழுது 10-15 நாட்களுக்கு ஒரு தடவை நீர்விடவேண்டும்.

(8) காய்கள் பருத்து முற்றும் பருவத்தில் தோட்டத்தில் எந்தப் பாக மும் அதிகநீர்கோர்த்து சதசதவென்று இருக்கவேகூடாது. 48 மணி நேரத் திற்குமேல் இவ்விதமிருந்தால் கேடு உண்டாகும். மழை அதிகமாகப் பெய்து தண்ணீர் கட்டுக்கிடையாக நின்றால் வடித்துப்போடவேண்டும

## பழங்கள் திராக்ஷை

### திராக்ஷைப் பழ வைத்தியம்

திராக்ஷைப் பழம் சிற்சில நோய் களுக்குச் சிறந்த பரிகாரமாகும் அதில் போஷணையோடு நல்ல மருந்து குண மும் இருக்கிறது. பிரான்சிலும் அமெரிக்காவிலும் திராக்ஷை வளரும் பிராந்தியங்களில் அதன் பழத்தைக் கொண்டு வைத்தியம் செய்யும் ஆஸ் பத்திரிகள் உள்ளன.

திராக்ஷைப் பழத்தில் இருக்கும் உலோகப் பொருள்களே அதன் மருந் துக் குணத்திற்குக் காரணம் பொடா ஷியம், கால்ஷியம் இரும்பு, கந்தகம், மாலிக் ஆஸிட், குளுகோஸ், நைட் ரஜன், நீர் இவை அப்பழத்தில் இருக் கின்றன.

நன்றாகப் பழுத்த பழத்தையே சாப் பிடவேண்டும் சில நோய்களுக்குத் தோலோடு சாப்பிடுவது நல்லது; மற் றவைகளுக்கு அதன் ரசத்தைப் பிழிந் தெடுத்துச் சாப்பிட வேண்டும்

நோயாளிகளுடைய உடல் நிலை மைக்கும் நோய்க்கும் தக்கபடி தொடக்கத்தில் இரண்டு மணிக்கு ஒரு தடவை சிறிது திராக்ஷைப் பழ ரசம் கொடுப்பார்கள் இது பகல் முழுதும்தான் இரவில் கிடையாது. தொடக்கத்தில் தடவைக்கு மூன்று அவுன்சாக இரண்டு வேளை கொடுப் பார்கள்: பிறகு கொஞ்சம் கொஞ்ச மாக அதிகப்படுத்தி வந்து கடைசியில் அரை ராத்தல் கொடுப்பார்கள்.

கொட்டைகளை நீக்கிவிடவேண்டும். அப்படியே தோலில் பெரும் பகுதி யையும் நீக்கவேண்டும். பூராவும் நீக் கப்படாது குடலிலுள்ள அழுக்கை வெளியே தள்ளிக்கொண்டு வருவ தற்கு சிறிது முறட்டுப் பொருளும் அவசியம். பழங்களை நன்றாகக் கழுவியே தின்னவேண்டும்

இந்த வைத்தியம் வாதரோகம், கீல் வாதம், நரம்பழற்சி, இரத்த அமுக்க ஏற்றம் (Blood pressure) சொறி, கரப்பான் ஆகியவற்றிற்கும், நீரலைப் பற்றிய சில நோய்களுக்கும் உப யோகப்படும். சிற்சில புற்று நோய் கேசுகளிலும்கூட அது நல்ல குணம் கந்திருக்கிறது.

இந்த சிகிச்சையைத் தொடங்கு முன்பும் செய்து கொள்ளும் காலத் திலும் தினம் எனிமா எடுத்துக்கொள் வது நல்லது அதற்கு வெந்நீர் உப யோகப்படுத்தவேண்டும் குடல் சுத்தமாக இருப்பது அவசியம்.

வெறும் பழம் மட்டும் சாப்பிட வேண்டிய காலம் ஆளுக்காள் வித்தி யாசப்படும். பொதுவாக ஒரு வாரத்திலிருந்து ஒரு மாதம் வரை சாப்பிட வேண்டியதிருக் கும் சிலருக்கு ஜீரண உறுப்புகள் மிகவும் பலவீனப்பட்டிருக்கும். அவர் களைச் சுத்தமான திராக்ஷை ரசத்தை யாவது தண்ணீர் கலந்த ரஸத்தை யாவது டாக்டர்கள் சாப்பிடச் சொல் வார்கள். இந்த வைத்தியத்தில் நல்ல அனுபவமுள்ளவர்களே நோயாளி களுக்கு ஏற்ற சிகிச்சையை நிர்ண யிக்கமுடியும்.

வெறும் பழம் மட்டும் சாப்பிடும் காலத்திற்குப் பிறகு நோயாளிகளுக் குக் கொடுக்கும் உணவின் அளவை டாக்டர்கள் சிறிது சிறிதாக அதிகப் படுத்திக்கொண்டே வருவார்கள். முத லாவது திராக்ஷையல்லாதவேறு ஏதா வது பழம்கூடக் கொடுப்பார்கள்; அப்படியே முறையே, பால், காய் கறிச் சல்லாதுகள் கொட்டை, கிழங்குகள் ஒலிவ் எண்ணெய், தயிர் முதலியவையும் கொடுக்கப்படும் உணவின் அளவு அதிகப்பட அதிகப் பட இடைக்காலமும் அதிகப்படும் கடைசியில் தினம் இரண்டு மூன்று தடவையே சாப்பிடவேண்டும்

—நல்வழி.

சேலம்
மூன்று தாமரை
பிரசவ உபயோகித்து சந்தோஷமடையுங்கள்
Est'd 1920
Rgd.No.2221.
Prop: S அஹமத் உசேன்
கோட்டை சேலம் S. I. R.






ஒரே ஒரு ஊரில் இருந்த ஒரு பிச்சைக்காரன் ஒரு காட் டின் வழியே ஒருநாள் போய்க் கொண்டிருந்தான் அப்பொழுது அவன் எதிரில் ஒரு மந்திரவாதி தோன்றினாள். "பிச்சைக்காரா! உனக்குப் பணம் வேண்டுமா? வேண்டாமா?" என்று கேட் டாள், பணம் என்ற உடனே வாயைப் பிளந்துவிட்டான் பிச் சைக்காரன். செல்லாத காசைக் கூடப் பார்க்காத பிச்சைக்கார னுக்குப் பணம் என்ற வார்த்தை யைக் கேட்ட உடன் அதை எப் படியாவது அடைந்துவிட வேண்டுமென்ற ஆசை உண்டா யிற்று

"பணம் எங்கிருக்கிறது சொல். நான் எடுத்துக் கொள்ளுகிறேன்" என்று அவசரத்துடன் கேட் டான் பிச்சைக்காரன்.

"அப்பா! அவசரப்படேல். நான் சொல்லுகிறபடி செய்தால் உனக்கு நிறையப் பணம் கிடைக் கும்," என்றாள் மந்திரவாதி.

"சீக்கிரம் சொல்லு" என்றான் பிச்சைக்காரன் அவசரத்தில்.

மந்திரவாதி ஒரு பெரிய மரத் தைச் சுட்டிக் காட்டி "இந்த மரத்தின் உச்சியில் ஒரு பெரிய சந்து இருக்கிறது. அதன் வழி யாக கீழே இறங்கினால் மூன்று அறைகள் இருக்கும். முதல் அறையில் உள்ள பெட்டியில் செப்பு நாணயங்கள் இருக்கின் றன. இரண்டாவது அறையில் உள்ள பெட்டியில் வெள்ளி நாணயங்கள் இருக்கின்றன. மூன் றாவது அறையில் உள்ள பெட்டி யில் தங்க நாணயங்கள் இருக் கின்றன. நீ எதை வேண்டுமானா லும் எடுத்துக்கொள். அங்கேயே மரச் சிமிழ் ஒன்று இருக்கிறது. அது எங்கள் பாட்டி வைத்துக் கொண்டிருந்தது. அதை ஒரு நாள் ஒரு காக்கை கொண்டு போய் அந்தப் பொந்தில் போட்டு விட்டது. அதையும் நீ வருகிற பொழுது எடுத்துக்கொண்டுவா, என்று சொன்னாள்.

துணியை இழுத்துக் கட்டிக் கொண்டு ஒரே தாவில் மரத்தின் உச்சியை அடைந்தான். அங்கு மந்திரவாதி கூறியபடி அறைகள் இருந்தன. முதல் அறையில் சென்று செப்பு நாணயங்களை வாரிக்கொண்டான். இரண்டா வது அறையில் இருந்த வெள்ளி நாணயங்களையும் எடுத்துக் கொண்டு தங்க அறைக்கு வந் தான். அங்கு பெட்டியிலே குவிந் திருந்த தங்க நாணயங்களைக் கண்டவுடன் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய் விட வேண்டுமென்ற எண்ணம் உண் டாயிற்று. கையிலிருந்த மற்ற



இரண்டு நாணயக் குவியல்களை யும் கீழே போட்டு தங்க நாண யங்களை முடிந்தமட்டும் எடுத்துக் கொண்டான். வெளியிலே வந்த வுடன் மரச் சிமிழ் ஞாபகம் வந் தது. அதை எடுக்க உள்ளே சென்றான். மூன்று நாய்கள் திடீ ரென அவன்மேல் பாய்ந்தன. ஆனால் மந்திரவாதியின் சக்தி யால் திடீரென அவை பொம்மை நாய்களாக மாறிவிட்டன. அவ னும் மரச் சிமிழை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

மரச்சிமிழின்மேல் அவனுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதில் ஏதோ மந்திரம் இருக்கிறது. இதை அவளிடம் கொடுக்கக் கூடாது" என்று எண்ணி, அவ ளைப் பார்த்து,

"பாட்டி! உனக்கு இந்தச் சிமிழ் எதற்கு?" என்றான்.

"அது எங்கள் பாட்டியுடை யது. எனக்கு வேண்டும்" என் றாள் மந்திரவாதி.

"இதோ பார், என்னை ஏமாற்றிவிடலாம் என்று நினைக் காதே. உண்மையைச் சொல். பாட்டியான பிறகு உனக்குச் சிமிழ் எதற்கு விளையாடுவ தற்கா?" என்றான் அவன்

"அதில் ஒன்றுமில்லை. எங்கள் பாட்டியுடையது என்பதினால் தான் நான் கேட்கிறேன்" என் றாள் அவள்.

மந்திரவாதி உண்மையைச் சொல்ல மறுக்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டான். கீழே போனால் சிமிழைப் பிடுங்கிக் கொண்டுவிடுவாள் என்று அவ னுக்குத் தெரியும். அதனால் அவளைக் கொன்றுவிடத் தீர்மா


ளித்தான். மறுகணம் தான் நின்றுகொண்டிருந்த மரக்கிளையில் ஒரு குதி குதித்தான். மரக்கிளை அப்படியே ஒடிந்து மந்திரவாதியின்மேல் தடார் என்று விழுந்து அவனைக்கொன்றது. பிச்சைக்காரனும் தங்கத்தையும், மரச் சிமிழையும் எடுத்துக்கொண்டு நடந்தான்.

வெகு தூரத்திலுள்ள ஒரு ஊருக்குச் சென்று பெரிய மாளிகை கட்டி, பல வேலைக்காரர்களுடன் தடபுடலாக வாழ்ந்து வந்தான். அந்தப் பட்டணத்தில் இவனைக் காட்டிலும் பணக்காரன் ஒருவனும் இல்லை என்று சொல்லும்படி இருந்தான். ஆனால் வெகுநாள் அப்படியே அவனால் இருக்க முடியவில்லை. திடீரென ஒருநாள் கையிலிருந்த காசு தீர்ந்துபோகவே ஒருவருக்கும் சொல்லாமல் அப்பட்டணத்துக்கு வெளியில் ஒரு குடிசையில் வசிக்க ஆரம்பித்தான்.

அப்படியிருக்கையில் ஒருநாள் அவனுக்கு அந்த மரச்சிமிழின் நினைவு வந்தது. அதை எடுத்துத் திறந்து பார்த்தான். அதில் மூன்று சிறிய குச்சிகள் இருந்தன. அதில் காசு ஏதாவது இருக்கும் என்று நினைத்த அவனுக்கு அதில் குச்சிகளைக் கண்டவுடன் கோபம் அதிகமாகி குச்சிகளைத் தூக்கி அந்தச் சிமிழின் மேல் எறிந்தான். குச்சிகள் சிமிழின்மேல் பட்டவுடன் மூன்று நாய்கள் திடீரென அவன் முன் தோன்றின. அதைக் கண்டவுடன் அவனுக்குப் பயம் ஏற்பட்டது. ஏனெனில் அந்த நாய்கள் அவனை மரப்பொந்தில் எதிர்த்தவைகள்.

"எசமானே! உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டன.

அவனும் சிறிது பயம்தெளிந்து "எனக்குக் காசு வேண்டும்" என்றான். மறுகணம் மரப்பொந்தில் இருந்த மூன்று பெட்டிகளும் வந்துவிட்டன. அன்று முதல் மறுபடி பணக்காரனாகிவிட்டான். அவனுக்குப் பணம் வந்த



வுடன் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று.

அந்தப் பட்டணத்தில் அழகிய ராஜகுமாரி இருந்தாள். அவள் ஒருவரையும் கலியாணமே செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்லிவிட்டாள். அதனால் அந்த நகரத்து அரசன் அவளைச் சிறையில் தள்ளிவிட்டான். இந்த விஷயம் நமது பணக்கார பிச்சைக்காரனுக்குத் தெரிந்தது. அவனும் அந்த சிமிழை எடுத்து குச்சிகளுடன் அடித்தான். நாய்கள் தோன்றின. அதில் ஒரு நாயைப் பார்த்து 'சிறையில் உள்ள இந்த ஊர் அரசகுமாரியைக் கொண்டுவா" என்று கட்டளையிட்டான் அன்றிரவு அரசகுமாரி தூங்கிக்கொண்டிருக்கையில் தன் முதுகில் வைத்து அவனிடம் கொண்டு சேர்த்தது. அவளை எப்படியாவது மணம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணினான். அதற்கு தகுந்த நாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். மறுநாள் காலை அரசகுமாரி சிறையில் கொண்டுசேர்க்கப்பட்டாள்.

மறுநாள் தூங்கி எழுந்தவுடன் அரசகுமாரி தன் தாயைப் பார்த்து "அம்மா! நேற்றிரவு ஒரு பெரிய மாளிகையில் ஒரு அழகிய புருஷனுடன் பேசுவது போல கண்டேன். அது கனவா, அல்லது உண்மைதானா என்று புரியவில்லை," என்றாள். தாயாரும் அதைக் கவனிப்பதாகச் சொல்லி அன்றிரவு ஒரு பையில் அரிசி மாவை அடைத்து அதன் அடியில் துளை செய்து அரசகுமாரி தூங்கும் கட்டிலில் கட்டிவிட்டாள். அன்றிரவும் ஒரு நாய் வந்து அவளை கட்டிலுடன் தூக்கிக்கொண்டு அந்த மாளிகைக்கு வந்து மறுநாள் காலையில் சிறையிலே கொண்டு வந்துவிட்டது. அன்று காலையிலும் அரசகுமாரி தன் தாயிடம்தான் அந்த அழகிய வாலிபனைக் கண்டதாகக் கூறினாள். உடனே அவள் தாய் சேவகர்களை அழைத்து அந்த அரிசி மாவு கிடக்கும் வழிநெடுகச் சென்று அது எங்கு முடிகிறதோ அவ்விடத்திலுள்ள மனிதனைப் பிடித்துவரக் கட்டளையிட்டாள். சேவகர்களும் மாவு இறைந்து கிடந்த வழியாகச் சென்றார்கள் அது பிச்சைக்காரன் இருந்த மாளிகையில சென்று நின்றது அவர்கள் உள்ளே சென்று பிச்சைக்காரனைப் பிடித்துக்கொண்டு அரசனிடம் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அரசன் நடந்தவைகளை அறிந்து அவனைத் தூக்கிலிடும்படி கட்டளையிட்டான்

மறுநாள் தூக்கு மேடையைச் சுற்றி அந்த நகரத்து ஜனங்கள் கூடிவிட்டார்கள். பிச்சைக்காரனும் அரசனைப் பார்த்து, தன் சிமிழிலுள்ள விபூதியை இட்டுக்கொண்டு கடவுளை தோத்திரம் செய்தவுடன் தன்னைத் தூக்கிலிடும்படி கேட்டுக்கொண்டான். அரசனும் அதற்கு சம்மதித்தான்.

பிச்சைக்காரன் விபூதி எடுப்பதுபோல் பாசாங்கு செய்து சிமிழைத் திறந்து குச்சிகளை அதன் மேல் தட்டினான் அங்கு மூன்று நாய்களும் தோன்றின. அவன் அரசனை நோக்கிக் கையைக் காட்டினான். மூன்று நாய்களும் பாய்ந்து அவன் கழுத்தைப் பிடித்தன அரசனும் கத்த ஆரம்பித்தான். ஒரு நாய் அவனை விட்டு அங்கு இருந்தவர்கள் மேல் பாய ஆரம்பித்தது. பயத்தினால் எல்லோரும் ஓட ஆரம்பித்தனர். அதற்குள் அரசன் பிச்சைக்காரன் தண்டனையை எடுக்க உத்தரவிட்டான். நாய்களும் அவனை விட்டுவிட்டன.

மறுநாள் பிச்சைக்காரனுக்கும் அரசகுமாரிக்கும் தடபுடலாகக் கலியாணம் நடந்தது. மூன்று நாய்களும் எல்லோரையும் வரவேற்று, சாப்பாடு போட்டு, தாங்களும் வயிறு புடைக்கத் தின்று பிறகு மறைந்துவிட்டன. இப்பொழுது தெரிகிறதா மந்திரச் சிமிழின் ரகசியம். அதனால்தான் மந்திரவாதி அதை எடுத்துக்கொள்ள நினைத்தாள்.



---

## கணக்குத் தெரியுமா?

★


கோபு ரொம்ப வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். வழியில் கிட்டு அவனைப் பார்த்து விட்டு, அவனை நிறுத்தி, "நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டான். "போகிறபோது 'எங்கே போகிறாய்' என்று கேட்டதினால் போகும் இடத்தைச் சொல்ல மாட்டேன். நான் சொல்லப் போவதை நீயே யூகித்துக்கொள். நான் மணிக்கு 4 மைல் வேகத்தில் போனால் சேரவேண்டிய இடத்துக்கு 5 நிமிஷம் கழித்துப் போவேன். ஆனால் 5 மைல் வேகத்தில் போனால் 10 நிமிஷம் முன்னாடி போய் விடுவேன்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். அதைக் கேட்ட கோபு கணக்குத் தெரியாமல் முழித்தான். நீங்கள் கோபுவுக்குச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

[ விடை அடுத்த பக்கம் ]




### மணிப் பறவை

இந்த விநோதமான பட்சி தென் அமெரிக்காவில் அதிகமாகக் காணப்படுகிறது. இதன் உடல் பாதி வெளுத்தும், பாதி கறுத்தும் இருக்கிறது. இதற்கு வாயின் அருகில் மூன்று கொம்புகள் காணப்படுகிறதல்லவா அவை மிகவும் கூர்மையானவை. யாராவது அருகில் சென்றால் முட்டுமாம். இது சப்தம் செய்தால் வெகுதூரம் வரையில் கேட்கும். பள்ளிக்கூடத்தில் உள்ள மணி 'நண, நண' என்று அடிப்பதுபோன்று இருக்கும் அதன் குரல். அமெரிக்காவில் ஒரு மிருக காட்சி சாலையில் இப்பட்சியை அடைத்து வைத்தார்கள். அதனால் அது கூச்சல் போட ஆரம்பித்தது. சுமார் ஒரு மணி விடாமல் கூச்சல் போடவே அங்கிருந்தவர்கள் காது செவிடாகிவிட்டது சத்தம் தாங்காமல் மிருக காட்சி சாலை அதிகாரி அதை வெளியிலே விட்டுவிட்டார். அது யாராவது எதிர்த்தால் உடனே கூச்சல் போடுமாம். இப்படிப்பட்ட மணிப் பறவைகளை நம் ஊர் கோயில்களில் கட்டி வைத்தால்நன்றாக இருக்கும் என ஒரு அம்பிப் பயல் சொல்லுகிறான்.



## அந்தக்காலத்து மாணவர்கள்

### கர்ணன்

பரசுராமர் அவதாரம் கடவுள் எடுத்த பத்து அவதாரங்களிலே ஒரு அவதாரம் என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? அந்தப் பரசுராமர் வில்வித்தையிலே மகா கெட்டிக்காரர். வில்லும், அம்பும் அவர்சொன்னபடிக் கேட்கும். கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள கண்ணுக்குத் தெரியாத ஒரு பொருளை ஒரே நிமிஷத்தில் அடித்து விடுவார். அப்படிப்பட்ட வல்லமை உள்ள பரசுராமர், க்ஷத்திரியர்களுக்கு வில்வித்தை சொல்லிக்கொடுக்க மாட்டேனென்று ஒரு சபதம் செய்து இருந்தார் அதனால் வில்வித்தை கற்றுக்கொள்ள ஒரு ராஜாவும் அவரிடம் பாடம் படிக்க முடியாமல் போய் விட்டது

கர்ணன் எப்படியாவது வில்வித்தையை அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைத்தான். ஆனால், அவன் க்ஷத்திரியன். ஆகவே, அவனால் அவரிடம் போக முடியவில்லை. அதனால் அவனுக்குப் பெரிய கவலையாக இருந்தது. வெகு நாள் யோசனை செய்த பிறகு, அவனுக்கு இந்த மாதிரி எண்ணம் தோன்றியது. "அவர் க்ஷத்திரியனுக்குத்தானே பாடம் சொல்லிக் கொடுக்கமாட்டார். ஒரு வேதியனாகச் சென்றால், கண்டிப்பாகப் பாடம் சொல்லிக் கொடுப்பார்' என்று எண்ணி, ஒரு வேதியனாக வேஷம் போட்டுக்கொண்டு, பரசுராமரிடம் வந்தான். வந்து, "குருதேவா! நான் ஒரு வேதியன் தங்களிடம் வில்வித்தை கற்றுக் கொள்ள எண்ணி வந்தேன்" என்றான்.

அவரும் அவனை வேதியனாகவே நம்பி அவனுக்கு வில்

வித்தையைச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். தன் உண்மையை வெளிக்காட்டாமல், குருவிற்கு வேண்டிய எல்லாப் பணிவிடைகளையும் செய்து கொண்டு வந்தான் கர்ணன். சில காலத்தில் அனேகமாக எல்லா வித்தைகளையும் கற்றுக் கொண்டான். அவனுடைய பணிவிடைகளுக்கு மகிழ்ந்து பரசுராமரே அவனுக்கு வில்வித்தையிலே உள்ள சில முக்கியமான ரகசிய மந்திரங்களையும் சொல்லிக் கொடுத்தார்.

இந்திரனுக்குக் கர்ணன் இம்மாதிரி கெட்டிக்காரனாகப் போவதில் பொறாமை ஏற்பட்டது. ஏனெனில் அர்ஜுனனிடம் இந்திரனுக்கு ஆசை அதிகம். ஆகையினால் கர்ணன் படிப்பை எப்படியாவது குட்டிச்சுவர் ஆக்கிவிட வேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று. அதற்காக அவன் சில வழிகளை யோசனை செய்தான்.

ஒரு நாள் பகலில் பரசுராமர் கர்ணன் மடியில் தலை வைத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது இந்திரன் ஒரு வண்டாக மாறி கர்ணன் துடையை கடிக்க ஆரம்பித்தான். இருந்தாலும் கர்ணன் அதை லக்ஷியம் செய்யாமல் பொறுமையுடன் இருந்தான். ஒரு வேளை மடியை அசைத்தால் குரு விழித்துக் கொள்ளுவாரோ என்ற பயத்தினால் அவன் உடலையே அசைக்கவில்லை. அதைக் கண்ட இந்திரன் அவனை விடாமல் கடித்தான். அதனால் ரத்தம் பெருக ஆரம்பித்து பரசுராமர் காதினருகில் வழிந்து ஓட ஆரம்பித்தது. சுரீரென்று ரத்தம் அவர் காதில் படவே பரசுராமர் விழித்துக் கொண்டார்.

எதிரில் உட்கார்ந்துகொண்டிருந்த கர்ணனையும் அவன் மடியையும் மாறிமாறிப் பார்த்தார். அவருக்குத் திடீரெனக் கோபம் உண்டாகியது. கண்களில் நெருப் பொறி பறந்தது. உடனே கர்ணனைப் பார்த்து "நீ க்ஷத்திரியனா அல்லது வேறு யார் என்பதை உடனே சொல். என்னை ஏமாற்றாதே. நீ க்ஷத்திரியனாக இல்லாவிட்டால் இவ்வளவு பலமாக வண்டு கடியைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. உடலின் வலியைத் தாங்கும் சக்தி க்ஷத்திரியனுக்குத்தான் உண்டு. உண்மையைச் சொல்" என்றார் அவர்.

அவர் கோபத்திலே நடுங்கிவிட்டான் கர்ணன். "குருவே! நான் க்ஷத்திரியந்தான். வில்வித்தையிலே உள்ள ஆசை, தங்களிடம் உள்ள பக்தி இவ்விரண்டுந்தான் நான் உங்களை ஏமாற்றியதற்குக் காரணம். வில்வித்தை கற்றுக்



கொண்டு விட்டேன். தாங்கள் எது வேண்டுமானால் செய்யலாம்" என்றான் அவன்.

அதைக் கேட்டதும் அவருக்குக் கோபம் கடுமையாகிவிட்டது. "நீ என்னை ஏமாற்றியதால் உனக்கு அவசியமாக வேண்டியிருக்கும் சமயங்களில் நான் சொல்லிக் கொடுத்த மந்திரங்கள் மறந்து போகக் கடவது" என்று சாபங் கொடுத்தார். இச்சாபம் மாத்திரம் இல்லாதிருந்தால் மகா பாரதக் கதையே மாறி இருக்கும். ஆனால் குருவினிடத்தில் உள்ள பக்தியால் உண்மையைச் சொன்னபடியால் கர்ணனை நாம் இன்றும் மறக்கவில்லை.

## கண்டுபிடித்தவர் யார்?

★

வெடிகுண்டுகள் 1495-ம் வருஷம் நெதர்லாண்ட்ஸ் தேசத்திலுள்ள வென்லோ என்ற நகரில் கண்டுபிடிக்கப்பட்டது.

o o o

ஹெலிகாப்டர் என்ற மிகச் சிறிய விமானத்தை இதாலி தேசத்திலிருந்த லியோனார்டோ வின்ஸி என்பவர் 1500-ம் வருஷத்தில் கண்டுபிடித்தார்.

o o o

1898-ம் வருஷம் ரொனால்ட் ரோஸ் என்ற ஆங்கிலேயர் 'மலேரியா' கிருமிகளைக் கண்டார்.

o o o

மின்சாரநெசவாலை எட்மண்ட் கார்ட்ரைட் என்பவரால் 1785-ம் வருஷம் கண்டுபிடிக்கப்பட்டது.

o o o

மர்குரி வேபர் (பாதரச ஆவியின்) மூலம் எரியக்கூடிய மின்சார விளக்கு 1902-ம் வருஷம் பீடர் ஹிவிட் என்ற ஆங்கிலேயரால் கண்டுபிடிக்கப்பட்டது.

## விடை

ஒரு மணிக்கு நாலு மைல் சென்றால் ஒரு மைல் போவதற்கு 15 நிமிஷம் ஆகும். மணிக்கு ஐந்து மைல் சென்றால் ஒரு மைல செல்லுவதற்கு 12 நிமிஷம் பிடிக்கும். ஆகவே ஐந்து மைல் வேகத்தில் சென்றால், ஒவ்வொரு மைலுக்கும் 3 நிமிஷம் குறைவாக ஆகும். ஆகையால், மொத்த தூரம் செல்லுவதற்கு பதினைந்துநிமிஷங்கள் குறைவாக ஆகும். ஆகவே, சென்ற தூரம் 15 நிமிஷங்களிலே எவ்வளவு 3 நிமிஷங்கள் இருக்கிறது என்று கண்டுபிடித்தால் தெரியும். ஐந்து மைல்தான் தெரிந்துவிட்டதே.








நன்றாகப் படிக்கும் பிள்ளைகளைப் பாருங்கள். அவர்கள் ஒருவரோடும் அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசமாட்டார்கள். ஏனென்றால் நன்றாகப் படித்த பிறகு அடக்கம் வந்து விடுகிறது. அதனால் பெரியவனாகி விடுகிறான். ஆனால் அறைகுறையாகப் படித்தவர்கள்தான் ரொம்பப் படித்தவர்களாக நினைத்துக்கொண்டு கர்வப்படுவார்கள். அம்மாதிரி இருப்பவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் அவமானப்பட நேரிடும். எப்படி என்று கேட்கிறீர்களா? கோடை காலத்தில் சூரியன் எவ்வளவு கொளுத்துகிறான். எவ்வளவு பேர் அதன் வெப்பத்தில் கஷ்டப்படுகிறார்கள். இருந்தாலும் நமக்கு எவ்வளவோ தூரத்தில் இருந்து நம்மைகொளுத்தி எறிக்கும் அவ்வளவு பெரிய சூரியனை ஒரு சிறிய குடையால் நாம் மறைத்து விடவில்லையா அம்மாதிரி நமக்கு மேல் படித்தவர்கள் இல்லை என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் ஒரு சிறிய விஷயத்தில் அவமானப்பட நேரிடும். அதனால் அடக்கம் மிகவும் அவசியம். அப்பொழுதுதான் கல்வியும் வளரும்.

## ஆகாய ரகசியம்

### "தேல்ஸ்"

கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், மேலும், கீழும் பார்த்து முழிப்பவர்களை, "என்னடா! ஆகாசத்தைப் பார்க்கிறாய்" என்று சொல்லுவது வழக்கம். ஆனால், ஆகாயத்தையே இரவும், பகலும் பார்த்துக்கொண்டு தம் வாழ் நாளை ஆகாயத்திலேயே செலவழித்து அங்குள்ள ரகசியங்களை வெளியிட்டிருக்கிறார்கள் சில பெரியவர்கள். அந்தப் பெரியவர்களும் நம்போன்ற மனிதர்கள்தான். அதோடு மட்டுமல்லாமல், அவர்கள் ஆட்டு இடையர்கள் என்றே சொல்லலாம். அவர்கள் உடல் மாத்திரம் பூமியில் இருந்ததே தவிர, உயிர் ஆகாயத்தில்ஸஞ்சரித்துக்கொண்டிருந்தது. அவர்கள மூவாயிரம் வருஷங்களுக்கு முன்பு நம்நாட்டிலும், சீன தேசத்திலும், எகிப்திலும் இருந்தார்கள்.

சீன தேசத்திலுள்ள சக்ரவர்த்தி ஆகாய ரகசியம் தெரிந்த ஒரு இடையனை தன் அரசாங்கத்தில் வேலைக்கு வைத்துக்கொண்டான். அவனுக்கு "வான சாஸ்திரி" என்று பெயரும் கொடுத்துவிட்டான. வான சாஸ்திரி ஆகாயத்தைப்பார்த்துக் கணக்குப் போட்டு எப்பொழுது கிரகணங்கள் ஏற்படும் என்று சொல்லவேண்டும். கிரகணத்தன்று ஜனங்கள் பெரிய டமாரத்தை வைத்துக்கொண்டு. பெரிய சத்தம் உண்டாக்கி, சூரியனையோ, அல்லது சந்திரனையோ பிடிக்கவந்த ராக்ஷஸனைப் பயமுறுத்தி துரத்திவிடுவார்கள். வான சாஸ்திரி சொல்லியபடி கிரகணம் ஏற்படாவிட்டால், அவன் தலை போய்விடும். தலை போய்விட்டால் என்ன செய்வது என்று ஆகாய ரகசிய ஆராய்ச்சியில் சில இடையர்கள் இறங்கப் பயப்பட்டார்கள். அதனால் சீன தேசத்துவான ஆராய்ச்சி நின்றுவிட்டது.

கிரீஸ் தேசத்தில் கிறிஸ்து பிறப்பதற்கு 640 வருஷங்களுக்கு முன்பு பிறந்த "தேல்ஸ்" என்பவர், "சூரிய, சந்திர, நக்ஷத்திரங்கள், தேவதைகள் மாத்திரமல்லாமல், இன்னும் பெரிய பெரிய ரகசியங்களைக் குறிக்கின்றன" என்று சொன்னார். அவர்தான் முதல்முதல் ஆகாயத்தை அப்படியே படமாக எழுதி. அதன்மூலம் சில கணக்குகளைக் கண்டுபிடித்தார். ஆனால், திடீரென 550ம் வருஷம் அவர் மரணமடையவே, ஆகாயத்தை கவனிப்பார் ஒருவரும் இல்லாமல் போய்விட்டது. எனினும் கடவுள் ஆகாயத்தைக் கவனிப்பதற்கு ஒருவரைக் கண்டுபிடித்தார். அவரைப்பற்றி அடுத்த இதழில் கவனிப்போம்.

## கண்டுபிடித்தவர்யார்?

'மார்பியா' என்ற மயக்க மருந்து 1816-ம் வருஷம் ஸெர்டர்னர் என்ற ஜெர்மானியரால் கண்டுபிடிக்கப்பட்டது.

* * * *

ஹிலேர் சார்டான் என்ற பிரெஞ்சுக்காரர் 1889-ம் வருஷம் செயற்கைப்பட்டு உற்பத்தி செய்தார்.

• •

பலூன் 1782-ம் வருஷம் ஜோஸப் மான்ட் கோல்பர் என்ற பிரெஞ்சுக்காரரால் கண்டு பிடிக்கப்பட்டது.

# மண் வாசி

[ எம். எஸ். சுப்ரமண்யஐயர் ]

பெண்ணழகில் பெரும் பித்துடையவன் அக்பர் சக்கரவர்த்தி. ஆனது பற்றி, ஆணுக்கு அறிவையும், பெண்ணுக்கு அழகையும் வைத்தான் கடவுள், என்று அவன் அடிக்கடிக் கூறி மகிழ்வான் அவனது அந்தப்புரத்தில் அழகில் மிகுந்த ஐயாயிரம் மாதர் இருந்தனர் என்பர் சரித்திர ஆசிரியர்.

அவனது பெண்பித்துக் கண்டு, விகடகவி வீரபாலனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. 'பெண்ணினிடம் பேரறிவும் உண்டு' என்று அடிக்கடி பேசுவான் அவ் வீரபாலன். அதெப்படி, என்று கேட்பான் அக்பர் பாதுஷா. மனைக்கு விளக்கம் மடவார் என்பான் விகடகவி. ஆன்ற அறிவு இல்லையானால், மனை விளக்கமாவது கூடுமோ?—என்று எடுத்துரைப்பான்.

மாதர் என்போர் அம்பிகையின் வடிவம், சக்தியின் அவதாரம், ஜகத் மாதாவின் சாயல்! பெருமை மிகுந்த ஓர் ஆடவனைக் கண்டால், இவன் முகத்தில் இலட்சுமி களை சொட்டுகிறது, என்போம்; விஷ்ணுவின் களை சொட்டுகிறது என்று விளம்புவது கிடையாது எனவே, அன்னாரிடம் அறிவென்பது இல்லாதிருக்குமோ?

மேலும், நமது வீடுகளிலே சுப காரியம் தொடங்குகையில்! 'கௌரீ கல்யாணமே வைபோகமே' என்னும் வாழ்த்தே முதன்முதலாகப் பிறக்கும். தெய்வங்களையும் சீதாராமன் மீனாட்சி சுந்தரம், ராதாகிருஷ்ணன், சிவகாமி நாதன் என்று அழைக்கிறோம். மாதரின் அறிவு நலத்துக்கு வேறு அத்தாட்சி வேண்டுமோ?

இவ்விதமெல்லாம் வீரபாலன் விளக்கிச் சொல்லியும், அக்பர் பாதுஷா அதனை ஏற்கவில்லை. "பெண் புத்தி பெரும் பேதமைத்து என்கின்றனரே, மாதரைப் பேதையர் என்பதுவே தக்க சாட்சியாமே, இங்ஙனியில், அன்னாருக்கு அறிவு மிகுதி என்பது எங்ஙனம் ஏற்கும்?" என்று வினவினான் அப் பாதுஷா.

அதற்கு, "அறியா மாந்தர் அவ்விதம் கூறலாம். கேவலம் காமக் கருவிகளாக நினைத்திருப்போர், அப்பெண்களின் பேரறிவை எங்ஙனம் காண முடியும்? பெண்ணைத் தெய்வமென்று போற்றவேண்டும். மாதரை இழிவாக நினைத்தல் வெறும் மடமையேயன்றி வேறன்று" என்றான் வீரபாலன்.

மேலும், "பெண்களிடம் அறிவு மட்டுமா? ஆண்மையும் உண்டே! உங்கள் மூதாதையான ரீஜியா ராணி இந்த டில்லியிலிருந்து நேர்மையாக ஆட்சி புரியவில்லையா? இப்போதும் சித்தாரிலே ராஜபுத்திர மாதர் நம் படைகளை எதிர்த்து முறியடிக்கவில்லையா? அறிவுக்கும் ஆண்மைக்கும் அவர்கள் விளை நிலம் ஆவதை மறுப்பதற்கில்லை," என்று மீண்டும் மொழிந்தான் வீரபாலன்.

"அத்தி பூத்ததுபோல் ஒருவர் இருவர் இருந்தால் போதுமா? அது கொண்டு பெண் குலத்தையே பெருமைப் படுத்துவதா?" என்று மறுத்துப் பேசினான் மகா அக்பர். அதுகேட்டதும் "மகா பலம்படைத்த யானை, மனிதருக்கு அடங்கிக் கிடப்பது போல் மாதரும் ஆடவருக்கு அடங்கிக் கிடக்கின்றனர். எல்லாம் தெரிந்திருந்தும் தெரியாதவர்போல் நடப்பதே பெண்களின் இயற்கை" என்று விகடகவி உரைக்கலானான்.

"நல்லது உனது வீட்டில் பெண்ணரசு ஆளுகிறதுபோலும்" என்றான் அக்பர் பரிகாசமாக அதன்மேல், "மாதர் இன்றேல் மா நிலம் ஏது? ஆடவரும் வாழ்வது ஏது? வாழ்க்கைத் துணையாக மாதரை வகுத்த மகா தேவன் மடமை நிறைந்தவராக மாதரைப் படைத்திருப்பானோ? அவ்விதமாயின், வாழ்வு எவ்விதம் சுவைக்கும்? பரிகாசம் பண்ணுவதில் யாது பயன்?" என்றான் அவ்வீரபாலன்.

அறிவு, அழகு என்பனவற்றில், அழகையுடைய பெண்டிருக்குப் புத்தி என்பது பிரகாசிக்காது என்று தாக்கஞ் செய்தான் டில்லி பாதுஷா. "பெண்களிடம் இயற்கையிலேயே அறிவு அதிகம். அத்துடன் கேள்வியறிவும் மிகுதி அதனால் கூரிய மதியும் உண்டு. புத்தகப் படிபபு இல்லையே என எண்ணுதல் வேண்டாம்" என்று வீரபாலன் சொல்லினன்.

'கண்கூடாகக் காணும்வரையில் உன் வார்த்தையை நான் நம்புவது எப்படி? உயர்குல மாதரிடம் ஒரு சமயம் ஓங்கிய அறிவு காணப்படலாம் எல்லாரிடமும் அறிவு நிரம்பியிருக்கும் என்பது உனது வாக்கேயன்றி வேறன்று" என்று அக்பர் சொல்ல. அவ்விதம் பேசிக்கொண்டே இருவரும் நெடுந்தூரம் நடந்து செல்லத் தலைப்பட்டனர்.

வழியிலே உழவனொருவன் 'தனது கழனிக்காட்டைப் பண்படுத்திக்கொண்டிருந்தான் அந்த ஏராளனது மனையாளும் குழந்தைகளும் அவனுக்குத் துணை செய்து நின்றனர். அதனைக் கூர்ந்து கவனித்தான் அக்பர். "உழவனே உலகத்துக்கு அச்சாணி; தேர்வேந்தர் சிறப்பதெல்லாம் ஏர் வேந்தரின் பிரயாசையினால்" என்று வீரபாலன் பேசினன்

அப்போது அவ்வழியே மாதர் மூவர் வந்துகொண்டிருந்தனர். அம்மூவரும் உழவனையும் அவனது நிலத்தையும் உற்று நோக்கினர். ஒருத்தியோ, "இதன் மண்வாசி எப்படியோ?" என்றாள். உடனே மற்றொருத்தியோ, "முகத்துக்கு உரிய பொருள் தரும் பூமி இது என்றனள் அதன் பொருளை அக்பர் அறிய முடியாமல், வீரபாலனை நோக்கினான்.

இதற்குள் அம்மாதர் மூவரும் அவ்விடம் விட்டுப் பெயரலாயினர். அவர்களைத் தொடர்ந்து சென்றான் வீரபாலன் "தமது நோக்கையுணர்ந்தும் ஏதும் பேசாமல் பெண்களின் பின்னே போகின்றானே இவன்" என்று அக்பர் கருதினான். ஆனாலும், வீரபாலனையடுத்து, அவனும் அப்பெண்களைத் தொடர்ந்து போகலானான்

சிறிது தூரஞ் சென்றதும், அங்கே விவசாயி ஒருவன் ஆழவும் அகலுமாக உழா நின்றான் தனது நிலத்தை. அவ்வேளை, மூவரில் ஒருத்தி, அந்நிலத்திலிருந்து எழும்பும் காற்றினைக் கூர்ந்து சுவாசித்தாள். 'என்ன கண்டாய் தோழி?' என்று கேட்டாள் ஒருத்தி அவளோ, "இம்மண் வாய்க்கு ஏற்றது" என்றனள்.

"இம்மண் வாய்க்கு ஏற்றது என்றால், அள்ளி வாயிலே போட்டுக் கொள்ளலாமா என்ன? இவள் பேசுவது விளங்கவே இல்லையே" என்று சிந்தித்த அக்பர், தனது நண்பனை ஏறிட்டுப் பார்த்தான் அதனை, வீரபாலன் கவனித்தானாயினும் அந்த ஸ்திரீகளையடுத்து நடப்பதிலேயே நாட்டம் வைக்கலானான் அக்பரும் விதியில்லாமல் தனது தோழனுடன் சென்றனன்.

இன்னும் சிறிது தூரம் போனவுடனே, காற்று சிறிது வேகமாக வீசியது வீசவே, உழாது கிடந்த வயலொன்றின் மண்தூசி வந்து, எல்லாருடைய முகத்திலும் வீசா நின்றது. அதனை முகர்ந்ததும், "இது பிள்ளைப் பயிருக்கு ஏற்றதே" என்று இயம்பினாள் மூன்றாவது மாதராள் "பிள்ளைப் பயிருக்கு ஏற்றதென்றால், பிள்ளைகளைப் பயிரிட முடியுமா" என்று சிந்திக்கலானான் அக்பர் சக்கரவர்த்தி

இதற்கிடையில், வானத்திலே மேகங்கள் குலாவுவதையும், குளிர்ந்த காற்று வீசுவதையுங் கண்டு, அப்பெண்கள் மூவரும் கடுக நடக்கத் தொடங்கினர்: அப்பால் ஓட்டமும் நடையுமாகப் போகவும் முற்பட்டனர் அது கண்டு, அவர்களையடுத்துப்போகாமல் நின்றான் வீரபாலன். அக்பரும் தனது சகாவை நோக்கினான் சிறிது சலிப்பும் கடுப்புங் காட்டி.

'பின்பு, 'அன்ப! இம்மாதரை அடுத்தடுத்து நீ தொடர்ந்ததேன்? அன்னாரின் அழகும் பருவமும் உன்னை இழுத்துச் சென்றனபோலும் என்று நையாண்டி செய்தான் பாதுஷா அதற்கு, 'அரசே! அன்னாரின் அறிவே என்னை ஈர்த்துச்சென்றது. வேறில்லை முகத்துக்கு முகம் கண்ணாடி என்பர். தங்கள் நினைப்பு உங்களுக்கு எனது நினைப்பு எனக்கு,' என்றான் அவன்

'அப்படியா? சித்தன் போக்கு சிவன் போக்கு ஆண்டியின் போக்கும் அதே போக்குத்தான் என்ன அறிவு கண்டாய் அம்மாதரிடம்? ஏதேதோ பேசினர். அம்மூவரும். என்ன மூடுமந்திரமோ எனக்கு ஒன்றும் புரியவில்லை,' என்றான் அக்பர் 'ஆம் ஆம். அழகையும் பருவத்தையும் நீங்கள் எண்ணி நின்றீர்கள் ஆதலின், அவர்கள் கூறிய சொல்லின் பொருள் விளங்காது போயிற்று' என்றான் அவ் விகடகவி வீரபாலன்.



"அறிவாளியான உனது அறிவு விளக்கத்தை எனக்குத் தெளிவு படுத்தாமல், குத்திப் பேசுவதில் என்ன பயன்?" என்று கோபத் தொனியில் அக்பர் கூறவே. வீரபாலன், "என் அரசே! ஆயாசம் வேண்டாம் இதோ தெளிவு படுத்துவேன்" என்றுரைத்தது இது:—

"பாதுஷாவே, அம்மூன்று பெண்களும் சாமான்யமான பேர்வழிகள். கற்றறிந்தோர் அல்லர். ஆயினும் அன்னார் பேசிக்கொண்டதோ தங்களுக்கும் விளங்கவில்லை என்னையும் மிக்க சிந்தனையில் ஆழ்த்திவிட்டது மூவரில் ஒருத்தியோ முகத்துக்கு உரிய பொருள் தரும் பூமி இது என்றாள்.

"முகத்துக்கு உரிய பொருள்களோ பலவாம் பேசினவள் ஒரு மாது ஆனதால். தனது அல்லது தனது இனத்துக்கு உரிய பொருளையே அவள் குறித்திருக்க வேண்டும். மாதரின் முகத்துக்கு மினுமினுப்பும் மேனியும் தரவல்ல பொருள் மஞ்சளேயாம் மஞ்சள் பூச்சே மாதருக்கு எடுத்தது. அம்மண்ணில் மஞ்சளே நன்கு விளையும் என்றாள் முதல் பெண்.

"இனி, இரண்டாவது பெண்ணோ இம்மண் வாய்க்கு ஏற்றது என்றாள் அல்லவா? வாய்க்கு ஏற்றது என்றால் அம்மண்ணையள்ளி யாரும் வாயில் போட்டுக் கொள்ளார். ஆனால் அம்மண்ணில் விளைவதை வாய்க்கு அலங்காரமாக இட்டுக்கொள்வர். மாதரின் வாய்க்கு அலங்காரம் வெற்றிலையே. வெற்றிலை சாகுபடிக்கு அம்மண் பொருத்தமானது என்பதே அவள் கருத்தாம். வெற்றிலையை ஆடவரும் கையாளுதல் உண்டு. ஆயினும் மாதருக்கோ, தாய்மாராகும் மாதருக்கோ, அந்த இலை இன்றி அமையாததாம். இது நிற்க,

மூன்றாவது ஸ்திரீயோ, "பிள்ளைப் பயிருக்கு ஏற்றது" என்றனள் பிள்ளைப் பயிர் என்றால் என்ன? பிள்ளையைப்போல் உதவக்கூடிய பயிர். பல வழியிலும் பயன்படும் பயிர் பலருக்கும் உபகாரமாகும் பயிர் தென்னையே. தென்னம் பிள்ளை என்றுதான். எல்லாரும் சொல்லுவர். காற்றுவாடையில் வந்த மண்ணினை முகர்ந்து அவ்விதம் கூறினாள் அவள்.

"மண்வாசி என்கிறோம் மண்வாசியை அறிந்தவன் மகா நிபுணன் ஆவான். அத்தகையவனை அரசரும் பிரபுக்களும் தேடியடைந்து, மண்ணின் மகிமை உணர்ந்து விழுமிய பலன் பெற முயலுவர் அம்மாதரோ மண்ணைக் கண்ணினால் கண்டமாத்திரத்தில், முகர்ந்துணர்ந்த பொழுதில் அதன் தன்மையை உணர்ந்து கொண்டனர்.

"அன்னார் உழவர் குலத்தைச் சேர்ந்தவராகல் வேண்டும். ஆதலின், அத்துறையில் அவர்களிடம் இயற்கையறிவும் மிகுந்து நின்றது. தவிர, மண்வாசியைப் புலப்படுத்துகையில், தங்களையும் என்னையும் போன்றோரும் சிந்தனை செய்துபார்க்கும் பாஷையில், பரிபாஷையில். சங்கேத பாஷையில் பேசினர் அல்லவா? அறிவில்லாதிருப்பின், அவ்விதம் பேச முடியுமோ?

'எனவே அறிவென்பதை ஆணுக்கு மட்டுமா வைத்தான் கடவுள்? பெண்ணுக்கும் வைத்துள்ளான் பெண்ணினிடம் மிகுதியாகவும் வைத்துள்ளான். பெண் மதியைப் பொன் மதி என்பர்; நுண்மதி என்றும் இசைப்பர் தன் மதி என்றும் நவில்வர். பெற்றெடுத்த பிள்ளைகளைப் பெருமை பெறவைப்போர் மாதரே பெரு வேந்தரும் வெகு வீரரும் தம் தாய்மாரைப் போற்றுவர்.

'தாய்மாரின் தன்மை குழந்தைகளிடம் பிரதிபலிக்கும். தாய்போல் பிள்ளை, நூல்போல் சேலை' என்பது பழமொழி சின்னஞ் சிறு வயதில் குழந்தைகளைப் பண்படுத்துவோர் தாய்மாரே அன்னாரிடம் அறிவு நிரம்பியிருக்க வில்லையானால், இந்த அவனியிலே ஆடவர் பிரகாசித்தல் எங்ஙனம்? அங்குசங்கொண்டு, அடங்கா யானையை மடக்குவதுபோல், நெறி தவறும் புருஷரை நேர்மைப்படுத்துவர் மனைவியர்.

'தாங்கள் தரணியை ஆண்டு தகவு காட்டுகிறீர்கள் என்றால், மாதரோ வீடுகளை நன்கு பரிபாலித்து வீட்டரசியராகத் துலங்குகின்றனர் ஆன்ற அறிவு இன்றேல், வீட்டரசியராய் விளங்க ஒண்ணுமோ? நாட்டை நலம் படுத்தும் நல்லாடவரை உற்பத்தி செய்ய இயலுமோ? பெண்ணின் பெருமதி பேசப்போமோ?

'அழகு என்பது பருவத்தில்தான் பிரகாசிக்கும் பருவம் தளரத் தளர, அழகும் குன்றி வரும் ஆனால், அறிவோ அப்படியன்று வயது ஆக ஆக, அறிவு முதிர்ந்துகொண்டே போகும் பெண்ணறிவு நுண்ணறிவாகும்! நூலறிவினும் நுண்ணறிவே நயமுடையது'

இவ்விதம் விகடகவி வீரபாலன் கூறிவர, அக்பர் பாதுஷா ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தவனாய்ப் பெண் குலத்தினிடம் பேரறிவு உண்டென்பதை உணரலானான்.

# வீரன் வீருசாமி

-ப.ரெ.ரா-

வீரன் வீருசாமியைத் தெரியுமா? அவன் இருபயங்கர மீசைகளைப் பார்த்தாலே அவன்தான் வீருசாமி எனத் தெரிந்து கொள்ளலாம். சிறு வயதிலிருந்தே சோம்பேறியாய் வளர்ந்தவன். பூர்வாச்ரமத்திலே போக்கிரியாய்இருந்து, பின் போலீஸில் பலமுறை தீக்ஷை பெற்று, கேடி ஆச்ரமத்தில் காலந் தள்ளி வருகிறான் அவன் மனைவியோ மகா யோக்யமானவள். அக்காலத்தில் ரிஷிபத்தினிகள் எப்படி இருந்தார்களோ, அதுபோல் இந்த கேடி ரிஷியிடம் பதி சிசுருஷை செய்து வந்தாள். 'திருடன் பெண்டாட்டி என்றும் கைம்பெண் என்பதன் வாக்கியத்தை மனதில்கொண்டு எந்த வேளை தனக்கு என்ன விபரீதம் வருமோவென்று பயந்து பயந்து கண்ணீருகுத்து காலத்தைக் கடிது கழித்து வந்தாள். முத்தியில் இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. அதன் பாதுகாப்பையும், சீரிய ஒழுக்க வளர்ச்சியின் முன்னிட்டாவது ஏதாவது வேலையில் ஈடுபட்டு, ஒழுங்காய் சம்பாதித்து நாணயமாய் இருக்கும்படிக் கணவனை பிரார்த்தித்தாள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காய் முடிந்தது.

போலீஸுக்குஎப்போதுமே இவன் மேல் ஒரு கண் இவனுக்கும் போலீஸ் காரனைக் கண்டால் பகை, எரிச்சல், கோபம், பயம் உண்டு. இவன் போலீஸ்காரன்கள் சிலருக்கு'நாஸ்தா'வுக்கு, பணம் கொடுப்பதும், அவர்கள் இவன் ஜோலிக்கு வராமலிருப்பதும் சகஜம். ஆனால், சில கண்டிப்புக் காரர்களும், இன்ஸ்பெக்டரின் கடும் உத்தரவுக்காகவும். வீருசாமியை எந்தச் சாக்கிலாவது மடக்க சமயம் பார்த்திருந்தனர். வீருசாமியின் குழந்தை திடீரென ஒருநாள் கடுமையான சுரத்தால் அவஸ்தைப்பட ஆரம்பித்தது மனைவியோ கண்ணீர் உகுத்தாள். டாக்டரோ பத்து ரூபாய் பணம் பெயர்ந்தாலொழிய வரமுடியாதென்று கண்டிப்பாய் சொல்லிவிட்டார் எங்கேயாவது ஜேபடி செய்வதைத்தவிர வேறு வழி? குழந்தையிடம் அபிமானமுள்ளவன். அதைப் பிரிய மனமில்லை. யோசித்தான். மனைவியிடம் சொல்லாமல் பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தான். அங்குமிங்கும் சுற்றினான். கும்பல் முண்டியடித்து, ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு பஸ்ஸில் ஏற முயன்றது. அதில் வீருசாமியும் கலந்துகொண்டான்.

பஸ் ஏறி முயன்றதில் ஒருவர் இடம் கிடைக்காமல், தள்ளப்பட்டு ரோடில் விழுந்தார். எழுந்திருந்து தூசியை தட்டிக்கொண்டே பையைத் தடவினார். 'ஐயோ போச்சே! என் மணிபர்ஸைக்காணலியே. கலியாணத்துக்குப் போகலியே! மனையாள் வைவாளே! அந்தப் பிடாரிக்கு என்ன பதில் சொல்லுவேன்' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டார் அங்கு பீட் இருந்த போலிஸ் கான்ஸ்டேபிள் விரைந்து வந்துவிட்டான். வீராசாமி பயந்தான். ஓடவோ வழியில்லை கையில் பர்ஸ் இருந்தால் ஆபத்து குழந்தையை காப்பாற்ற வேண்டுமென்றால், நாளைக்கு எப்படியும் சம்பாதிக்கலாம். மாட்டிக்கொண்டால்? ஆகவே அருகிலிருந்த, ஆறுபோல் ஓடும் சாக்கடையைநோக்கி வீசினான் பர்ஸை அதுவும் தனது நிலைமை, கவுரவம், இதை நினைத்து, நனைந்து தத்தளித்து உருண்டு புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. வீருசாமியின் எண்ணங்களும் பலவாறாக ஓடிக்கொண்டிருந்தன. ஆனால், அவன் ஓடவில்லை, வந்தது வரட்டுமென்று தைரியமாகவே நின்றுவிட்டான்.

கான்ஸ்டேபிள் வந்தான். அவனை அங்கு கண்டபின்னும் சும்மா இருப்பானா? அவன் கையைப் பற்றிக் கொண்டான். இவன் வாக்குவாதம் செய்தான், திமிறினான், கெஞ்சினான்; மிஞ்சினான் பாச்சா பலிக்கவில்லை, துரதிருஷ்டம்பிடித்தவன். அந்த சமயம்தானா அங்கு சைகிளில் வந்த சப் இன்ஸ்பெக்டரும் காட்சி தந்தருள வேண்டும். வீருசாமியின் மனம் பட்-பட்டென்று அடித்துக்கொண்டது அதே சமயம் அவன் கன்னத்திலும் 'பட்பட்'டென அடி விழுந்தது. ஆனால் சப் இன்ஸ்பெக்டர் எதிர்பார்க்கவில்லை. வீருசாமி கையை ஓங்கினான். கையும் கன்னத்தைத் தொட்டது. மின்னல் வேகத்தில் அவரும் சற்று பின்னடைந்து தப்பித்துக் கொண்டார். வீருசாமியைக் கான்ஸ்டேபிள் கெட்டியாய் பிடித்து பின்னுக்கிழுத்தான், இன்ஸ்பெக்டர் முனுமுனுத்தார் வீருசாமியும் விடவில்லை. அவரை அந்தக் கும்பலுக்கு முன், ஏகதேசமாய் வைதான் பேசாத பேசப்படாத வார்த்தைகளை சரமாரியாய் பிரயோகித்தான், குழந்தையின் உருவம் முன்னேதோன்ற அதன் கதியை நினைக்க, அவனையும் மீறி ஆவேசங்கொண்டு, தனக்கு என்ன நேரும் என்பதை மறந்துதான் பேசினான். முடிவு? அவனை இன்ஸ்பெக்டர் இழுத்துக் கொண்டு போய் லாக்கப்பில் தள்ளினார்.

கேஸ் தாக்கல் செய்யப்பட்டது சார்ஜ் ஷீட்டும் (குற்றப் பத்திரிகை) வாசிக்கப்பட்டது அவன் ஒன்றுக்குமே பதில் சொல்லவில்லை வாய்மூடி மௌனியானான் (இப்போது) உள்ள ஆசிரமத்துக்குத் தக்கபடி தானே இருக்க வேண்டும் ) அவன் மனைவிக்கு விஷயம் தெரிந்தது அலறினாள். ஓடினாள் கணவனைக்காண ஆசை கொண்டாள். அருகிலுள்ள ஒரு வக்கீலை, அண்டினாள். தனதும், தன் குழந்தையின் பரிதாப நிலையையும் அவருக்கு உரைத்தாள். அவனைக் காப்பாற்றுமாறும், கைம்மாறு செய்வதாயும், அவனை இனி நல்ல வழியில் திருப்புவதாகவும் உறுதி கூறினாள்.



அந்த வக்கீல் மிகவும்யோக்கியமும் இளகிய மனமுமுடையவர்.சில மாதங்களுக்கு முன்தான் அவரது குழந்தை டைபாயிடில் இறந்தது. ஆகவே, அக்குழந்தையிடம் அனுதாபத்தின்பேரில் உதவிக்கு இணங்கினார் மாஜிஸ்டிரேட்டிடம் தனக்கும், வீருசாமியின் மனைவிக்கும் பேட்டியளிக்கும்படி வேண்டி வெற்றிபெற்றார். மறுநாள் அவளையும் கூட்டிக்கொண்டு ஜெயிலில் வீருசாமியைக் கண்டு பேசி, அவனிடம் சில ரகசியங்களைக் கூறி விட்டுத் திரும்பினார்.

மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் கேஸ் விசாரணைக்கு வந்தது போலீஸ் தரப்பில் பலர் சாக்ஷியங்கள் கூறினர். டிபன்ஸ் தரப்பில் வீருசாமியின் வக்கீல் எழுந்து நிதானமாக, "அவைகள் யாவும் பொய். என் கக்ஷிக்காரர் அவரைத் தூஷணையாக வையவுமில்லை; அதற்கு அவர் சக்தியற்றவர் அவர் அங்கிருந்தது வாஸ்தவம். கேடி வீருசாமி வேறு, இந்த வீருசாமிவேறு. உருவம் சற்று ஒன்றாயிருப்பதால், தவறுதலாக இவர்பேரில் கேஸ் கொண்டுவரப்பட்டது, இவருக்கும் மணிபர்ஸ் கெட்டுப்போனதற்கும் சம்பந்தமே கிடையாது" என ஓங்கி அடித்துப் பேசினார். கோர்ட்டில் யாவரும் திக்பிரமையும். ஆச்சரியமும் அடைந்தனர். இதென்னப்பா! இவர் ஒரே போடாகப் போடுகிறார். கேஸ் எப்படி முடிவு அடையப்போகிறதோ பார்ப்போமென வாளாவிருந்தனர். சப் இன்ஸ்பெக்டரே சற்று வெலவெலத்துப் போனார்.

மாஜிஸ்டிரேட். வக்கீலை நோக்கி, "நீர் இதை எப்படி ருசுப்படுத்த முடியும்? குற்றப்பத்திரிகை வாசிக்கும் போதுகூட கைதி வாயைத் திறக்காமல் ஏன் இருந்தார்" என்று கேட்டார். வக்கீல் சாந்தமாக, "அதனால்தான் அவர் நிரபராதி என்பது என்வாதம். உண்மை அறிய விரும்பினால் கோர்ட்டாரே அவரை வினவலாம்" என்றார்.

கைதியை, "நீர் குற்றம் செய்தீரா? இன்ஸ்பெக்டரைக் கண்டபடி வைததுண்டா?" என்ற கேள்வி கேட்கப்பட்டது. கைதி சும்மா இருந்தார். வக்கீல் அவரைப் பார்த்து, "வீருசாமி! சும்மா பயப்படாமல் கூச்சத்தை விட்டு ஐயாவுக்கு பதில் சொல்" என்றதன் பேரில், அவன் பேசலுற்றான் "வ-வ-வ-வ-வ-வல்-வல் ... இல்-இல்-இல்-இல்-...லை, ந-நா-நா, நா...ன்" மாஜிஸ்திரேட் முழித்தார் வக்கீலிடம், "என்ன சமாசாரம், 'இவன் ஏன் இப்படிப் பேசுகிறான்' என்றார் வக்கீல், "இவன் ரொம்பவும் திக்குவாயன்; வேகமாய் பேச வராது எப்படி இவன் அவரை சாதாரணமாய் வைதிருக்க முடியும்? ஆதலால் கேஸ் ஜோடனை இவனை விடுதலை செய்யவேண்டும்" என்றார்.

மாஜிஸ்திரேட்டுக்கு விஷயம் விளங்கிவிட்டது. முகம் மாறுதலடைந்தது. போலீஸ் ஊழல்களைக் கண்டித்துவிட்டு, ஒரு எச்சரிக்கையும் செய்தார். கேஸ் தள்ளுபடி. வீருசாமி விடுதலையடைந்தான்.

வீருசாமி கோர்ட்டைவிட்டு வெளியே வந்தான். இன்ஸ்பெக்டர் அங்கு சைகிளை வைத்துக்கொண்டு, புறப்பட இருந்தார். அவரை நோக்கி வீருசாமி ஒரு வெற்றிப் பார்வை பார்த்து, மீசையை முறுக்கினான். புன்சிரிப்பொன்று கிளம்பிற்று. அதைக் காண இன்ஸ்பெக்டர் வெட்கித்தலை குனிந்தார். ஆனால் முகத்தில் ஆத்திரம் பிரதிபலித்தது. என்ன செய்வது?

வீருசாமி வக்கீலின் காலில் விழுந்து கும்பிட்டான். 'என்னையும், என் குழந்தையையும், குடும்பத்தையும் காப்பாற்றிய கருணைக் கடலே! உங்கள் சொல்படி இனி ஒழுங்காக இருக்கிறேன். தக்க யோசனை சொல்லிக் கொடுத்து, நானும் அதன்படி ஜாக்கிரதையாய் நடந்ததால் தப்பினேன். திக்குவாய் தக்க பலனளித்தது" என்று சொல்லிப் புகழ்ந்தான்.

தற்போது வீருசாமி வக்கீல் ஐயா பங்களாவிலேயே தோட்ட வேலை செய்துகொண்டு, நாணயமாயும், ஒழுங்காயும் இருந்து வருவதுடன், முதியோர் கல்வித் திட்டப் பாடசாலையில் எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ளுகிறான் அவன் மனைவி வக்கீல் வீட்டில் வேலைசெய்து வருகிறாள். பையன் வளர்ந்து வாலிபப் பருவம் அடைந்து, வக்கீலின் சிபார்சில் ஸ்காலர்ஷிப்புடன் படித்து வருகிறான். காங்கிரஸ் அரசாட்சியில் மதுவும் ஒழிந்தது சிறு சேமிப்புத் திட்டம் அமுலுக்கு வந்தது, பணம் சேர்ப்பதில் வீருசாமி பங்கு கொண்டான். அவனது சுக சௌக்கியத்துக்குக் கேட்பானேன்? பூர்வாசிரமத்தில் 'சு. ம.'வாக இருந்த (சுத்த மடையன்) வீருசாமி' 'அ. ம., ஆசிரமத்துக்கு மாறி அறிவுள்ள மனிதனானான். அவனிடம் சாதிமத பேதத்தைப்பற்றிப் பேசிவிடாதீர்கள். தடியை எடுத்துத் தண்டப்பிரயோகம் செய்துவிடுவான் வக்கீலையாவது உதாரணம் காட்டி.





டில்லி சர்வகலாசாலை உப அத்யக்ஷகர் பதவியிலிருந்து விலகும் ஸர் மாரிஸ்குவயருக்கு சென்ற 16-ந் தேதி நடந்த விசேஷப் பட்டமளிப்பு விழாவில் ஜனாதிபதி டாக்டர் ராஜன் பாபு 'டாக்டர் ஆப் லெட்டர்ஸ்' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கினார். ஸர் மாரிஸ்குவயர் பட்டத்தின் சின்னத்தை ஏற்கும் காட்சி



தமிழ் வருஷப்பிறப்பை முன்னிட்டு பார்லிமெண்டைச் சேர்ந்த சென்னை மாகாண மெம்பர்கள் ஒரு உபசாரம் நடத்தினர். இதில் சர்தார் படேலும், அன்னாரின் புதல்வி மணிபென் படேலும் கலந்துகொண்டனர். படத்தில் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், ஸ்ரீமதி அம்முஸ்வாமிநாதன் முதலியோரைக் காணலாம்.



# சுயம்வரம்

'சுரன்'

'நாளைக்கு லீவுதானே; வீட்டிலேயே இருடா, ராஜு' எங்கேயும் கம்பி நீட்டி விடாதே! நான் சொன்னேனே, அந்தக் காரியமாக நாளைக்குப் போய் வந்துவிட்வேணும்' என்றான் ஸாமி.

'சரிதான்; ஏதோ கோட்டையைப் பிடித்தாக வேண்டும் நாளைக்கு என்று தான் திட்டம் போடுகிறாயோ என்று பார்த்தேன் 'பூ! இந்த விஷயம் தானா?' என்று அலுத்துக்கொண்டே சொன்னான் ராஜு.

'கோட்டையைப் பிடித்தால்தான் ஆயிற்றாக்கும்; உனக்குக் கலியாணம் என்றால் கசக்கிறதோ? போடா, போலிச் சாமியார்! ஆள் உள்ளுக்குள் ளிருப்பாயே. உன்னைத் தெரியாதா எனக்கு?' என்று சிறிது விடுவிடுப் பாகவே பேசினான் ஸாமி

அவனுடைய வேகத்தைப் பார்த்து விட்டுச் சிறிது நகைத்துக்கொண்டே, 'அட எழவே, எனக்கா கல்யாணம் என்று சொன்னாலும் ஒருவன்! அந்த மாதிரிதான் சொல்லவேண்டும் என்று தோன்றுகிறது, நீ எனக்காகக் கலியாணத்திற்குப் பாடுபடுவதைப் பார்க்கும்போது! என்னடா அப்பா. அவ்வளவு சிரத்தை உனக்கு?' என்று கேட்டான் ராஜு

'ஆமாம்; உன் கலியாணத்தை முடித்து வைத்தால் முழுசாக எனக்கு இரண்டாயிரம் ரூபாய் தரகுக் கூலி வருகிறதோ, இல்லையோ! அதனால் தான், அன்று முதல் படித்துப் படித்துச் சொல்கிறேன். நீ என்னடா வென்றால், என்னை மடக்கிக்கொண்டேயிருக்கிறாய் விளையாட்டு இருக்கவே இருக்கிறது, ராஜு. நாளைக்குச் சும்மா அங்கே போகிறாற்போல் போவோம்; நீ அந்தப் பெண்ணைப் பார். உனக்குப் பிடிக்கவில்லையென்றால் வேண்டாமே!'

'ஆஹா! தாராளமாய்ச் செய்வோம். ஆனாலும் ஸாமி, எனக்கு இன்னும் சந்தேகமாகவே இருக்கிறது. ஒரு பிரம்மச்சாரி ஒரு பெண்ணை அடிக்கடி சந்தித்து அளவளாவி விட்டு, மிகவும் கர்ம சிரத்தையோடு அந்தப்பெண்ணை தன் நண்பனுக்கு மணம் முடித்து வைக்க முயலுவதை நான் எங்கும் கண்டதில்லை ஒருவேளை நீ ஏதாவது சூழ்ச்சி செய்கிறாயோ? 'அந்தப் பெண்ணை நாமே கலியாணம் செய்து கொண்டு விடுவோம்' என்று உனக்குத் தோன்றவில்லையா? எட்டிக் காயாய்க் கசக்கிறதோ?'

'ஒரு நண்பனுக்காக இந்தக் காரியம் செய்வது மிகவும் பெரிய விஷயமா? நீ அப்படிச் செய்யத் துணியமாட்டாய் போலிருக்கிறது. என்னவோ அந்தப் பெண்ணைப் பார்த்த கணமே அவன் உனக்குத்தான் தகுந்தவள் என்று எனக்குப் பட்டுவிட்டது...மேலும்—'

'மேலும் என்ன?'

'என்னை அவ்வளவாக அவள் விரும்பமாட்டாள் என்று தோன்றுகிறது!'

ஓ! அப்படிச்சொல் விஷயத்தை! 'சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்' என்கிற ரகத்தைச் சேர்ந்துவிட்டது போலும் விஷயம்! இப்பொழுதுதான் புரிகிறது. முடிந்தவரையில் கரணம் போட்டுப் பார்த்துவிட்டாய் போலிருக்கிறது! அவள் ஒன்றும் அசைந்து கொடுக்கவில்லையாக்கும்! 'வேண்டாம் பூசனி!' என்று என்னிடம் கொண்டு வந்து தள்ளுகிறாயோ!'

'நான்ஸென்ஸ்! கழுதைக்கு உபதேசம் செய்த மாதிரிதான் ஆயிற்று! உன் வியாக்கியானம் போதும், உனக்கு இஷ்டமா இல்லையா? சொல் ஒரே வார்த்தையில்!'

'ஏ. அப்பா! ருத்திர தாண்டவம் தானோ? சரி; ஆகட்டும்! தங்கள் சித்தம், என் பாக்கியம்!' என்று சொல்லிச் சிரித்தான் ராஜு. ஸாமியின் கடுகு வெடித்த முகத்திலும் ஒரு புன்னகை தலை காட்டியது,

அந்த முடிவு பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காகச் 'சட்' டென்று நகர்ந்துவிட்டான் ஸாமீ. அவன் கொஞ்சதூரம் போனதும், 'சாமீ!' 'என்று குரல்கேட்டது. திரும்பிப் பார்த்தான், ராஜு திரும்பிவந்து வந்துகொண்டிருந்தான். ஸாமியின் அருகில் வந்து நின்றுகொண்டு, 'ஒரு பெரிய சந்தேகம் வந்துவிட்டதப்பா, ஸாமி!' என்று குழைந்துகொண்டே சொன்னான்.

'என்ன?'

'கதைகளிலே வருகிறமாதிரி, அங்கே போனதும் அந்தப்பெண் 'ஓ! எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது! என்று சொன்னால்?'

'சீ! அதிகப்பிரசங்கி! அதெல்லாம் விசாரிக்காமல் வருவேனாடா? அவளே சொன்னாள்; போறுமா?'

'ரைட்டோ?' என்று சொல்லிக் கொண்டே திரும்பி நடந்தான் ராஜு.

* * *

வனஜாவை ஒரு பத்து நாட்களாகத் தொடர்ந்து சந்தித்து வந்தான் ஸாமி. அவளை முதன்முதல் ஒரு விபரீதமான சூழ்நிலையில் சந்தித்தான் அவன் மாம்பலம் பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டிருந்தான் சாமி இன்னும் நாலைந்து பேரும் பஸ்ஸுக்கு நின்றுகொண்டிருந்தனர் வனஜாவும் நின்றுகொண்டிருந்தாள்.

காய்ந்துகொண்டிருந்த வானம் திடீரென்று கறுத்துக் குமுறியது; மழை 'சோ'வென்று கொட்டவாரம்பித்தது சாதாரணமாக பத்துப்பேர் அடர்ந்து நிற்கக்கூடிய பஸ் ஸ்டாண்டில் பரபரவென்று ஜனக்கும்பல் பெருகியது. எதிரேயிருந்த பள்ளிக்கூடமும் அந்த சமயம்தான் விடப்பட்டதால், பள்ளி மாணவர்களின் கும்பலும் இந்த இடத்தில்தான் ஐக்கியமாகத் தொடங்கியது.

மயிலாப்பூர் போகும் பஸ் வந்தது. ஸாமி அந்த பஸ்ஸுக்குள் பாய்ந்து ஏறினான் வனஜாவும் ஏறிக்கொண்டாள் ஸாமி மயிலாப்பூருக்கு டிக்கட் வாங்கியதைக் கவனித்த பிறகு, வனஜா சற்றும் எதிர்பாராத முறையில் ஸாமியின் காதுகளில் மட்டுமே படும்படிக் கூறினாள். 'நீங்களும் மயிலாப்பூர் போகிறவர் என்பதை

யூகித்துத்தான் நானும் துணிந்து இந்த பஸ்ஸில் ஏறினேன்!' என்றாள்

ஸாமிக்கு மயிர்க்கூச்சிட்டது வனஜாவின் போக்கு அவனை ஒரு கேள்விக் குறியாகவே மாற்றிவிட்டிருந்தது. ஆயினும் சமாளித்துக்கொண்டு 'என்ன...ஏன்?' என்று ஏதோ குழறினான், பேச வேண்டுமென்று நினைத்தவன்.

'உங்கள் குடைக்காகத்தான்!' என்று 'பளிச்'சென்று அவள் கூறியதும் அவன் திகைப்பில் பாதியளவு நீங்கியது.

'அதற்கென்ன, படித்த பெண்—விகல்ப எண்ணமில்லாமல் சாதாரணமாகப் பழகுகிறாள்' என்று தன் சந்தேகங்களுக்கும் யூகங்களுக்கும் சமாதானம் கூறிக்கொண்டான் ஸாமி.

மயிலாப்பூர் வந்த பின்னர், அவளைக் குடை உதவியளித்து அவள் வீடு வரை கொண்டுவிட்டான் ஸாமி மயிலாப்பூர் பஸ் ஸ்டாண்டிலிருந்து அவள் வீடுபோய்ச் சோவதற்குள்ளாக அவள் தன்னைப்பற்றிய சில விவரங்களைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டாள் இத்தனைக்கும் ஸாமி ஒரு கேள்வியும் வாய் திறந்து அவளைக் கேட்கவில்லை. அவளாகவே மடைதிறந்தாற்போல் ஆரம்பித்துவிட்டாள்.

அவள் ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினியாயிருப்பவள்; இதுகாறும் அவர்கள் குடும்பம் கும்பகோணத்திலிருந்தது சென்னைக்கு வந்து பத்து நாட்கள்தான் ஆயிற்று

அன்றைக்குத் தெரிந்துகொண்ட விவரம் இதுதான். அதற்குப் பிறகும் அடிக்கடி ஸாமி அவளை மயிலாப்பூர் பஸ் ஸ்டாண்டில் சந்தித்திருக்கிறான். அவனிடம் மிகவும் மரியாதையாக நடந்துகொண்டாள் வனஜா.

ஸாமிக்கு வனஜாவைக் கண்டதும் சாதாரணமாக எழக்கூடிய உணர்வுகள் ஒன்றும் தோன்றவில்லை திடீரென்று காதல் விவகாரத்தில் ஈடுபட்டு, அவளிடம் முறைமைக்கு மாறாக நடந்துகொண்டு, தன்மேல் அவள் கொண்டுள்ள மரியாதையைக் கெடுத்துக் கொள்ளவேண்டாம் என்றுதான் எண்ணினான். தவிர, மனித இயல்பில் ஒரு பெண் வலிய வந்து ஒரு ஆண்பிள்ளையிடம் அறிமுகம் செய்துகொண்டால், அவளை அவனோ அல்லது அவனை அவளோ பரஸ்பரம் காதலித்துக் கொள்ளலாம் என்று உரிமை கொண்டாட முடியுமா என்று எண்ணினான். இந்த ஒரே காரணம் பற்றித்தான் வனஜாவைத் தன் நண்பன் ராஜுவுக்கு வேண்டுமானால் வரனாகப் பார்க்கலாம் என்று தீர்மானித்தான் ஆனால், வனஜாவுக்குக் கலியாணம் ஆகிவிட்டிருந்தால்?

இந்தச் சந்தேகமும் ஒருநாள் நிவர்த்தியாகிவிட்டது. வனஜாவின் வாய்மொழி மூலமாகவே, அன்று அவர்களுக்குள்ளாக ஏதோ உலக ரீதியான பேச்சுத் தொடங்கி, கடைசியில் மக்களின் வாழ்க்கை கஷ்ட சாத்தியமாக இருப்பதைப் பற்றித் திரும்பியது.

அன்றுபோலவே இன்றும் வனஜா போட்டுடைத்தாற்போல 'வெடுக்'கென்று சொன்னாள்.

'நல்ல வேளையாகக் குடித்தனபாரம் இல்லை, ஸார் எனக்கு! அது வேறு கலியாணம் என்று பண்ணிக்கொண்டு, என் வாழ்க்கையை மாற்றிக்கொண்டிருந்தேனானால். இன்றைக்கு ஏதோ சிறிது நிம்மதியாக இருக்கிறேனே, அது முடியுமோ முடியாதோ. சந்தேகம்தான்!' என்று கூச்ச உணர்ச்சியோ, பதட்டமோ இல்லாமல் நிதானமாகச் சொன்னாள் அவள் அப்போது ராஜுவைப்பற்றிய ஞாபகம் எழுந்தது ஸாமியின் மனத்தில் ஒரு நிமிஷ நேரம் யோசித்துவிட்டு,.. 'ஏன், தங்கள் வாழ்க்கை மாறவேண்டிய அவசியம் ஏதாவது ஏற்பட்டால், தாங்கள் மறுப்பீர்களா?' என்று கேட்டான் ஸாமி.

'அதாவது, எனக்குக் கலியாணம் செய்துகொள்ளும் உத்தேசம் இனிமேல் ஏற்படலாமா என்பதுதானே உங்கள் கேள்வியின் அர்த்தம்?' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் வனஜா.

தைரியமாகவும் வெகு சாதாரணமாகவும் தன்னைப்பற்றிய இந்தப் பேச்சுக்களைப் பேசிய வனஜாவை மிகவும் பிடித்திருந்தது அவனுக்கு ஆனாலும் அவளை நினைக்கும்போதெல்லாம் ராஜுவையும் சேர்த்துத்தான் நினைப்பான் அவன். இந்த ரீதியில் ஏற்பட்ட எண்ணம் வலுப்பட்டு, வனஜாவை ராஜுவுக்கே எப்படியாவது ஏற்பாடு செய்துவிட வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டான் அந்தத் தீர்மானத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு வனஜா கேட்ட கேள்விக்கு, 'ஆம், வாழ்க்கை அப்போதுதான் பூரணத்வம் பெறும் என்று நான் நினைக்கிறேன்' என்று பதில் சொன்னான்.

'ஆனாலும் அதைப் பற்றி நான் ஒரு முடிவுக்கும் இன்றுவரை வரவில்லை. நாளை எப்படியோ? அதையும் சொல்ல முடியாது!' என்று சொன்னாள்.

வேதாந்தத்திற்கும் தர்க்கத்திற்கும் தயாராய் இல்லை ஸாமி அத்துடன் அன்று அதற்கு ஒரு முடிவு ஏற்படும் வகையில் பேச்சைத் திருப்பினான். இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் ராஜுவிடம் மேற்கண்ட வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டான் ஸாமி.

* * * *

முதல் நாள் குறிப்பிட்டபடி மறுநாள் பூராவும் ராஜு ஸாமியைச் சந்திக்கவேயில்லை வெகு நேரம் வரை எதிர்பார்த்துக்கிடந்தான் ஸாமி அவன் வராததால் அன்றைய வேலைகள் அவனுக்குத் தடைபட்டுத்தான் போயின ராஜுவின்மேல் கடுங்கோபம் கொண்டிருந்தான்

'அடுத்த தடவை அவனாகச் சந்திக்கும்போது சந்திக்கட்டும் நாம் அவனைத் தேடிக்கொண்டு போகவேண்டாம்' என்று தீர்மானம் செய்துகொண்டான் ஸாமி.

அன்று மாலையே 'வேர்க்க விறுவிறுக்க' ஓடி வந்தான் ராஜு. ஸாமி அப்போதுதான் காரியாலயத்தினின்றும் வந்திருந்தான்.

"என்னை மன்னித்துவிடடா ஸாமி! அன்று எதிர்பாராத விதமாக என் வீட்டிற்கு ஒரு விருந்தினர் வந்திருந்தார். யாரோ எனக்கு ஒன்றுவிட்ட மாமா முறையாம் அவர்களைப் போய்ப் பார்த்துவிட்டுவரச்சொல்லி, என் பிராணனை எடுத்து விட்டாள் என் தாயார். போகும்படி நேர்ந்துவிட்டது. அதுதான் வர முடியவில்லை அடுத்த ஞாயிற்றுக்கிழமை போகலாம்; கட்டாயம் போகலாம்!" என்று மூச்சைப் பிடித்துக்கொண்டு பேசினான்.

அலட்சியமாக ஒரு முறை 'சூள்' கொட்டிவிட்டுச் சொன்னான் ஸாமி.

"எனக்கென்னடா வந்தது? கரும்பு தின்னக் கூலி கேட்கிறாய் நீ. பெண் இருக்கிறது: பிடிக்கிறதா பார், கல்யாணம் முடிவு பண்ணுவோம் என்றால் என்னவோ நொண்டிச் சரக்கு சொல்லிக்கொண்டு வந்து விட்டாய்!" என்று சொல்லி முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டான் ஸாமி

"இல்லை; இல்லை அடுத்த ஞாயிற்றுக்கிழமை கட்டாயம் போகலாம்... ஸாமி, இன்னொரு சந்தோஷ சமாசாரம்! நீ எனக்குச் செய்யும் இந்த உபகாரத்திற்கு நானும் கைம்மாறு செய்துவிடும்வகையில் ஒரு மகத்தான காரியம் செய்யப் போகிறேன்!" என்றான் ராஜு.



"என்னடா, அப்பா கைம்மாறு?"

"உனக்கும் ஒரு பெண் பார்த்து வைத்திருக்கிறேன்! பெண் வேறு யாருமில்லை அந்த ஒன்றுவிட்ட மாமாவின் பெண்தான்!"

"மாமாவின் பெண் என்றால் திவ்வியமாகக் கலியாணத்தை உனக்கே முடித்துக் கொள்ளக் கூடாதோடா, அசடே!' என்றான் ஸாமி.

"வா! வந்தாயா வழிக்கு! எனக்கு இப்போது பார்த்துவைத்திருக்கிறாயே அந்தப் பெண்ணை அப்படியே திவ்வியமாக நீ கலியாணம் செய்துகொண்டால் என்னவாம்? சொல்லேன்!" என்று வெற்றி முழக்கமே செய்தான்

"சரி; கெட்டிக்காரன்!, என்னை மடக்கியே விட்டாய்! நான் தோற்றுப் போனேன் போனால் போகட்டும் பெண் யார்? ஒரு வேளை நான் பார்த்து வைத்திருக்கிறேனே இதே பெண்ணைத்தான் நீயும் பார்த்திருக்கிறாயோ, என்னவோ! அவள்தான் உங்கள்மாமா பெண்ணோஎன்னவோ! அப்படியிருந்தால் வேடிக்கையாயிருக்கும்!", என்றான் ஸாமி.

"சீச்சீ! அதெல்லாம் இல்லை; நான் சொல்லும் பெண் மாம்பலத்திலல்லவா இருக்கிறாள்?"

"அவள் பெயரென்ன? சிகப்பா? கறுப்பா?"

"அவள் பெயர் ஸரோஜா; கறுப்பா சிகப்பா என்று திடமாகச் சொல்வதற்கு அசக்தனாயிருக்கிறேன்..."

"ஏன்?"

அவள் போட்டுக் கொண்டிருந்த பௌடரைக் கணக்கிட்டால் அவளுக்குச் சரி நிகர் சபனாக இந்தப் பூவுலகில் சிவந்த பெண்கள் இருப்பார்கள் என்று தோன்றவில்லை பௌடரன்றிச் சுயநிறத்தை நான் கண்டிலேன்!'

'சரி; சரி; நீ வேறு யாரையோ பார்த்துவிட்டு வந்து உளறுகிறாய்! உனக்கு நான் பார்த்த பெண் மாம்பலத்தில் இல்லை; மயிலாப்பூரிலேயே இருக்கிறாள்; தவிர, அவள் பெயர் வனஜா! உன் மாமா பெண் ஏதாவது உத்தியோகம் பார்க்கிறாளா?'

'பார்க்கிறாள்! சாப்பாடு, டிரஸ் செய்துகொள்ளுதல்—இத்தியாதி; நேரம் போதவில்லையாம்!'

'சரி; போதும் உன் ஹாஸ்யம் ஞாயிற்றுக்கிழமையென்ன,; நாளை மாலை தயாராக இருக்கிறாயா? நான் உன் வீட்டிற்கு வந்து, உன்னை அழைத்துப் போகிறேன்' என்று விஷயத்திற்கு வந்தான் ஸாமி.

ஆஹா, வருகிறேன்!...அதிருக்கட்டும், ஸாமி! பாதிக் கலியாணம் நிச்சயமான கதையைப்போல நீ கிடந்து குதிக்கிறாயே, அந்தப் பெண் என்னைக் கலியாணம் செய்துகொள்ளச் சம்மதிக்காவிட்டால்?'

'அதைப்பற்றி நீ ஏண்டா கவலைப்படுகிறாய்? 'இவனைக் கலியாணம் பண்ணிக்கொள்கிறாயா?' என்று உன்னைக் கொண்டு நிறுத்தி, அவளிடம் கேட்கப் போகிறேனா என்ன? ஏதோ ஒரு ஆசை பார்க்கலாம் என்கிற நம்பிக்கைதான்! என்னிடம் அவள் வைத்துள்ள மரியாதைக்கும் மதிப்புக்கும் நான் சொன்னால் இணங்குவாள் என்று நினைக்கிறேன்' என்றான் ஸாமி.

* * *

மறுநாள் ஸாமி ராஜுவையும் கூட்டிக்கொண்டு வனஜாவின் வீட்டுக்குச் சென்றான். ஆனால், என்ன ஏமாற்றம்! அங்கே வனஜா இல்லையென்ற தகவல் கிடைத்தது.

இருவரும் அடைந்த ஏமாற்றத்தில் ஒருவருடன் ஒருவர் இரண்டு நிமிஷ காலம் பேசவேயில்லை.

பிறகு ராஜு கேட்டான்: 'ஏண்டா இந்த வீடுதான் என்ற ஞாபகமா? அல்லது இந்த வீடேதானா?

அவன் பரிகசிப்பதைக் கண்டதும் ஸாமிக்கு ரோஷம் பிறந்தது; 'சீ! அதிகப்பிரசங்கி! அன்றைக்கு ஒரு நாள்தான் வந்தேனானாலும் இந்த வீட்டில்தானடா அவளைக் கொண்டு வந்து விட்டேன்' என்று அழுத்தமாகக் கூறினான். இன்னொரு நாள் வரலாம் என்ற தீர்மானத்துடன் இருவரும் அவரவர் வீடு திரும்பினர்.

அதன் பிறகு இரண்டு நாட்கள் கழித்து ஒருதினம் மாலை காரியாலயம் விட்ட பிறகு நேராக ஸாமியின் வீட்டுக்கு விரைந்து வந்தான் ராஜு. அன்று மாம்பலத்திற்குத் தன் மாமாவின் வீட்டிற்கு போகப்போவதாயும், ஸாமியும் தன்னுடன் வரவேண்டுமென்றும் பிடிவாதம் பிடித்தான் ராஜு.

வெகுநேரம் ஏதோ மறுப்புச் சொல்லி வாதாடிய பிறகு ராஜுவுடன் கிளம்பினான் ஸாமி இருவரும் ஒரு குறிப்பிட்ட வீட்டையடைந்தனர் வீட்டு வேலைக்காரி கதவைத் திறந்தாள் ராஜுவும் ஸாமியும் உள்ளே சென்றமர்ந்தனர்.

அடுத்த நிமிஷம் ஒரு யுவதி ஒரு அறைக்குள்ளிருந்து வெளிப்பட்டு, அவர்களுக்கெதிரே கிடந்த ஸோபாவில் வந்து உட்கார்ந்துகொண்டாள். ஸாமியின் கண்கள் அகல விரிந்துகொண்டே போயின வாயடைத்த ஊமைபோல் இருந்தான் காரணம் அவர்கள் முன்னால் வந்து உட்கார்ந்துகொண்ட யுவதி வனஜா என்பதுதான்!

"ஸரோஜா, இவர்தான் என் நண்பர் ஸாமி!' என்று அறிமுகப்படுத்தி வைத்தான் ராஜு.

"மிஸ்டர் ராஜு, இனிமேல் என் பெயர் ஸரோஜா இல்லை; வனஜா! உங்கள் நண்பரையும் நான் முன்பே அறிவேன்! அவர் அன்றைக்கு அந்தக் கொட்டு மழையில் எனக்குக் குடை அளித்து உதவியதை நான் என்றென்றும் மறக்க முடியாது!' என்றாள், தன் இதழ்களில் புன்னகை தவழ. 'என் பெயர் வனஜா' என்றதும் ஆச்சரியத்தால் ராஜுவின் கண்களும் இப்போது அகல விரிந்தன.

"மயிலாப்பூரில்தானே தங்கள் வீடு இருக்கிறது?" என்று கேட்டான் ஸாமி.

"மயிலாப்பூரிலும் வீடு இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்களேன்; இதுவும் என் வீடுதான்" என்று லாகவமாக மொழிந்தாள் வனஜா.

நண்பர்கள் இருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

"இருங்கள்; உள்ளேபோய் காபி கொண்டுவரச் செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு, எழுந்து சென்றாள் வனஜா.

அவள் அப்பால் சென்றபிறகு, நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

'இதென்னடா சூழ்ச்சி! கடைசியில் உங்கள் மாமா பெண்ணாகவே இருக்கிறாளே, இவள்! நான் அப்போதே சொன்னேனே!' என்றான் ஸாமி.

'என் மாமா பெண்ணாவது! உன்னிடம் 'கப்ஸா'தான் விட்டேனடா ஸாமி! எனக்காவது மாமாவாவது! என் நண்பனின் சகோதரி இவள். எனக்காக நீ சிரமப்பட்டுப் பெண்

பார்க்கிருயே என்று நானும் இவளை உனக்காகப் பாா்த்தேன். உன்னிடம் விளையாட்டுக்காக என் மாமா பெண் என்றேன்! ஆனல் இவள் என்னையே ஏமாற்றியிருக்கிருளே, தன் பெயர் ஸரோஜா என்று!' என்று அதிசயித்துக்கொண்டான் ராஜு.

'நீ என்னைப்பற்றி ஏதாவது உளறியிருப்பாய்; சரி; இவர்கள், நம்மைச் சுற்றவாரம்பித்து விட்டார்கள் என்று தீர்மானித்துக்கொண்டு நம்மை ஏமாற்றவாரம்பித்துவிட்டாள்! ரொம்பத் துணிச்சல் அப்பா!' என்ருன் ஸாமி.

இடையில் ஏதோ தீவிரமான யோசனையில் ஆழ்ந்துவிட்ட ராஜு, திடீரென்று மனத்தில் ஏதோ தோன்றிய முகபாவத்துடன் ஸாமியின் காதுக்கருகில் முகத்தைக் கொண்டு போய், 'ஏண்டா, இவளுக்கு மயிலாப்பூரில் வீடாவது; மாம்பலத்தில் வேலையாவது! ஒன்றும் புரியவில்லையே? உனக்கு ஏதாவது தோன்றுகிறதா?' என்று கேட்டான்.

'தோன்றுகிறது! இந்த உலகமே தலைகீழாகச் சுற்றுவதுபோலத் தோன்றுகிறது!' என்ருன் ஸாமி.

அடுத்த நிஷம் அந்த ஹாலுக்குள் நுழைந்தாள் வனஜா. அவள் பின்னுல் சமையற்காரன் ஒரு தட்டில் டிபனும் காபியும் கொண்டு வந்தான்.

நண்பர்களும் வனஜாவும் சேர்ந்து டிபன் சாப்பிட்டுக்கொண்டிருந்த போது, திடீரென்று வாசற்கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது; அடுத்த நிமிஷம் கண்நிறையக்காணும்படி நாகரிகம் வாய்ந்த ஒரு வாலிபன் அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் வனஜாவின் முகம் மலர்ந்தது.

'வாருங்கள்!' என்று அவனை வரவேற்ருள் வனஜா. அவன் வந்து அமர்ந்த பிறகு, அவனுக்கு ராஜுவையும் ஸாமியையும் அறிமுகம் செய்து வைத்துவிட்டு, அவர்களிருவரையும் பார்த்து, 'இவர்தான் மிஸ்டர் மஹாலிங்கம்; அவரைத்தான் நான் கல்யாணம்... செய்து கொள்ளப் போகிறேன்' என்று சொல்லிவிட்டு, தலையைக் கவிழ்த்துக்கொண்டாள்

'அன்றைக்குத் துள்ளின துணிச்சலும் தைரியமும் எங்கே போய்விட்டன?' என்று எண்ணினுன் ஸாமி.

மஹாலிங்கம் அவர்களைப் பார்த்துப் புன்னகை புரிந்தான்

'இவர் மயிலாப்பூரில்தான் இருக்கிருர். இப்போது புரிகிறதா, மிஸ்டர் ஸாமி, நான், 'அதுவும் என் வீடுதான் என்று வைத்துக்கொள்ளுங்களேன்' என்று சொன்னதன் அர்த்தம்?' என்று குழைந்த குரலுடன் கேட்டான்.

ஸாமி மௌனச் சாமியாய் இருந்தான் ராஜுவும் அவன் நிலையைப் பூரணமாய் எய்தியிருந்தான்.


# ஜாதகம்! ★ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விவரம் :- 1 முதல் 3 உமது எதிர்காலகேள்விகட்கு ரூ.2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூபா 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூபா 3. ஒரு தசாவிற்கு புக்தி வாரியாக எழுத ரூ.12.

குறிப்பு :—வெளிநாடுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள் :—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

★

மானேஜர்,

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,

தெப்பக்குளம், P. O. (தென் இந்தியா)



# சிறந்த கூந்தல் உணவு



உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்க ளுபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர். இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள். எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது. எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனை. நீடித்த நறுமணம், தபால் சார்ஜுக்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Sole Agent : ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jamma Musjid P. O. Box 2085, Bombay 2.







## [சில்லரை விலைகள்]

(விற்பனை வரி தனியாக செலுத்தவேண்டும்)

சென்னை, ஏப்ரல் 24—

அன்ருட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசிப் போக்கைக் குடும்பத்திலுள்ளவர்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாகச் சென்னை நகரிலுள்ள நிலவரத்தைக் கீழே பிரசுரித்திருக்கிருேம். இவையெல்லாம் அவ்வப்போது மாறுதலுக்குட்படக்கூடியவை. எனவே இதில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போலவே சில பண்டங்கள் கிடைக்கலாம் அல்லது சற்று ஏறத்தாழவும் சில இடங்களில் விற்கப்படலாம். இருப்பினும் பொதுவாக விலைகளின் ஓட்டத்தை உணர்த்துகொள்ள இது பயன்படும். இப்புதிய பகுதி இனி பிரதி இதழிலும் இடம் பெறும்.

| | | ரூ | அ | பை. |
|---|---|---|---|---|
| உப்பு | 1-படி | 0 | 1 | 0 |
| துவரம் பருப்பு | 1-படி | 0 | 15 | 0 |
| உளுத்தம் பருப்பு | ,, | 1 | 2 | 0 |
| பைத்தம் பருப்பு | ,, | 1 | 8 | 0 |
| உளுந்து | ,, | 0 | 14 | 0 |
| கடலைப் பருப்பு | ,, | 0 | 10 | 0 |
| கடலை | ,, | 0 | 8 | 7 |
| எள்ளு | ,, | 1 | 4 | 0 |
| கடுகு | 1-வீசை | 1 | 14 | 0 |
| வெந்தியம் | ,, | 1 | 14 | 0 |
| மிளகு | ,, | 18 | 0 | 0 |
| மிளகாய்-ராமநாதபுரம் | ,, | 3 | 8 | 0 |
| தனியா | ,, | 1 | 12 | 0 |
| புளி [புதுசு] | ,, | 1 | 3 | 0 |
| [illegible]ரகம் | ,, | 4 | 12 | 0 |
| [illegible]வல்லம் | ,, | 1 | 2 | 0 |
| [illegible]டு சாக்கரை | ,, | 1 | 4 | 0 |
| [illegible]லகா சர்க்கரை | ,, | 1 | 4 | 6 |
| மஞ்சள் | ,, | 2 | 2 | 0 |
| குங்குமம் | ,, | 1 | 8 | 0 |
| பாதாம் | ,, | 3 | 8 | 0 |
| சீயக்காய் | ,, | 1 | 2 | 0 |
| சீயக்காய் பொடி | ,, | 1 | 12 | 0 |
| வாஷிங் சோடா | ,, | 0 | 9 | 0 |
| திராக்ஷை | ,, | 5 | 0 | 0 |
| மிந்திரிபருப்பு | ,, | 4 | 8 | 0 |
| களிப்பாக்கு | ,, | 5 | 6 | 0 |
| நெய் | ,, | 6 | 8 | 0 |
| நல்லெண்ணெய் | ,, | 8 | 0 | 0 |
| ஜவ்வரிசி | ,, | 1 | 14 | 0 |
| தேங்காய் எண்ணெய் | ,, | 3 | 8 | 0 |
| கடலெண்ணெய் | 1-வீசை | 2 | 8 | 0 |
| விளக்கெண்ணெய் பாட்டில் பெரிசு | | 2 | 0 | 0 |
| சிறியது | | 0 | 10 | 6 |
| காப்பிக்கொட்டை பீபரி 1 வீசை | | 5 | 9 | 0 |
| ,, 'A' ,, | ,, | 5 | 3 | 0 |
| ,, "R" பீபரி | ,, | 4 | 15 | 0 |

| | ரூ | அ | பை. |
|---|---|---|---|
| மைலோ (பெரியது) | 2 | 5 | 9 |
| கரி 1 மூட்டை (56 ப.) | 4 | 0 | 0 |
| காமதேனுவனஸ்பதி 10 பவுண்டு டின் | 11 | 2 | 6 |
| ,, 5 ,, | 5 | 13 | 3 |
| ,, 2 ,, | 2 | 6 | 0 |
| 'டால்டா' வனஸ்பதி 10 ப | 11 | 8 | 0 |
| ஷை 5 ப | 6 | 0 | 0 |
| கற்பூரம் 1-பலம் | 0 | 7 | 0 |
| சாம்பிராணி 1 பலம் | 0 | 6 | 6 |
| பெருங்காயம் ,, | 0 | 4 | 0 |
| எல் ஜி பெருங்காயம் 1 சேர் | 2 | 2 | 0 |
| ஷை ½ சேர் | 1 | 2 | 0 |
| தீப்பெட்டி 1 டஜன் | 0 | 8 | 3 |
| ஓவல்டின் | 3 | 8 | 0 |
| 'ரௌண்ட்ரீஸ் (R T.) கொக்கோ ½ ப | 1 | 7 | 0 |
| ஸன்லைட் சோப் பெரியது | 0 | 5 | 3 |
| ,, சிறியது | 0 | 3 | 0 |
| ஹமாம் சோப் | 0 | 6 | 0 |
| லைப்பாய் | 0 | 5 | 6 |
| டாம்கோ 501 பார் | 1 | 3 | 0 |
| லக்ஸ் | 0 | 6 | 0 |
| ரெக்ஸோனு | 0 | 7 | 0 |
| மார்கோ சோப்பு | 0 | 8 | 6 |
| மைசூர் 'ஸாண்டல்' சோப் | 0 | 9 | 3 |
| கேரளா ஸாண்டல் சோப்பு | 0 | 7 | 0 |
| மெடிகோ டாய்லெட் சோப் | 0 | 8 | 6 |
| காட்ரீஜ் சோப் நெ 1 | 0 | 11 | 0 |
| மேட்டூர் சந்தண ஸோப் 1 கட்டி | 0 | 8 | 6 |
| ரூப் [illegible]ய்லெட் ஸோப்—ஸ்டாண்டர்டு ஸைஸ் | 0 | 6 | 0 |
| ,, கெஸ்ட் ஸைஸ் | 0 | 2 | 0 |
| காவேரி ஸூபர் கார்பாலிக் (பெரிது) | 0 | 4 | 3 |
| ,, (சிறியது) | 0 | 2 | 3 |
| காவேரி வாஷிங் கேக் | 0 | 3 | 9 |
| காவேரி வாஷிங் க்யூப் | 0 | 3 | 0 |
| காவேரி பார் ஸோப் | 1 | 2 | 6 |
| 'டாம்கோ ஹேர் ஆயில் (சிறிய பாட்டில்) | 1 | 1 | 0 |
| ஷை (பெரிய பாட்டில்) | 2 | 10 | 0 |
| குங்குமப் பூ [1 பாட்டில்] | 1 | 4 | 0 |
| "பினைல்" பாட்டல் | 0 | 13 | 0 |
| குடிகூரா பவுடா 1 டின் | 2 | 3 | 0 |
| நீம் டூத் பேஸ்ட் | 0 | 15 | 0 |
| மாக்ளீன் பேஸ்ட் | 1 | 5 | 0 |
| பார்ஹான்ஸ் பேஸ்ட் (பெரியது) | 2 | 3 | 0 |
| ,, (சிறியது) | 1 | 5 | 0 |
| 7 ஓ 'க்ளாக்' க்ஷவர ப்ளேட் (10 கொண்ட பாக்கட்) | 0 | 15 | 0 |
| ஷை (5 கொண்ட பாக்கட்) | 0 | 7 | 6 |
| கோராடி (டஸ்ட்) 1-பவுன் | 2 | 5 | 6 |
| கோராடி ½ பவுன் | 0 | 9 | 6 |
| கோராடி ¼ பவுன் | 0 | 4 | 9 |




# உடல்நலப்பயிற்சி

..........ஹடயோகி லக்ஷ்மணசாண்டோ

## 6

உடற்பயிற்சி ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. அப்பயிற்சியில் பல வகைகளிருக்கின்றன. ஆயுதமில்லாது செய்யும் பயிற்சிகள் ஒருவகை. ஆயுதங்கொண்டு செய்யும் பயிற்சிகள் மற்றொரு வகை. இவைகள் இரண்டிலேயே இதர பிரிவுகளுமிருக்கின்றன. எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லிவிட்டாலும் பொதுப்படையாகப் பேசுமிடத்து அசையும் பயிற்சிகளென்றும், அசையாத பயிற்சிகளென்றும் எடுத்துக்கொண்டு இயம்புவோம். அசையாத பயிற்சிகளை ஆசனப் பயிற்சிகளென்று அழைப்போம்.

இரு வகைப் பயிற்சிகளும் இன்பந் தருவனவே. ஒன்று ஆரம்பக் கல்வி, மற்றொன்று வீரர்கள் கை விலையில்லா மாணிக்கம் ஜீரணக் குறைவு பெற்றவர்களையும், சீக்காளிகளையும் பார்லிக் கஞ்சியைப் பருகும்படி வைத்தியர்கள் விதிப்பார்கள். நடமாட்டத்தில் தடமாட்டங் கண்டவர்கள் கழி



படம் 1

படத்திற் காட்டியபடி கழியைக் கையில் வைத்துக்கொண்டு நின்று


யைக் கையில் ஊன்றிக்கொண்டு நடப்பார்கள் அவைகளை ஆஸ்தியே ஜீரணஸ்தியாகக் கொண்டவர்களும், வல்லமை மிகுந்தவர்களும் செய்ய வேண்டுமென்று செப்புவது சரியா? ஏளனத்திற்கன்றோ இடமுண்டாகும்.

ஆசனப் பயிற்சிகள் பலனையளித்தாலும் பராக்கிரமசாலிகளுக்குப் பயன்படாது. வீரராக விரும்புகிறவர்கள் வேறு பயிற்சிகளைத்தான் செய்யவேண்டும். அசையும் பயிற்சிகள்தான் அவர்களுக்கு உகந்தது. அவைகள்தான் ஆற்றலை மிகுத்து, அற்புதச் செயல்களுக்கு ஆதரவளிக்கும். போக போக்கியங்களையும், பூலோக இன்பங்களையும் பெற விரும்புவோர்கள் இப்பயிற்சியில்தான் ஈடுபட வேண்டும். நாட்டின் காப்பை எடுத்துக் கொண்டால், அசையும் பயிற்சிகள்தான் ஆதிக்கம் பெற முடியும்.

சேனைகளுக்குக் கொடுக்கும் பயிற்சிகளைப் பாருங்கள் சிப்பாய்கள் எவ்வளவு சுறுசுறுப்பாயிருக்க வேண்டியிருக்கிறது? நெடுந்தூரம் சுமைகளை எடுத்துக்கொண்டு நடக்கவும், ஓடவும் வேண்டியிருக்கிறது. நெடுநேரம் உழைக்க வேண்டியிருக்கிறது பள்ளங்கள் தோண்டவும், பாதைகள் போடவும் வேண்டியிருக்கிறது. மலைகளில் ஏறவும், குகைகளில் பதுங்கவும் பழகுகிறார்கள் ஓயாத உடலசைவும் ஒரு சமயம் உண்டாகிறது. இதற்கெல்லாம் அசையும் பயிற்சிகளே அவசியம்.

சக்தி என்பது அசையக்கூடியது. சிவம் என்பது அசையக்கூடாதது. 'நான் சிவனே என்று இருக்கிறேன். என் ஜோலிக்குஏன் வருகிறாய்?' என்று ஈனசுரத்தில் பரிதாபப் பார்வையில் பலர் சொல்லுவதைக் கேட்கிறோம் 'எனக்கு சக்தி இருக்கிறதாடா, காட்டுகிறேன் பார், பார்க்கிறேன் ஒரு கை என்று கர்ஜிப்பதைக் கேட்கிறோம்.

சொல்லிலேயே சூரத்தனம் ஜொலிக்கிறது சிவத்தை நாடி சவத்தைப் போல் சலனமற்றிருப்பவர்கள் பயிலும் பயிற்சிக்கும் பராக்கிரமசாலிகள் பயிலும் பயிற்சிக்கும் பாதைகள் வேறு நடராஜப்பெருமானை நாம் எடுத்துக்கொள்வோம் அவரிடம் போட்டியிட்டாள் சக்தி. அசைவற்றிருந்து அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தாமும் சக்திச் செலவினால் சாமர்த்தியங் காட்டினார்; ஜெயத்தை நாட்டினார். சக்தியென்ற மனைவியைப் பெற்ற நாம், சக்தியற்றிருந்தால் சகலமும் வியர்த்தந்தான் தவிர அலுவல்களெல்லாம் அசையும் முறையிலேயே அமைந்திருப்பதால், அவைகளை ஆக்கிவைக்கும் அவை



படம் 2

முதற் படத்தில் காட்டியபடி நின்று இவ்விதம் உட்கார்ந்து எழுந்திருந்து முதல் நிலைக்கே வரவும். இது ஒரு பூர்ண அப்யாசம். கால் தசைகள் பருத்துப் பலப்பட்டு கண்ணியமாய்க் காட்சியளிக்கும் வேகமாகவும் மெதுவாகவும் இரு விதத்திலும் செய்யலாம் ஆரம்ப அப்யாசிகள் முதலில் 10 செய்து வாரம் 5 அதிகப்படுத்தவும். மூச்சு அடக்கவேண்டியதில்லை. வாய் சுவாசங் கூடாது.